

ஐ.பி.எல்.வில்லன்!

கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI ● 05.07.2009 ● ரூ.10.00 ● 96 பக்கங்கள்



"ரீமிக்ஸ் எனக்குப் பிடிக்காது!"

- சுந்தர்.சி.பாபு

நிறம் மாறும் சிவப்பு!

- மேற்கு வங்கம்



ஆ!
ராஜேஷ்குமார்
க்ரைம் டாட் காம்
- துப்பறிய வாங்க வாசகர்களே
பரிசுகளும் உண்டு!
கல்கி
அடுத்த இதழ் (12.07.2009) முதல்...
முத்தான மூன்று தொடர்கள்
கு.ஞானசம்பந்தன்
சிரித்துக் கொண்டே ஜெயிப்போம்!
- கைகோத்து வாங்க மாணவர்களே!
ஹா... ஹா!
ஓ!
ஸ்டார்ட்... கேமரா... ஆனந்த்!
- லொகேஷன் தோறும் அயன் இயக்குநர்
ஸ்வீட்டா... ஸ்டைலா... ஸ்மார்ட்டா...
கெஸ்ஸிங் போட்டி முடிவு
அடுத்த வாரம்

நியூஸ் பாய்



சினி சிப்ஸ்

இந்தியாவில் முதன் முறையாக ரெட் ஒன் கேமராவில் முழு படத்தின் கதையையும் படம் பிடித்திருக்கிறது 'அச்சமுண்டு அச்சமுண்டு' படக்குழு. இதன் இயக்குநரான அருண் வைத்யநாதன் அமெரிக்க வாழ் தமிழர். அவர் தமிழில் இயக்கும் முதல் படம் இது.

உலகத் திரைப்பட விழாக்களில் இவருடைய பெரும்பான்மையான குறும்படங்கள் பரிசு வென்றிருக்கின்றன. இந்த வருடம் இந்தியாவிலிருந்து ஷாங்காய் ஃபிலிம் பெஸ்டிவலுக்கு அனுப்பப்பட்டுள்ள மூன்று திரைப்படங்களில் 'அச்சமுண்டு... அச்சமுண்டு...' திரைப் படமும் ஒன்று!

சத்யம் தியேட்டரின் ஒரு பிரிவான திங்க் மியூசிக்குக்கு இது இருபத்தைந்தாவது படம். நீண்ட இடைவெளிக்குப் பிறகு கார்த்திக் ராஜா இசையமைக்க, கவிஞரான ஆண்டாள் ப்ரியதர்ஷினி பாடலாசிரியராகிறார்.

பிரபல கர்நாடக இசைப் பாடகியான சௌம்யா, இப்படத்தின் மூலம் பின்னணிப் பாடகியாகியிருக்கிறார்.

''படத்தைப் பார்க்கும்போது இது நெகட்டிவ் ஃபிலிமா / டிஜிட்டல்



'ஆறுமனமே' படத்தில்...

ஃபிலிமா என்கிற சந்தேகம் எனக்கே வந்து விட்டது. ரெட் ஒன் கேமரா இனி தமிழ் சினிமாவை முன்னெடுத்துச் செல்லும். என்னுடைய தமிழ் இளைஞர்கள் தமிழ் சினிமாவை நல்ல இடத்துக்கு இட்டுச் செல்கிறார்கள் என்கிற கர்வம் எனக்கு உண்டு'' என்றார் பாலுமகேந்திரா.

குடும்பத்தில் ஒரு பையன் எப்படி இருக்கணும், எப்படி இருக்கக்கூடாது என்பதை மையமாக வைத்து உருவாகி வரும் படம்தான் 'ஆறு மனமே'. இதில் இயக்குநராக அறிமுகமாகிறார் சுதிஷ் சங்கர்.

ராஜேஷ்-மீரா கிருஷ்ணனின் புதல்வர்களாக ஸ்ரீமனும், அறிமுகம் தீபக்கும் நடிக்கிறார்கள். ''மனசுக்குப் பிடித்திருந்தால் அறிமுகங்களைக் கூட பிரபலங்களாக மாற்றும் மனசுக்காரங்கதான் தமிழ் ரசிகர்கள். அந்த வகையில் இந்தப் படத்துக்கும் மக்கள் ஆதரவு கிடைக்கும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு உண்டு'' என நெகிழ்கிறார் இயக்குநர்.

சின்னச்சாமி, பெரியச்சாமி என இரண்டு வேஷம் கட்டுகிறார் கஞ்சா கருப்பு. நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு மற்றொரு தாலாட்டுப் பாடலைப் போட்டிருக்கிறார் ஸ்ரீகாந்த் தேவா. கார்த்திக்கின் இனிமையான குரலில் 'ஆரிரரோ.. ஆராரோ' பாடல் புண்பட்டவர்களின் மனசுக்கு ஆறுதல் அளிக்கும் தாலாட்டாக அமையலாம்.

தயாரிப்பாளரின் மகனை மலையாளத்தில் அறிமுகப்படுத்தாமல் தமிழில் ஏன் அறிமுகப்படுத்துகிறீர்கள் என சேரன் கேட்டதற்கு, ''மலையாளத்தின் தாய்மொழி தமிழ். தமிழில்தான் புதுமுகங்களை ஏற்றுக்கொள்கிற பக்குவம் இருக்கிறது. ஆகவேதான் பயமின்றி படத்தைத் தயாரிக்கிறோம்'' என்றாராம் தயாரிப்பாளர்.

படத்தைப் பார்த்த சென்சார் அதிகாரிகள், ''இப்படியொரு படம் பார்த்து ரொம்ப நாளாச்சுங்க'' என்று இயக்குநரை வாயார வாழ்த்தியதில் படத்தின் மொத்த யூனிட்டுமே பரவசமடைந்திருக்கிறது.

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)

தொலைநகல் : **044 - 4343 8899**

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்கள் :
info@kalkiweekly.com
கல்கி இண்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ.3,800/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

தொன்ம வன்மம் எனும் வெற்றிப் பேரொளி கவிதை சிறிய விதையில் மறைந்திருக்கும் பெரிய விருட்சம்.

- அ.சு.கிருஷ்ணன், புதுச்சேரி -4

மல்லிகைப்பூ அட்ராக்ஷன்னு பாவனாவின் சூப்பரான படத்தைப் போட்டுத் தொலைச்சிட்டீர். ஐஸ்க்ரீம் பாவனா என் மனசை விட்டுப் 'போவனா'ங்கிறாங்க.

- எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

தீவிரவாதத்தைக் குழைத்துத் தீட்டப் பட்டு தீப்பிழம்பாய்க் கனலுமிழும் வெற்றிப் பேரொளியின் 'தொன்ம வன்மம்' கவிதையல்ல, துயர காவியம்!

- எஸ்.ஏ.கேசவன், கு.கழுகாசலபுரம்

குடிப்பழக்கத்திலிருந்து மக்கள் விடு பட கஸ்தூர்பா காந்தி நினைவு குடிநோய் போதை நீக்கும் சிகிச்சை மையம், எவ் வளவோ குடும்பங்களின் குடும்ப விளக்கை ஏற்றி இருக்கிறது என்பது நிதர்சனமான உண்மை.

- வி.ஜி.சத்தியநாராயணன், சென்னை - 61

திருவாரூர் - நாகை மாவட்ட ஸ்பெஷல் - IIன் பல அரிய தகவல்களைப் படித்தபோது கண்கள் பனித்தன; இதயம் இனித்தது. சும்மா சொல்லக்கூடாது ஸ்வீட்டா... ஸ்டைலா... ஸ்மார்ட்டாகத் தான் இருந்தது.

- எஸ்.ராமசாமி, ஈரோடு

பா.ஜ.க. மீண்டும் மக்கள் மத்தியில் தலைதூக்கி, ஆட்சியைப் பிடிக்க அருமை யான அறிவுரைகளை தலையங்கத்தில் கிளிப்பிள்ளைக்குச் சொல்வது போல் சொல்லிக் கொடுத்துள்ளீர்கள்... சபாஷ்!

-புலவர் எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம்

திருவாரூர் சோமசுந்தரம் பூங்காவில் எழுத்தாளர்கள் சந்திப்பு நிகழ்வுகள் செந் தேனாக இனித்தன.

- லிங்கேஷ் பிரபா, மேலகிருஷ்ணன் புதூர்

மன்மோகன் சிங்குக்கு மந்திரி பதவி

தெவிட்டாத ஸ்பெஷல்ஸ்





கள் விஷயத்தில் கருணாநிதிக்கு சட்டி நிறைய புட்டு கொடுக்க கல்கி வைத்த குட்டு செய்திகள் வெகு சுவாரஸ்யம்!

- ஏ.பி.எஸ்.ரவீந்திரன், நாகர்கோவில்

தெவிட்டாத தேரழகு இணைப்பை நாள் முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம்போல கொள்ளை அழகு. கோயிலுக்கே திருஷ்டி சுத்திப் போடக் கிளம்பலாம்னு தோணுது!

- சரவணன், திருவாரூர்

''சுனாமி எஸ்.எம்.எஸ்.ஸில்'' இடம்

வட்டமேஜை

பெற்ற நான்கு தகவல்களும் நறுக்கென்று இருந்தன!

- அருள்குமரன், முனியங்குறிச்சி

திருவாரூர் நாகை மாவட்ட ஸ்பெஷலுக்குப் பொருத்தமாக மகா பெரியவரின் அருள்வாக்கிலும் தியாகராஜர் பற்றிய அவர் அருளுரையை வெளியிட்டு சிறப்பு செய்துவிட்டீர்கள்!

- பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு

வேதாரண்யம், கோடியக்கரை ஆகிய பகுதிகளில் காணவேண்டிய இடங்களைப் பற்றிய 'உப்பு தேசத்தில் ஓர் உலா!' ஒரு சுற்றுலா சென்று வந்த நிறைவை உண்டாக்கிவிட்டது!

- சு.இந்துமதி, நெய்வேலி

வெண்மணி களங்கம் விஞ்ஞான நாகரிக முன்னேற்றத்திலும் மாறாத வடுவானது. உங்கள் விசிட் 'மனிதம் வளர்ப்போம்' என போதித்தது.

- மல்லிகா அன்பழகன், சென்னை - 78



கார்ட்டூன்கள் இரண்டுமே சூப்பர். வரைந்த கைகளுக்கு வைரத்தில் மோதிரம் போடணும்!

- அ.முரளிதரன், மதுரை - 3

'உப்புக்காற்று' சிறுகதை நெகிழ்ச்சியூட்டி நெஞ்சைக் கனக்க வைத்தது.

- 'வானவில்' மூர்த்தி, கடலூர்

2011ல் தமிழகத்தில் பா.ம.க. ஆட்சி என்ற கோஷத்தோடு வலம்வந்த டாக்டர் ராமதாஸ் இப்போது என்னதான் தம்மைச் சுயபரிசோதனை செய்தாலும் அதெல்லாம் கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்வது போன்றதே!

- பி.ஜெயபிரகாஷ், சர்க்கார்பதி

தோனியின் போக்கில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை விமர்சித்திருக்கும் ச.ந.கண்ணன், 'இப்போது கிடைத்திருக்கும் உபரி ஓய்வு நாட்களில் நிறைய விளம்பரப் படங்களில் நடிக்க அபார வாய்ப்பு!' என்று கட்டுரையை முடித்திருப்பது சரியான கிண்டல்!

-என்.பாலகிருஷ்ணன், மதுரை

பிள்ளையின் கார்ட்டூன்கள் இரண்டும் நச். சுருங்கச் சொல்லி நிறைய விளங்கவைத்தன.

- என்.காளிதாஸ், சிதம்பரம்

சிட்டி யூனியன் வங்கியின் வளர்ச்சி வியக்கவைக்கிறது. அதன் ஆன்மிகப் பணி குறிப்பிடத்தக்கது.

- ஜே.துரைராஜ், சென்னை

எல்லோருக்கும் பிடிச்சவங்களா இருக்கறது ஒரு கலை. அந்தக் கலையைக் கத்துக்கறதுக்கு காசு கொடுத்து க்ளாஸ் அட்டெண்ட் பண்றவங்களும் உண்டு. "க்ளாஸ் எல்லாம் தேவையில்லை. இவற்றைக் கடைப்பிடித்தாலே போதும். ஈஸியா மத்தவங்க மனசுக்குள் நாம ஜம்முன்னு உட்கார்ந்துடலாம்" என்கின்றனர் சின்னத்திரை ஜோடி சேத்தன் - தேவதர்ஷினி.

* பொய்யா பேசிப் புகழக் கூடாது. ஓவரா ஆக்டிங் போட்டா ஒரு நாள் விஷயம் தெரிஞ்சு போயிடும்!

* உண்மையா இருக்கணும். உண்மையா இருக்கிறோம்னு தெரிஞ்சாலே மத்தவங்களுக்கு நம்மை ரொம்பப் பிடிக்கும்.

* நமக்குப் பிடிச்சவங்களுக்கு கிஃப்ட் கொடுக்கறதைவிட, அவங்க கஷ்டப்படறப்ப ஆறுதலா ரெண்டு வார்த்தை பேசினா போதும். அதை ஜென்மத்துக்கும் மறக்க மாட்டாங்க.

* புண்படுத்தும்படியான வார்த்தைகளைப் பயன்படுத்தாதீங்க. அப்படி பேசினா ஃப்ரண்ட்ஷிப் கட் ஆகிவிடும்.

* சிரிச்ச முகத்தோட இருங்க. அப்படி இருந்தா எல்லோருக்கும், குறிப்பா பொண்ணுங்களுக்கு ரொம்பப் பிடிக்கும்.

* யாரோ ஒருத்தர் அனுப்பின எஸ்.எம்.எஸ்.ஸை நூறு பேருக்கு அனுப்பறதை நிறுத்துங்க. நீங்களா யோசிச்சு ஒவ்வொருத்தருக்கும் அனுப்புங்க. எல்லோருக்கும் உங்களைப் பிடிக்கும்.

* நல்ல நகைச்சுவை உணர்வு இருக்கணும். ஜோக் சொல்றேன்னு ஒரே ஜோக்கை ஓராயிரம் தடவை சொல்லி மொக்க போடறதை நிறுத்தணும்.

* நல்லா டிரெஸ் பண்ணா நாலு பேரு திரும்பிப் பார்ப்பாங்க. ஆனா இம்ப்ரஸ் ஆகணும்னா, டிரஸ்ஸையும் தாண்டி, நம்ம கேரக்டர் மத்தவங்களுக்குப் பிடிக்கணும்.

* அடுத்தவங்களை அட்ராக்ட் பண்ண நம்மை முழுசா மாத்திக்க வேண்டாம். சரியா புரிஞ்சுக்கிட்டா போதும்!

* நாம பில்டப் பண்ணாம யதார்த்தமா இருந்தா போதும்.

* நெகட்டிவ் விஷயங்களை மூடி மறைக்கக் கூடாது.

* வாழ்த்துகள், ஆல் தி பெஸ்ட், வெரிகுட் போன்ற வார்த்தைகளை அடிக்கடி பயன்படுத்தலாம்.

* மனுஷனா பிறந்தா ஏதாவது லட்சியம் இருக்கணும். லட்சியம் இல்லாதவங்களுக்கு இம்ப்ரஸ் பண்ணத் தெரியாது.

* நாம கொடுக்கற கிஃப்ட் மத்தவங்களுக்குப் பயனுள்ளதா, மதிப்பு மிக்கதா இம்ப்ரஸ் பண்ற மாதிரி இருக்கணும்.

– **ராகவ்குமார்**


இம்ப்ரஸ் 14
ஓவர் ஆக்டிங்...
ஒத்து வராது..!

நீங்கள் கேட்டவை

● வசீகரன், சென்னை-18 ❑

? இனி ஈழத் தமிழர்கள் தனி நாடு என்ன, தனி மாநிலம், தனி மாவட்டம் மட்டுமல்ல... தனி வீடுகூட கேட்க முடியாது... எப்படி நம்ம சோனியா அன்னையின் ராஜதந்திரம்?

! வசீகரனின் வஞ்சப் புகழ்ச்சி பொய்யாகிப் போகுமாறு எஸ்.எம்.கிருஷ்ணாவும், மன்மோகன் சிங்கும் நடந்து கொள்ளட்டும். ''தேவைப்பட்டால் ஆன்டனியைத் துணைக்கு அழைப்போம்'' என்று கோடி காண்பிக்கட்டும்!

● கு.அருணாசலம், தென்காசி

? சுயநிதி பொறியியல் கல்லூரிகளின் கட்டாய நன்கொடை வசூலைக் கண்டித்து, ''அவ்வாறு வசூலித்தால் முதலாண்டு மாணவர் சேர்க்கை ரத்து செய்யப்படும்'' என்று ஆண்டுதோறும் தமிழக அரசு எச்சரிக்கை விடுக்கிறதே?

! கல்வியை வியாபாரமாக்க அனுமதித்த பிறகு, இதுபோன்ற அரசின் அறிக்கைகள், மேலும் கறுப்புப் பணம் உருவாகத்தான் உதவும். வேறு பலன் இராது. ஜாதி அடிப்படையில் அன்றி, பொருளாதார வசதியற்றவர்களுக்கு அரசு, தரமான கல்லூரிகளைத் தொடங்கி, நியாயமான கட்டணம் வசூலிப்பது மட்டுமே பலன் தரும்.

● பி.இராஜேந்திரன்,
லோயர் அணைக்கட்டு

? தலித்களுடன் ராகுல் கலந்து பேசுவது ஒரு நாடகம் என்று கூறிய மாயாவதி, மகாத்மா காந்தி அந்த நாடகத்தைத் தமது வாழ்நாள் முழுதும் நடத்தியதாகச் சொல்கிறாரே?

! மாயா(வின்) உலகில் நிஜம் எல்லாம் நாடகமாகத்தானே தோன்றும்!

● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி


? ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை விரைந்து முடித்ததற்காக ஸ்டாலினுக்குத் தங்கப் பதக்கமும் அதிகாரிகளுக்குப் பரிசும் அளித்துள்ளாரே முதல்வர்?

! அதை வரவேற்கும்போதே, கடமையைச் செய்யாதவர்களையும் தவறு செய்வோரையும் குற்றம் இழைப்போரையும் எந்த அளவுக்கு முதல்வர் தண்டிக்கிறார் என்றும் யோசிக்க வேண்டியிருக்கிறது.

● பி.ஜெயபிரகாஷ், சர்க்கார்பதி

? தலைமைச் செயலகம் கட்டுவதைக்

அ.தி.மு.க.வில் அடுத்த தலைமுறை?



❖ இளைய...

காட்டிலும் ஐந்தாம் ஜார்ஜ் சிலையை அகற்றுவதுதான் முக்கிய மான பணி என்று உலகத் தமிழ்ப் பேரவைத் தலைவர் சனார்த்தனம் சொல்கிறாரே?

! வரலாற்றை நிராகரிக்கவோ, அழிக்கவோ முடியாது என்பதால் இது வீண் வேலை. ஆங்கிலேயர் ஆதிக்கம் இங்கு நிலவியது உண்மை. அதை ஏற்ப தால் நாம் இன்று அடிமைகளாகிவிட மாட்டோம். வரலாற்றிலிருந்து பாடம் கற்போம்.

● அ.ஷண்முகசுந்தரம், பெங்களூர்

? காங்கிரசில் ராகுல், பா.ஜ.க.வில் சுஷ்மா, தி.மு.க.வில் ஸ்டாலின் - என்று இளைஞர்கள் எழுச்சி பெறும் போது, அ.தி.மு.க.வில் அடுத்த தலைமைக்கான அடையாளம் கூட இல்லையே?

! யார் அங்கே! புரட்சித் தலைவிக்கு வயதாகிவிட்டது என்று குத்திக் காட்டும் பெங்களூர் ஷண்முகசுந்தரத்தைக் கொண்டு போய்...



✱ ....உதயம்!



✱ ...தலைமுறை...

● ஆர்.அஜிதா, கம்பம்

? காஷ்மீருக்கு விசேஷ தூதர் நியமிக்கும் கேள்விக்கே இடமில்லை என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா அறிவித்துள்ளாரே?

! பூனைக்குத் தோழனாக விளங்குபவர், பாலுக்கும் காவலனாகத் தம்மை அறிவித் துக் கொள்கிறார்.

● ஆர்.ராஜதுரை, சீர்காழி

? "காக்கை வடிவில் வந்த விநாயகர், அகத்தியரின் கமண்டலத்திலிருந்து சோழ நாட்டுக்குள் காவேரி பெருகச் செய்தார். அதுபோல், சேது நாட்டை வளமாக்க, காவேரியிலிருந்து கருணாநிதி தண்ணீரைக் கொண்டு வந்துள்ளார். அகத்தியர் பற்றிய செய்தியோ புராணம்; கற்பனைக் கதை.



● மாயா நாடகம்! ● திசைதிருப்பும் கோஷம்!

● டபுள் கேம்! ● முள்ளில்லா கனவு!

ஆனால் இப்போது செயல்படும் திட்டம் நிஜம்'' என மு.க.ஸ்டாலின் பேசியுள்ளாரே?

! கருணாநிதியை காக்கையுடனும் பிள்ளையாருடனும் ஒப்பிடுதல் ஒரு பக்கமிருக்கட்டும்... வானம் பொய்த்தால் காவேரியில் கர்நாடகா தண்ணீர் விடப் போவதில்லை. சோழ நாடோ, சேது நாடோ வளம்பெறப் போவதுமில்லை. அதற்குக் கருணாநிதி பகீரதனாக மாறினால் நல்லது.

● **ஜே.வி.ஜே. கண்ணன், திருச்சி-8** ★

? நமது நாட்டின் பண வீக்க விகிதம் மைனஸ் 1.61 சதவிகிதமாகக் குறைந்துள்ள போதிலும் உணவுப் பொருட்கள், காய்-கனிகள் விலை குறையவில்லையே - மாறாக இவை உயர்ந்துள்ளனவே?

! மொத்த வியாபார விலைக் குறியீட்டை அடிப்படையாகக் கொண்டுதான் விலைவாசி உயர்வு அல்லது குறைவு விகிதாசாரம் நிர்ணயிக்கப்படுகிறது. இதில் உணவுப் பொருட்கள் மட்டுமின்றி, வீட்டு உபயோகப் பொருட்கள், பெட்ரோல் போன்றவையும் அடங்கும். இத்தகைய பொருட்கள் விலை இறங்குவதால், பண வீக்க விகிதம் குறைகிறது. ஆனாலும் உணவுப் பண்டங்களின் விலை குறையவில்லை.

● **எஸ்.பிரவீண் சங்கர், சென்னை-73**

? மீண்டும் மாநில சுயாட்சி பெறப் போராடுவாராமே கருணாநிதி?

! மாநில அரசுக்கு இப்போது உள்ள அதிகாரங்களே 97 சதவிகிதம் சுயாட்சி போன்றதுதான். இதிலே மக்களுக்கு நல்லது செய்ய முடியாதவர்கள், நூறு சதவிகிதம் சுயாட்சி தரப்பட்டாலும் செய்ய முடியாது. ஆக, கருணாநிதியின் கோஷம், மக்களின் அதிருப்தியைத் திசைதிருப்பும் காரியமே.

● **வெ.ராம்குமார், வேலூர்**

? ''ஆந்திராவை விட தமிழக அரசியலில் ஈடுபட்டிருந்தால் இந்நேரம் எம்.எல்.ஏ. ஆகியிருப்பேன்'' என்கிறாரே ரோஜா?

! அத்தைக்கு மீசை முளைச்சா சித்தப்பா; ரோஜா செடியில் மல்லிகை பூத்தா செண்பகம்!


❑ ரூ. 150 பரிசு பெறுபவர்: வசீகரன், சென்னை-18

★ ரூ.75 பரிசு பெறுபவர்: ஜே.வி.ஜே. கண்ணன், திருச்சி-8

● **எஸ்.ராமசாமி, ஈரோடு**

? கச்சத் தீவை இலங்கைக்குச் சொந்தமாகக் கொடுத்தபின் இலங்கை அரசு அத்தீவில் இதைச் செய்யக்கூடாது, அதைச் செய்யக்கூடாது என்று நாம் சொல்வது சரியா?

! சில நிபந்தனைகளுக்கு உட்பட்டே கச்சத் தீவு இலங்கைக்குத் தரப்பட்டுள்ளது. அந்த நிபந்தனைகளை மீறும்போதோ அல்லது இந்தியாவின் இறையாண்மைக்கு இடையூறு ஏற்படும் என்று தோன்றுகிற போதோ, ஆட்சேபணைக் குரல் எழுப்புவது சரியே. ○



10F 17B 34C
5E 12K 7A 22
"பஸ்ஸிலே லேடீஸ் யாராவது நின்னுக்கிட்டு வந்தா எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கும்டா"
"அப்ப என்ன செய்வே?"
"கண்ணை இறுக்கமா மூடிக்குவேன்"
கஷ்டம்... கஷ்டம்!

வண்ணங்களால்






"நான் முறையா ஓவியம் கத்துக் கலை. இயற்கையைப் பார்த்து வரைய ஆரம்பிச்சேன். கோவை ஓவியர் சின்ன ராஜ்தான் எனக்கு வழிகாட்டியா இருந்தார். நானொரு வண்ண விரும்பி. ஓவியமா யிருக்கட்டும் டிரஸ்ஸாயிருக்கட்டும் பளிச் சுன்னு இருக்கணும். கலர்ஃபுல்லாதான் போடுவேன். பொழுதுபோக்குக்காக வரை யல. என்னோட பொழுதை வண்ணங் களால் தவமிருக்கும் கணங்களாக மாத்திக் கத்தான் வரையறேன். பெண்தான் என் ஓவியங்களின் இயக்க சக்தி. வாழ்கைக் கான அத்தியாவசியத் தேவைக்கு இந்தக் கலையை நான் நம்பியிருக்கலை.

ஒரு தவம்!



• சிவக்குமார்






அதனால இந்தக் கலை குடும்பத்தைச் சங்கடப்படுத்தல. பத்து வருடமா வரைய றேன். என்னோட மனைவி முதல் ரசிகையாயிருந்து இரவு பன்னிரண்டு மணிக்கு வரைந்து முடித்தாலும்கூட அதுவரை கூடவே இருப்பா. ஓவியம் என் குடும்ப உறுப்பினர் மாதிரி'' என்கிறார் குளிர்ப்பிரதேச (ஊட்டி) ஓவியர் சிவக்குமார்.

- அமிர்தா



கல்கி



2009 ஜூலை 5
விரோதி ஆனி 21
மலர் : 67
இதழ் : 49

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

துள்ளும் மாவோக்கள்; தூண்டும் மம்தா!

"சிங்குர், நந்திகிராம் விவகாரங்களின்போது நாங்கள் உங்களுக்குக் கொடுத்த ஆதரவை மறவாமல், இப்போது லால்கர் போராட்டத்தில் எங்களுக்கு ஆதரவு கொடுங்கள்" - மாவோயிஸ்டுகள் மம்தா பானர்ஜியிடம் வெளிப்படையாக வைத்துள்ள கோரிக்கை இது!


மேற்கு வங்க லால்கர் வன்முறை விவகாரம் அபாயகரமான அரசியல் ஆதாயப் பிடியில் சிக்கியுள்ளது என்பதற்கு, இதைக் காட்டிலும் வேறு சாட்சியே தேவையில்லை!

மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ், மேற்கு வங்க, கம்யூனிஸ்ட் அரசுக்கு இடர்ப்பாடும் தர்மசங்கடமும் ஏற்படுத்துவதற்காகவே திட்டம்போட்டு இயங்கி வருகிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் ஓர் அங்கமாக இருந்த மாவோயிஸ்ட் பிரிவு, இன்று மேற்கு வங்க கம்யூனிஸ்ட் அரசையே எதிர்த்து, வன்முறைப் போராட்டங்களில் ஈடுபடுகிறபோது, மம்தாவே பல விதங்களில் அதைத் தூண்டிவிடத் தயாராயிருக்கிறார்!

மத்திய அரசோ, மேற்கு வங்க அரசு உதவி கேட்கிறபோது, "துணை ராணுவத்தை அனுப்புவதற்கில்லை!" என்று முதலில் மறுக்கிறது; பின்னர் தாமதமாக அனுப்புகிறது. இதற்குள் பிரச்னை தீவிரமடைந்து அபாயகரமான எல்லையை எட்ட, மாவோயிஸ்ட் இயக்கத்தை மத்திய அரசு தடை செய்கிறது!

தடையை மேற்கு வங்க அரசு வரவேற்றாலும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை எதிர்க்கிறது! "பழங்குடியினருக்காகப் பாடுபடும் மாவோ இயக்கத்தைத் தடை செய்யலாகாது; அரசியல் ரீதியான,





நிர்வாக ரீதியான அணுகுமுறை தேவை" என்கிறார் பிரகாஷ் காரத்.


காங்கிரஸ், திரிணமுல், கம்யூனிஸ்ட் என்று அனைத்துக் கட்சிகளுமே அரசியல் நோக்கில் இப்பிரச்னையை அணுகினால், அது எவ்வாறு தீரும்?

ஆயுதங்களை ஏந்தி, கொலைக்கு அஞ்சாமல் வளைய வரும் ஒரு பிரிவினரிடம் எப்படி சுமுகமாக அரசியல் பேச்சுவார்த்தை நடத்துவது! மேற்கு வங்கத்தில் சில பகுதிகளைக் கைப்பற்றி, அராஜகம் நிகழ்த்திவரும் மாவோ இயக்கத்துக்கு அனுதாபம் காட்டுவது அபாயத்தில்தான் முடியும்.

லால்கர் மற்றும் அதையொட்டிய மேற்கு வங்க பகுதிகளில் உள்ள பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுவதற்காகவே தாங்கள் போராடுவதாக மாவோயிஸ்டுகள் வாதம் புரிகிறார்கள். ஆனால், மாவோயிஸ்டுகள் ஆயுதம் ஏந்தி பலரைச் சுட்டு வீழ்த்துவதன் மூலம் பழங்குடியினர் வாழ்க்கை மேம்பட்டுவிடாது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினராயினும் சரி, பழங்குடி மக்களாயினும் சரி, அவர்களுக்கென்று ஒரு வாழ்க்கை முறையும் கலாசாரமும் இருக்கவே செய்கின்றன. இம்மக்களிடையே நிகழ்த்தப்படும் சீர்திருத்தத் திட்டங்களும் மேம்பாட்டுத் திட்டங்களும் அந்தக் கலாசாரத்தைச் சிதைக்காத வகையிலும் அம்மக்கள் இலகுவாக ஏற்று, பயனுறும் வகையிலும்தான் வகுக்கப்படவேண்டும். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இவர்கள் கடைப்பிடித்து வரும் ஒரு வாழ்க்கை முறையை இரவோடு இரவாக மாற்றிவிட முடியாது.

மத்திய அரசு வன்முறைக்கு இடம் தராமல் ஒடுக்கும்போதே, பழங்குடி மக்களின் பிரதிநிதிகளை மட்டுமின்றி, அவர்களுக்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் அனைத்து அரசியல் தலைவர்களையும் அழைத்து ஆலோசனை நடத்தி, கல்வி உள்ளிட்ட நல்ல முன்னேற்றத் திட்டங்களை அம்மக்களுக்காக வகுத்து, அமுல்படுத்துவது நல்லது. இதில் தாமதம் செய்வது, வன்முறை வளரவே உதவும். ●



பிடிச்ச விஷயம்!

◆ ஐரேனிபுரம் பால்ராசய்யா ◆

சாயங்கால வேளையில் தனது தோழி அம்பிகாவைப் பார்க்க, அவள் வீட்டுக்குச் சென்றாள் அனு. வீட்டுக்குள் அவளது கணவர் காட்டுக் கத்தலாய்க் கத்திக் கொண்டிருந்தார். அழைப்பு மணியை அடிப்பதா வேண்டாமா எனத் தயங்கி பின்பு அடித்தாள்.

கதவைத் திறந்து வெளியே வந்த அவளது கணவர், ''வாங்க'' என்று அழைத்துவிட்டு வெளியேறிப் போனார். அம்பிகாவின் முகத்தில் எந்தவித வருத்தமுமின்றி இயல்பாகவே இருந்தாள்.

''என்னடி உன் புருஷன் இந்தத் திட்டு திட்டுறாரு. கேட்டுக்கிட்டு சும்மா நிக்கற!'' அனு ஆதங்கத்துடன் கேட்டாள்.

''எப்பவுமே அவர் சட்டை பாக்கெட்டுலயிருந்து செலவுக்குப் பணத்தை எடுத்துட்டுச் சொல்லிடுவேன். இன்னைக்குச் சொல்ல மறந்துட்டேன். பாவம் அவர் பாக்கெட்டுல பணமிருக்குன்னு நெனச்சு ஃப்ரண்ட்ஸோட ஹோட்டலுக்குப் போய் ஏமாந்துட்டாராம்!'' தனது கணவரைப் பற்றி ஆதரவாகப் பேசிய அவளை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

''அதுக்காக இப்படியா கண்டபடி திட்டுறது. உனக்கு வருத்தமே இல்லையா?''

''நான் எதுக்கு வருத்தப்படணும், அவர்தான் ரொம்ப வருத்தப்படுவாரு. என்னை அதிகமா திட்டிட்டோமேன்னு, வர்றப்போ மல்லிகைப் பூவோட வந்து என்னைச் சமாதானப்படுத்துவார். எனக்கு அவர்கிட்ட ரொம்பப் பிடிச்ச விஷயமே அதுதான்'' என்றபோது அனு அசந்து போனாள். ●

70 முதல் 7 வரை - II

சிவசங்கரி எழுதிய ''இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு'' நூலின் வெளியீட்டு விழாவுக்குச் சென்றிருந்தேன். இது கடைசி நான்காவது தொகுப்பு. வடஇந்திய மொழிகள் பற்றியது. அன்று பேசிய பலரும் பதினாறு ஆண்டுகள் சிருஷ்டி இலக்கியத்தை சிவசங்கரி ஒதுக்கி வைத்துவிட்டதை ''தியாகம்'' என்று குறிப்பிட்டுப் பாராட்டினார்கள். எனக்கு அப்படித் தோன்றவில்லை. நாவல்கள், சிறுகதைகள் எழுத நூற்றுக் கணக்கான எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். இந்தியப் பன்மொழி இலக்கியங்கள் பற்றிய இது போன்ற தொகுப்பைத் தயாரிக்க சிவசங்கரியால் மட்டுமே முடியும். நான்கு வாழ்நாள் சாதனைகளாக நான்கு தொகுப்புகள் நமக்குக் கிடைத்துள்ளன. கங்கை புத்தக நிலையம் (தி.நகர், சென்னை-17) வெளியிட்டுள்ள இந்தப் புத்தகங்களில் ஒரே ஒரு குறை, அதன் நீள அகலங்கள். புத்தக அலமாரியில் அடங்காமல் வெளியே துருத்திக் கொண்டு நிற்கிறது! இந்த நான்கு புத்தகங்களையுமே பல்கலைக்கழகத்தின் அனுமதி பெற்ற ஆய்வு முயற்சிகளாக ஏற்றுக்கொண்டு சென்னை பல்கலைக்கழகம், சிவசங்கரிக்கு ஒரு டாக்டர் பட்டமாவது வழங்கலாம். கௌரவ டாக்டர் பட்டம் அல்ல; அசல் டாக்டர் பட்டம். ஆனால் நாம் வாழ்வது இந்தியா ஆனதால் அப்படி நடக்குமா என்பது சந்தேகமே.

சிவசங்கரியை எழுத்தாளராக அறிமுகப்படுத்திய பெருமை கல்கி பத்திரிகைக்கு உண்டு. ஒரு நாள் சதாசிவம், காரியாலயத்தில் என் அறைக்கு வந்து, ''சூரி வந்திருந்தார்; அவர் பெண் கதை எழுதியிருக்காளாம்; கொடுத்துவிட்டுப் போனார்; தேறுமா பாரேன்'' என்று கூறி ஒரு கனமான உறையை மேஜை மேல் வைத்து விட்டுப் போனார். ''சூரி'' என்று அழைக்கப் பட்ட ஆடிட்டர் சூரியநாராயணன், ''சூரி



* 'கசி' சுப்ரமணியம்

* பகீரதன்

''எத்தனையோ எழுத்தாளர்களுக்கு 'கல்கி' முதல்படி கொடுத்திருக்கிறது

கல்கி ராஜேந்திரன்

அண்டு கம்பெனி''யை நிறுவியவர். அந்த நிறுவனம் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக, கல்கி காரியாலயத்தின் கணக்குகளை 'ஆடிட்' செய்து வருகிறது. ''சூரியின் மகள் என்பதற்காகக் கதையைப் பிரசுரித்து விடக்கூடாது'' என்ற தீர்மானத்துடனேயே படிக்க ஆரம்பித்தேன். முடித்த பிறகு, ''இதைப் பிரசுரிப்பது சூரிக்காகவும் இல்லை; சிவசங்கரிக்காகவும் இல்லை சிறந்த கதைகளை கல்கியில் எதிர்பார்க்கும் வாசகர்களுக்காகத்தான்'' என்ற முடிவுக்கு வந்தேன்.

இவ்வாறு எத்தனையோ எழுத்தாளர்களுக்கு கல்கி முதல் படி அமைத்துக் கொடுத்திருக்கிறது. அதன் பிறகு அவர்கள் தங்கள் ஆற்றலாலும் உழைப்பினாலும்தான் மேற்கொண்டு வெற்றிப் படிகளை அமைத்து உயர்கிறார்கள்.

முதன்முதலாக அறிவிக்கப்பட்ட அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர் ''சுகி'' சுப்பிரமணியம். ''சுகி'' என்ற புனைபெயரே சுப்பிரமணியத்தையும் ('கல்கி') கிருஷ்ணமூர்த்தியையும் குறிக்கும். நிறைய சிறுகதைகளும் தாம் பணியாற்றிய அகில இந்திய ரேடியோவுக்காக ஏராள ரேடியோ நாடகங்களையும் எழுதியிருக்கிறார். அவரிடம் ஏதோ ஒரு காரியமாக சதாசிவம் என்னை அனுப்பி வைத்தார். மயிலை, ஆதம் தெருவில் ஒரு பழங்கால வீட்டில் குடியிருந்தார் ''சுகி''. அவருடன் நான் பேசிக் கொண்டிருந்த போது, கொல்லைப்புறத்திலிருந்து ஒரு புயல் தோன்றி, முன்னேறி, முற்றத்தில் குதித்து, ஒரு துள்ளல் துள்ளி உயர்ந்து, வாசல் பக்கம் விரைந்தது. ''டேய்!'' என்ற ''சுகி''யின் அதட்டலான குரல், புயலாகப் பாய்ந்தோடிய சிறுவனைப் பின் தொடர்ந்தது. அதன் பிறகு என்னைப் பார்த்து, ''சரியான வாலு!'' என்று மகனை வர்ணித்தார் ''சுகி''.

அந்தப் புயல் பயல்தான் இன்று, தமிழுணர்வும் இறையுணர்வும் இணைய, சிரிப்பும் சிந்தனையும் இழைய தமிழ் கூறும் நல்லுலகெங்கும் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வரும் சுகிசிவம். அவருடைய

பேனா மன்னர்கள்! 12

✽ ராஜா பாதர்



...தன் பின் அவர்கள் தங்கள் ஆற்றலால் உயர்ந்திருக்கிறார்கள்!"

இயற்பெயரே சதாசிவம்தான். "சுகி", சதாசிவம் அவர்களிடமும் கொண்டிருந்த பெரு மதிப்பு, அவருடைய கடைசி மகனின் பெயராக மலர்ந்தது. சில மாதங்களுக்கு முன் சுகி சிவம் அவர்களை நான் சந்தித்தபோது, "என்னை எழுதச் சொல்லி ஊக்குவித்த அன்பர் ராஜேந்திரனுக்கு" என்று எழுதிக் கையெழுத்திட்டு தமது நூல் ஒன்றைப் பரிசளித்தார். 'தமது முதல் கட்டுரைத் தொடரைக் கல்கியில் எழுதிய பிறகு, எத்தனை நூல்களை எழுதிக் குவித்து விட்டார்' என்று வியந்து போகிறேன்.



"மலர் கட்டுரைதானே..? எழுதிக்கோ!"

கல்கி காரியாலயத்தில் நான் அடியெடுத்து வைத்தபோது, பத்திரிகைத் துறை சம்பந்தமாய் பல விஷயங்களை எனக்குச் சொல்லிக் கொடுத்தவர் பகீரதன். "இவருகிட்ட எப்படி கதை எழுதணும்கிறதை மட்டும் கத்துக்காதே, தம்பி!" என்று என்னை எச்சரித்தார் ஃபோர்மேன் ராஜாபாதர். பகீரதன் சிரித்தார். சிரிப்புக்கும் எச்சரிக்கைக்கும் காரணம் இருந்தது. பகீரதன் தொடர்கதை எழுதுகிற விதமே அலாதி! அச்சில் அரைப் பக்கத்தில் அடங்குகிற மாதிரி அந்த வார அத்தியாயத்தை வீட்டில் எழுதி எடுத்துக் கொண்டு வருவார். "இது எப்படி பத்தும்?" என்பார் அச்சகத் தலைவர் ராஜாபாதர். "பத்த வைத்தால் பத்தும்; கம்போஸ் செய்து கொண்டா" என்பார் பகீரதன். அச்சுக் கோத்து புரூஃப் வந்ததும் ஒவ்வொரு வாக்கியத்தின் இறுதியிலும் தொடங்கி, மேலும் கீழும் இரு பக்கங்களிலுமாக கோடுகள் இழுத்து, ஒவ்வொரு கோட்டின் முடிவிலும் புதிதாகச் சில வாக்கியங்களைச் சேர்ப்பார் பகீரதன். இது சுமார் இரண்டு மணி நேரம் நடக்கும். முடிவில் பார்த்தால் ஏதோ வாணவேடிக்கை படம் வரைந்தது போலிருக்கும்! "புஸ்வாணம் பத்த வைச்சுட்டியா?" என்று கேட்டு, புரூஃபைத் திரும்ப பிரஸ்ஸுக்குக் கொண்டு போவார் ராஜாபாதர். புதிதாக எழுதப்பட்ட வாக்கியங்களையெல்லாம் அச்சுக்கோத்து ஆங்காங்கே சேர்த்த பிறகு பார்த்தால், அரைப் பக்கக் கதை மூன்று பக்கங்களாக வளர்ந்திருக்கும்! படத்துடன் சேர்த்து நாலு அல்லது ஐந்து பக்கங்களில் பிரசுரமாகும்!

பகீரதன் எழுதிய 'தேன்மொழியாள்' என்ற தொடர்கதையைத்தான் முதன் முதலாக நாடகமாக்கி விவேகா ஃபைன் ஆர்ட்ஸ் அரங்கேற்றியது. நாடகத்தை பகீரதனுடன் சேர்ந்து முதல் வரிசையில் அமர்ந்து பார்த்த எனக்கு, ஒரு சீரியஸ் கதையை இவ்வளவு தூரம் நகைச்சுவை இழையோட நாடகமாக்க முடிந்திருக்கிறதே என்ற வியப்பு ஏற்பட்டது.

சில காலம் சென்று நாடகாசிரியர் 'சோ'வை கல்கிக்கு தொடர் கதையோ நாடகமோ எழுதுமாறு கேட்டேன். அவர் ரொம்பத் தயங்கினார். "நாடக டயலாக்கெல்லாம் அப்பப்ப தோன்றுவதை இஷ்டத்துக்குச்

சேர்த்துக்குவோம். அதெல்லாம் காதில் வாங்கி காற்றோடு போயிடும். எழுதி, அச்சில் வருவது என்பது வேறே. அதுக்கு நிரந்தர வடிவம் வந்துடுமே'' என்று யோசித்தார். நான், ''நகைச்சுவை யாக எழுதறவங்களே ரொம்பக் குறைஞ் சுட்டாங்க. நீங்க தைரியமா எழுதுங்க; நான் கவனமா பார்த்துக்கறேன்'' என்று தூண்டினேன். ''யாரோ, இவர் யாரோ?'' என்ற தலைப்பில் 'சோ' ஒரு தொடர்கதை கல்கியில் எழுதினார். அதற்கு அவருடைய முகபாவங் களையே புகைப்படங்கள் எடுத்து, அவற்றுடன் ஓவியர் ராமுவின் கைவண் ணத்தில் கார்ட்டூன் உடல்களைச் சேர்த்து, முக்கியச் சம்பவங் களைச் சித்திரமாக்கிப் பிரசுரித்தோம். வாசகர் கள் இந்த நூதனத் தையும் கதைப் போக் கையும் நகைச்சுவை யையும் வெகுவாக ரசித்து மகிழ்ந்தார் கள். அப்புறம் எத் தனையோ நாடகங்கள் 'சோ' எழுதி அரங்கேறி விட்டன. இப்போது ஹிந்து மகாசமுத்திரத் திலே மூழ்கி முத்து எடுத்துக் கொண்டிருக் கிறார்! துக்ளக், மேல் அட்டைப்படம் இன் றைக்கும் ஓவியர் ராமு வின் கார்ட்டூன் படைப்புதான்.

"கதையைப் பிரசுரிப்பது சூரிக்காகவோ, சிவசங்கரிக்காகவோ இல்லை!"



ம.பொ.சிவஞானம் அவர்களிடம் தீபாவளி மலருக்கு கட்டுரை கேட்க அவரது திருவல்லிக்கேணி இல்லம் செல் வேன். என்னைக் கண்டதும், ''உன் அப்பா என்னைப் பற்றி என்ன சொன்னார் தெரியுமா? 'ம.பொ.சி. செங்கோல்னு ஒரு பத்திரிகை நடத்தறார் என்பதே பல பேருக்குத் தெரியாது! ரொம்ப ரொம்ப ரகசிய மாக நடத்திண்டிருக்கார்' '' என்று ''கல்கி''யை போலிப்பு செய்து ம.பொ.சி. பேசுவார். ''மேடையேறி என் னைக் கிண்டலடித்தவர் உன் அப்பா ஒருவர்தான்'' என்று கூறிவிட்டு புஸ்தி மீசையையும் மீறி பற்கள் தெரிய சிரிப்பார்.

அவர்களிடையே அப் படி ஒரு தோழமை யோகம் நிலவியது. இதன் பிறகு, ''மலர் கட்டுரைதானே? எழு திக்கோ'' என்று கூறி விட்டு கூடத்தில் குறுக் கேயும் நெடுக்கேயும் நடந்தபடி சிந்தித்த வாறே சொற்களை மழையாகப் பொழி வார். நான் அவசரம் அவசரமாக எழுதிக் கொள்வேன். பத்து நிமிஷம் பேசிய பிறகு, ''எங்கே, படி'' என் பார். நான் கிறுக்கிய தையும் மனசில் உள் வாங்கியதையும் இணைத்து படித்துக் காட்டுவேன். ''நல்லா வந்திருக்கில்லே?'' என்று கேட்பார் ம.பொ.சி. 'அப்பாடா, தப்பிச்சோம்!' என்று பெருமூச்சு விட்டபடி விடைபெறுவேன்.

(அடுத்த வாரம்: பேனா மன்னருக்கு தங்கப் பேனா!)



"இந்தத் தொகுதியில பேசும்போது மட்டும் எல்லாருக்கும் இலவசமா 'டானிக்' தருவோம்னு ஏன் தலைவர் சொன்னார்?"

"இங்க நம்ம கட்சி ரொம்ப வீக்கா இருக்குன்னு பத்திரிகை எழுதிருச்சாம்!"



"நம்ம கட்சியோட தேர்தல் அறிக்கை மக்களிடையே பெரிய பரபரப்பை ஏற்படுத்தும்னு எப்படிச் சொல்ற?"

"ஆறு மாதங்களுக்கு ஒருமுறை 'இடைத்தேர்தல்' நடத்தப் பாடுபடுவோம்னு தலைவர் வாக்கு கொடுத்திருக்காரே!"

தொகுதிக்கொரு



"எதுக்காக ஜோக் எழுத்தாளர்களெல்லாம் சேர்ந்து தலைவருக்குப் பாராட்டு விழா நடத்துறாங்க?"

"அவரு சேனத்தனமா பேசுறதாலதான் அவங்க நிறைய ஜோக்குகள் எழுத முடியுதாம்!"



"அவரு ஏன் குதி சொல்றதை நிறுத்திட்டார்?"

"அடுத்த தேர்தல்ல மா.ம.க. யாரோட கூட்டணி வெச்சுக்கும்னு கேட்டுட்டாங்களாம்!"

- திருமாளம் எஸ். பழனிவேல்

இலவச டானிக்!

“என் மனைவி என்னை மனுஷனாகவே மதிக்கிறது இல்லை ஸார்!”

“அதுக்கு நாங்க என்ன ஸார் பண்ண முடியும்?”

‘பிராணிவதை தடுப்புச் சட்டத்திலாவது அவளைக் கைது பண்ண முடியுமான்னு பாருங்களேன்!”

- அதிரை புகாரி





“அந்த நடிகை ரொம்ப ஓப்பன் டைப்!”

“அதுக்காக, தாலி கட்டும் போதே அடுத்த கல்யாணத் தேதியை மாப்பிள்ளை கிட்ட சொல்லணுமாக்கும்.”

- பி.ஜி.பி.இசக்கி



“உங்க ஐம்பது வருட கல்யாண வாழ்க்கையில வாங்கணும்னு ரொம்ப ஆசைப்பட்டு முடியாம போனது ஏதாவது இருக்கா?”

“டைவர்ஸ்...”

- கே.ஆனந்தன்



“ஏகப்பட்ட சிலிண்டர்களைத் திருடி யிருக்கிறாயே...ஏன்?”

“எரிபொருளைச் சேமியுங்கள்னு எல்லா இடங்களிலும் போர்டு போட்டி ருந்துச்சு!”

- எம்.அசோக்ராஜா

நான் அனுப்பிச்ச தொகையை வெச்சு, தேசம் பட்ட கடனை அடைக்க 'முதல் அக்கவுன்ட்டா' வரவு வெச்சிருந்தா நான் ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பேன்



'முதலிவன்'

"நம் நாடு இன்றைக்கு உள்ள சூழ்நிலையில், ஒரு நாட்டின் மீது ஆட்சியாளர்களுக்கு மட்டுமே அக்கறை இருந்து பிரயோஜனமில்லை. ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் அக்கறை வர வேண்டும். அதன் பிரதிபலிப்பாக, நம் தேசம் வெளிநாடுகளில் பட்டிருக்கும் கடன் தொகையினைத் திரும்பச் செலுத்தி கடனை அடைக்க வேண்டி, என் சிறு பங்காக ரூபாய் ஐந்தாயிரத்தினை பேங்க் டி.டி. ஆக அனுப்பி வைத்துள்ளேன்!" - திருச்சி காந்தி மார்க்கெட்டில் லோடுமேனாக இருக்கும் முத்துராமலிங்கம்தான் இப்படியொரு கடிதத்தினை பிரதமருக்கு அனுப்பியிருக்கிறார்!

"திடீரென மீடியாவின் கவனத்தை ஈர்க்க இந்த வேலையா?" என அவரை மடக்கினோம். "இது ஒண்ணும், பல் நுனியில நூலைக் கட்டி பஸ்ஸை இழுக்கற சாகசம் இல்லீங்க" என உஷ்ணமானவரை 'கூல்' ஆக்கிப் பேச வைத்தோம்.

"எனக்குப் பூர்விகம் கமுதி பக்கம். சின்ன வயசிலேயே பெத்தவங்க இறந்து போக, பன்னிரண்டு வயசுல மதுரையில ரிக்ஷா ஓட்டி சோறு தின்னேன். ஆந்திரா நெல்லூர் பிளாட்பாரத்துல துணிக்கடை

போட்டேன். என்னோட சொந்தத்துலயே எனக்குப் பொண்ணு தந்தாங்க. மாலதி வந்துச்சு. வாழ்க்கையே மாறிப் போச்சு. திருச்சி வந்து நாலு வருஷம் ஆகுது.''

''இந்தச் சூழ்நிலையிலா இப்படி?''

'' எனக்கு எந்தக் கெட்டப் பழக்கமும் கிடையாது. அதனால ஏதாவது நல்ல காரியத்துக்கு உதவட்டுமேனு, ரெண்டு வருஷமா குருவி சேர்க்கறாப்ல சேர்த்து வைச்சேன். எலெக்ஷன் சமயத்துல பேப்பர்ல படிச்சேன். நம்ம இந்தியா பல லட்சம் கோடிகளை வெளிநாடுகள்லேர்ந்து கடன் வாங்கியிருக்குனு. அப்பத் தான் எனக்குத் தோணிச்சு. என்னோட பங்கா அந்தக் கடனை அடைக்க ஒரு தொகையை அனுப்பி வெச்சா என்னன்னு? இப்படி ஒவ்வொருத்தரும் பண்ணினா அந்தக் கடனைத் தீர்த்துடலாம் இல்லியா?'' என்ற முத்துராமலிங்கம், தொழில் சங்கடங்களையும் சொன்னார்!

முத்துராமலிங்கம்!

''மூட்டை தூக்கறதுக்குனு சங்கம் இருக்கு. நான் எதுலயும் மெம்பரா சேரலை. அதுக்கு ஐம்பதாயிரத்துலேர்ந்து ஒரு லட்ச ரூபாய் வரைக்கும் பணம் தரணும். அம்புட்டுப் பணத்துக்கு நான் எங்கே போறது? ஆனா அதுல சேர்ந்துட்டா இப்ப எனக்குக் கிடைக்கற கூலிய விட ரெண்டு மடங்கு கூலி அதிகமா கெடைக்கும். எல்லாம் போக ஒரு நாளைக்கு எனக்கு நூத்தைம்பது ரூபா கிடைக்கும்'' என்கிறார்.

''இவரு பணம் அனுப்பப் போறார்னு எனக்கு எதுவுமே தெரியாது. சொல்லியிருந்தா நானும் என் பங்குக்கு ஏதாவது குடுத்திருப்பேன்!'' - இது முத்துராமலிங்கத்தின் மனைவி மாலதி.

திருச்சி தாராநல்லூர் பகுதியில் ஐந்தடி அகலம், பதினைந்தடி நீளமே கொண்ட சிறிய வீடு. மாத வாடகை எழுநூறு ரூபாய். தேசத்தின் கடனை அடைப்பதில் 'முதல்வன்' ஆக முயற்சித்து, ஏமாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறார் முத்துராமலிங்கம்.

''நம் தேசத்தின் வெளிநாட்டுக் கடனை அடைக்க, தனியா வங்கிக் கணக்கு ஏதுமில்ல. அதனால நான் அனுப்பிச்ச பணம் பிரதமர் நிவாரண நிதியில் பேரிடர் நிவாரணத்துக்கென சேர்க்கப்பட்டுள்ளதா எனக்குப் பதில் வந்திருக்கு. இது எனக்கு ஏமாற்றம்தான். ஒருவேளை நான் அனுப்பிச்ச தொகையை வைச்சு, தேசம் பட்ட கடனை அடைக்க 'முதல் அக்கவுன்ட்டா' வரவு வெச்சிருந்தா நான் ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பேன்!'' எனச் சொல்கிறார் முத்துராமலிங்கம்.



● குடும்பத்தினருடன் முத்துராமலிங்கம்...

செய்திச் சித்திரம்:

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

இலங்கைப் பிரச்னை

"இலங்கைத் தமிழ் மக்கள் வாழ்ந்த வடக்கு மாகாணம் அந் நாட்டின் 'உணவுக் களஞ்சியம்'. போர் தீவிரமடைவதற்கு முன்பு வரை இங்கே விளைந்த மிளகாயும், வெங்காயமும்தான் இலங்கையின் மொத்த தேவையையும் தீர்த்து வைத்தன. இன்று அகதி முகாம்களில் உணவுக்காக பிச்சைப் பாத்திரமேந்தி நிற்கும் தமிழர்களைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. மீண்டும் வடக்கு மாநிலத்தில் விவசாயம் செழிக்க வேண்டும். அது சாத்தியம். வரும் அக்டோபர் மாதத்திலேயே அங்கே விவசாயப் பணிகள் ஆரம்பிக்க இருக்கின்றன'' என்கிறார் விவசாய விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன். அண்மையில் இவர் ராஜபக்ஷேவின் அழைப்பின்பேரில் இலங்கை சென்று, அங்கே விவசாயப் பணிகள் தொடங்குவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து விட்டு வந்திருக்கிறார்.

"வடக்கு மாகாணத்தில் சுமார் மூன்று லட்சம் ஹெக்டேர் விவசாய நிலங்கள். இதில் ஒரு லட்சம் ஹெக்டேர் நெல் விளையும் பூமி. மீதியில் கடுகு, வேர்க்கடலை, காய்கறிகள், பழ வகைகள், தேங்காய் விளையும் பகுதி. இரண்டாயிரத்துக்கும் அதிகமான சிறிய ஏரிகள், ஐம்பது நடுத்தர ஏரிகள், பத்து பெரிய ஏரிகள் இருந்தன. இப்போது அவற்றில் பெரும்பாலானவை சீர்செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. போர் நடவடிக்கைகள் காரணமாக பூமியில் ஆங்காங்கே கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன. பீரங்கி வண்டிகள், இதர கனரக வாகனப் போக்குவரத்து போன்ற சில காரணங்களால் அங்குள்ள நிலங்கள் உடனடியாக விவசாயம் செய்ய முடியாத நிலைமையில் இருக்கின்றன. அங்கேயும் தமிழ்நாட்டைப் போலத்தான் வடகிழக்குப் பருவ மழையைத் தொடர்ந்து வரும் அக்டோபர் மாதம் விவசாயப் பணிகளை ஆரம்பிப்பது வழக்கம். எனவே, இந்த விவசாயப் பருவத்தை வீணாக்காமல்,




★ ராஜபக்ஷேயுடன்...

"புலிகளால் ராணுவத்தில் கட்டாயமாகச் சேர்க்கப்படாமல் இருக்கவே சில தமிழ்ப் பெண்கள் கர்ப்பமாகி இருக்கிறார்கள்!"

வரும் அக்டோபரிலேயே பணிகளை ஆரம்பித்துவிட வேண்டும் என்று இலங்கை அரசு நினைக்கிறது. அதற்கான ஒரு திட்டம் வகுத்துச் செயல்படுத்துவதற்குத்தான் இலங்கை ஜனாதிபதியிடமிருந்து அழைப்பு வந்தது.

இதற்கு முன்பு ரணில் விக்ரமசிங்கே



"மலருமா மறுவாழ்வு?"

- எம்.எஸ்.சுவாமிநாதன்

பதவியில் இருந்தபோது, 2002ல் இது போலவே என்னிடம் உதவி கேட்டார். அப்போதும், நான் ஒரு திட்டம் வகுத்துக் கொடுத்தேன். ஆனால், அவரது அரசியல் தீர்வு காணும் முயற்சிகள் வெற்றி பெறாமல் போய்விட்டதால், அந்தத் திட்டம் செயல் வடிவம் பெறவில்லை'' என்றவரின் பேச்சு தமிழர்களின் முகாம் பக்கம் திரும்பியது.

''விவசாயம் மற்றும் நீர்ப் பாசனத் துறைகளின் அமைச்சர்கள், டக்ளஸ் தேவானந்தா... போன்ற தமிழ் மக்களின் தலைவர்களையும் சந்தித்தேன். முகாம்களில் உள்ள தமிழ் மக்களைச் சந்தித்துப் பேசினேன். தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் ஆண்கள் பலியாகி விட்டதால், இனிமேல் ஏராளமான பெண்கள் விவசாயப் பணிகளில் ஈடுபடவேண்டி இருக்கும். அது மட்டுமில்லாமல், விவசாயத்தில் ஈடுபடவிருக்கும் பெண்களில் பலருக்குக் கைக் குழந்தைகள் இருக்கின்றன. விடுதலைப்புலிகளால் ராணுவத்தில் கட்டாயமாகச் சேர்க்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக பெண்கள் கர்ப்பமடைந்து, குழந்தை பெற்றுக் கொண்டதும் தெரிய வந்தது. எனவே, விவசாயத்தில் ஈடுபடும் பெண்களின் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவும் உரிய ஏற்பாடு செய்துதர வேண்டும் என்றும் ராஜபக்ஷேவிடம் வலியுறுத்தி இருக்கிறேன்.

கால்நடை வளம், மீன் வளம் ஆகியவற்றையும் ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும். அடுத்த மாதம் வவுனியாவில் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் என்னுடன், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மாநில விவசாயப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த நிபுணர்களும், மேலும், தமிழ்நாட்டின் சில முற்போக்கு விவசாயிகளும் இலங்கையைச்

புலிகளே காரணம்!

***கல்கி** 21.6.09 இதழில் 'ராஜபக்ஷே ஏமாற்றி விடுவார்' என்று தலைப்பிட்டு இலங்கைத் தமிழ் எம்.பி. சம்பந்தம் பேட்டி வெளியானது. அது குறித்து தமது மாற்றுக் கருத்துகளைத் தெரிவிக்கிறார் ரவிக்குமார். இவர் கொழும்பில் 'ஸ்டடி அண்ட் ஜாப் கன்சல்டன்ஸி' என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார்.*

''புலிகளின் ஊதுகுழலாகச் செயல்பட்டவர்தான் தமிழ் எம்.பி. சம்பந்தம். தம்மை எம்.பி.யாக்கிய தமிழ் மக்களுக்கு உதவியாக இறுதிப் போரின்போது கூட களத்தில் நிற்காது, வெளிநாடுகளில் இருந்த இவருக்கு, இலங்கை தமிழர் பிரச்னை பற்றிப் பேசவே எந்த உரிமையும் இல்லை.



இராணுவ ரீதியிலோ, அரசியல் வழியிலோ தமிழருக்கு எந்த ஒரு நன்மையையும் தேடித்தராத புலிகள், அவர்களை நாடற்றவராக மாற்றி, சொந்த மண்ணிலேயே அவர்களை அகதிகளாக்கிவிட்டார்கள்.



* ரவிக்குமார்

புலிகள் மீதான இறுதிப் போரில் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டதற்கு புலிகளே காரணம். அவர்களே மக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தார்கள். அகதிகளின் மறுவாழ்வு என்ற போர்வையில் அந்நிய சக்திகள் மீண்டும் தமிழ் மக்களிடையே ஊடுருவி, குழப்பத்தை ஏற்படுத்த முயலலாம். இதனால்தான் இலங்கை அரசு உதவிகளை தானே நேரிடையாகச் செய்ய விரும்புகிறது.

இலங்கை ஒரு மிகச் சிறிய நாடு. மாகாணங்களை இணைப்பதோ மாநிலங்களை உருவாக்கி அதிகாரப் பகிர்வு அளிப்பதோ தேவையே இல்லாத ஒரு விஷயம். ஒரு குட்டி நாட்டுக்கு அதிகாரப் பகிர்வு கொண்ட பல மாநிலங்கள் தேவை இல்லை. வலிமை மிக்க மத்திய அரசே போதும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இலங்கையின் எப்பகுதியிலும் விரும்பியவாறு குடியேறி வாழத் தொடங்கினால் அதிகாரப் பகிர்வு என்ற வார்த்தையே அர்த்தமற்றதாகி விடும்.''

சேர்ந்த விவசாயிகளும் கலந்து கொள்வார்கள்.

இப்போதைக்கு அவர்களின் முக்கியத் தேவை தரமான விதைகள்'' என்கிறார்!

இதே போல வேறு எந்த நாட்டிலாவது பணிபுரிந்திருக்கிறீர்களா?

''ஓ! வியட்நாமிலும், கம்போடியாவிலும் மேற்கொண்டிருக்கிறேன். அந்நாடுகளில் முக்கியப் பயிரே நெல்தான்! இன்று இரண்டு நாடுகளும் மிக உயர்தர அரிசியை ஏற்றுமதி செய்யுமளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளன. அதற்காக எனக்கு விருதளித்துக் கௌரவித்தார்கள்.''

ராஜபக்ஷே தமிழர்களின் அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசினாரா?

''நான் வேளாண் விஞ்ஞானி என்பதால் என்னிடம் விவசாயப் புனரமைப்புத் திட்டம் பற்றித்தான் விவரமாகப் பேசினார். ஆனாலும், வடக்கு மாகாண தமிழ் மக்கள் வரும் பருவத்திலேயே விவசாயத்தை ஆரம்பித்துவிட வேண்டும் என்ற அவரது பேச்சிலிருந்து, தமிழ் மக்களின் மறுவாழ்வில் அவர் போதிய அக்கறை கொண்டிருப்பதாகவே தெரிகிறது.''

- எஸ்.சந்திரமௌலி



பறவைக் காய்ச்சல் என்றாலும் பன்றிக் காய்ச்சல் என்றாலும் இறுதியாகப் பாதிக்கப்படுபவர்கள் மனிதர்கள்தான். தடுப்பு மருந்துகளைப் பயன்படுத்துகின்ற உலகில், விமான நிலையத்திலேயே மனிதர்களைத் தடுக்கின்ற அளவுக்கு நிலைமைகள் உருவாகியிருக்கின்றன.

அம்மை போட்டால் மாரியாத்தா வந்திருக்கிறாள் என்றும், காலரா ஏற்பட்டால் காளியாத்தாள் கோபமாகியிருக்கிறாள் என்றும் சொன்னவர்கள்தான் முந்தைய தமிழர்கள். நோய் வந்தால் கடவுள் மீது பாரத்தைப் போட்டவர்கள் இன்று பன்றிக் காய்ச்சலுக்கு எந்தக் கடவுள் மீதும் பாரத்தைப் போடாமல் மிரண்டு போயிருப்பதற்குக் காரணம், மருத்துவ உலகம் போய்க்கொண்டிருக்கிற போக்கில் கடவுளாலும்கூட நோய்களைக் குணப்படுத்த முடியாது என்பதால் தான்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது பொங்கல், தீபாவளி திருநாட்கள் என்றால் மனது கும்மாளம் போடும்.

பலகாரங்களுக்குப் பஞ்சமே இருக்காது. ஆனாலும் விளையாட்டிலேயே மனம் மூழ்கியிருப்பதால் வேளாவேளைக்குச் சாப்பிடுவது என்பதெல்லாம் ஆகாத காரியம். ஆடிக் களைத்துத் திரும்பும்போது, அம்மா செல்லமாகக் கோபித்துக்கொண்டு தட்டு நிறைய பலகாரங்களைக் கொடுப்பார். நேரங்கெட்ட நேரத்தில் அவற்றைச் சாப்பிடுவதுதான் திருநாட்களில் வழக்கம். தீபாவளி முடிந்த மறுநாளும் பொங்கல் முடிந்த மறுநாளும் காலையிலேயே விளையாட ஆரம்பித்து விடுமுறையைக் கொண்டாடிக் கொண்டிருப்போம்.

'எல்லாரையும் சந்தக்கா கூப்பிடுறாங்க' என்று சைக்கிளில் போனபடியே யாராவது ஒருவர் சொல்லிவிட்டுப் போவார். தெருவுக்குள் ஒரு சந்து வீட்டில் அந்த அக்கா குடியிருந்ததால் சந்தக்கா வீடு என்று பெயர். அக்கா என்று பொதுவாகக் கூப்பிட்டாலும்



சந்தக்கா மருந்தும் மருத்துவச் சந்தையும்

அம்மா வயதுக்காரர். பையன்கள் எல்லோரும் அவரது வீட்டுக்கு ஓடுவோம். வரிசையாக ஒவ்வொருவரையும் கூப்பிட்டு, வாயைத் திறக்கச் சொல்லி ஒரு சின்ன உருண்டையைப் போடுவார். அதை லபக்கென விழுங்கும்போது கசப்பும் உறைப்பும் எரிச்சலுமாக இருக்கும். சட்டென கொஞ்சம் சீனியை அள்ளி வாயில் போட்டு அனுப்பி வைப்பார்.

தீபாவளியாக இருந்தால் எண்ணெய்ப் பலகாரங்கள், இனிப்பு வகைகள்... பொங்கலாக இருந்தால் நெய், சர்க்கரை போன்றவை வயிற்றில் அடைக்கலமாகியிருக்கும். பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டிய சின்னப் பையன்களுக்கு வயிற்றுப் பிரச்னை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக வேப்பங் கொழுந்து, இஞ்சி இன்னும் சில பொருட்கள் சேர்த்து செய்ததுதான் சந்தக்கா வாயில் போட்ட உருண்டை ரகசியம்.

தன் பிள்ளைகளுக்கு வயிற்றுப் பிரச்னை வரக்கூடாது என்பதற்காக கசப்பு மருந்து உருண்டை தயாரித்த சந்தக்கா, தன் பிள்ளைகளின் வயதையொத்த மற்ற வீட்டுப் பிள்ளைகளுக்கும் சேர்த்து மருந்து அரைத்ததில் தாய்மை கலந்த மருத்துவத் தன்மை இருந்தது. இன்றைய மருத்துவ உலகத்தில் அது இருக்கிறதா என்கிற கேள்விக்கு விடை தேடினால் மனது வலிக்கவே செய்யும். பல லட்சங்களுக்கு மருத்துவப் படிப்பு விற்கப்படுகின்ற காலத்தில் மருத்துவத்தில் மனித நேயம் என்பதை மருந்தளவுக்கு எதிர்பார்ப்பதுகூட வீண்தான்.

சென்னைக்கு வந்த புதிதில் சாதாரண வயிற்றுப் பிரச்னைதான். மருந்து உருண்டை கொடுக்க சந்தக்கா இல்லை. நண்பருடன் சென்று ஒரு டாக்டரைப் பார்த்தபோது பலவித டெஸ்ட்டுகளுக்குப் பரிந்துரைத்தார். மாதச் சம்பளம் 700 ரூபாய் வாங்கிக் கொண்டிருந்த காலத்தில் லேப் ஃபீஸ், டாக்டர் ஃபீஸ் என 250 ரூபாயை தண்டம் அழுத பிறகு, ரிசல்ட்டைப் பார்த்துவிட்டு அந்த டாக்டர் சொன்னார். 'அஜீரணம்தான்... மாத்திரை தர்றேன். இனிமேல் வெந்நீர் குடிங்க' என்று சொல்லிவிட்டு டைஜீன் மாத்திரைகளை எழுதிக் கொடுத்தார். மாத்திரை செலவு 5 ரூபாய்கூட இல்லை. ஆரம்பத்திலேயே டைஜீன் மாத்திரையைக் கொடுத்து, வெந்நீர் குடிக்கச் சொல்லி, அப்படியும் வயிற்றுப் பிரச்னை நிற்கவில்லை என்றால்



டெஸ்ட் எடுக்கச் சொல்லியிருக்கலாம். மருத்துவம் வியாபாரமானபிறகு, சிகிச்சை முறைகள் தலைகீழாகிவிட்டன.

குழந்தைக்கு வயிற்றுவலி. டாக்டரிடம் குழந்தையைத் தூக்கிச் சென்றபோது, 'ரத்த டெஸ்ட் எடுங்க, பேரியம் மீல்ஸ் கொடுத்து எக்ஸ்-ரே எடுங்க, அல்ட்ரா-சவுண்டு ஸ்கேன் எடுங்க, சி.டி. ஸ்கேன் எடுங்க' என பதினைந்தாயிரம் ரூபாய் அளவுக்கு மருத்துவமனையில் தாளித்துவிட்டார்கள். எல்லாம் முடிந்தும் குழந்தைக்கு வயிற்றுவலி நிற்கவில்லை. அதே மருத்துவமனையில் டாக்டர் மாற்றி டாக்டர் பரிசோதித்தார்கள். ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஃபீஸ். கடைசியாகப் பார்த்த ஒரு டாக்டர் சொன்னார் - 'சமையலில் புளி நிறைய சேர்க்காதீங்க. குழந்தைக்குச் செரிமானம் ஆகலை.' டைஜீன் சிரப்தான் மருந்து. அதன் விலை நாற்பது ரூபாய்.

தனியார் மருத்துவக் கல்லூரிகள், மருத்துவமனைகள், பரிசோதனை நிலையங்கள் என... எங்கு சென்றாலும் பணத்தைக் கத்தை கத்தையாக எடுத்து வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. சரி.. அரசாங்க மருத்துவமனைக்குப் போகலாம் என்றால், கதியற்றவர்களின் கடைசிப் புகலிடமாக மாறியிருக்கும் அங்கும் சில்லறை இல்லாமல் எதுவும் நடப்பதில்லை.

சொந்த ஊருக்குச் (திருவாரூர்) செல்லும்போதெல்லாம் அரசு மருத்துவமனையைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். (நூறு மீட்டர் தூரத்துக்கு முன்பே மூக்கைத் துளைக்கும் அருவருப்பான வாடையே மருத்துவமனையை நெருங்கிவிட்டோம் என்பதை உணர்த்திவிடும்.) உள்ளே நுழைந்தால் ஆரோக்கியமான மனிதரும்கூட நோயாளியாகிவிடக்கூடிய அளவுக்குத் தான் பராமரிப்பு இருக்கிறது! அதன் முகப்பில் அரசினர் மருத்துவமனை என்ற போர்டு இருந்தபோது, பள்ளி மைதானத்தில் முழங்காலைப் பெயர்த்துக் கொண்டு அங்கே போய் கட்டுப் போட்டுக்கொண்டேன். அதன்பிறகு அதே கட்டடத்தில் அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை என்று போர்டை மட்டும் மாற்றினார்கள். இப்போது, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை என்ற பெயரைத் தாங்கி நிற்கிறது அதே பழைய கட்டடம்.

பெயருக்கு சில புதிய கருவிகள் மருத்துவமனைக்கு வந்திருக்கின்றன. அவையும் இயந்திரக்கோளாறு என்று காரணம் காட்டப்பட்டு பயனற்று விடுகின்றன. இயந்திரங்கள் கோளாறாகிக் கிடக்கிற நிலையில், மருத்துவமனையில் பணியாற்றுவோர் இயந்திரங்களாகவே செயல்படுகிறார்கள். இருதய சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட வேண்டியவர்கள் நோயாளிகளா, மருத்துவர்களா என்ற கேள்வியுடன்தான் மருத்துவமனையிலிருந்து வெளியே வரவேண்டியிருக்கிறது. மருத்துவத்துறையிலும் ஒன்றிரண்டு சந்தனக்காக்கள் மிஞ்சியிருக்கலாம். அவர்களால்தான் நம் மக்கள் தைரியமாக மருத்துவமனைகளுக்குச் செல்கிறார்கள் போலும். ●

முன்னோர்களுக்கு திதி செய்ய மறந்தவர்களுக்கும், தர்ப்பணம் செய்யத் தவறியவர்களுக்கும் பித்ரு பூஜை நிறைவேற்ற ஏற்ற காலம் மஹாளயபக்ஷ அமாவாசையே. பித்ரு க்ஷேத்ரமான

காசியில் மஹாளய அமாவாசை அன்று

(18-9-2009) நடைபெறும் பித்ரு பூஜையிலும் அன்னதானத்திலும்

அனைவரும் கலந்து கொண்டு பித்ருக்களின் ஆசிர்வாதத்தை பெற அன்புடன் அழைக்கிறோம்

பித்ரு பூஜை நமக்குக் கிடைத்த **ஒப்பற்ற வாய்ப்பு** ஆகும். பித்ரு பூஜையால் **நம் குடும்பம் பெறக் கூடிய** நன்மைகள் ஏராளம். **புண்ணியத்தின் புதையல் அது.** எவ்வித **துன்பத்தையும்** போக்கும் **சக்தி பித்ரு பூஜைக்கு மட்டுமே உண்டு.** பித்ருக்களுக்கு நாம் செய்ய வேண்டிய தர்ப்பணம் போன்ற பூஜைகளை நாம் எக்காரணம் கொண்டும் **விட்டுவிடக்கூடாது** என்பதால் பித்ரு க்ஷேத்ரமாக விளங்கும் காசியில் **ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட் மூலம் மஹாளய அமாவாசை அன்று காசியில் பித்ருக்கள் நினைவாக கங்கைக்கு ஜல தீபம் ஏற்றி வஸ்தரதானத்துடன் அன்னதானமும் வைதீக முறைப்படி செய்யப்படுகிறது.** மஹாளய அமாவாசை அன்று காசியில் தர்ப்பணமும், அன்னதானமும் செய்தால் பித்ருக்கள் பூரண திருப்தி ஏற்பட்டு அவர்கள் நமக்கும், நம் சந்ததிகளுக்கும் அனைத்து வகை ஆரோக்யத்தையும் அளிக்கிறார்கள். மஹாளய அமாவாசை அன்று காசியில் நடைபெறும் **அன்னதான திருப்பணி** மற்றும் **முன்னோர் வழி** பாட்டுக்கு தங்களால் இயன்ற கீழ்கண்ட நன்கொடையை அனுப்பி **பித்ருக்களின் ஆசிர்வாதத்தை பெற்று அனைத்து பித்ரு தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி** பெற அனைவரையும் அன்புடன் **அழைக்கிறோம்.**

பித்ருக்கள் நினைவாக நடைபெறும் அன்னதானத்திற்கு தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு திருக்கயிலாயத்தில் இருந்து நேரடியாக பெறப்பட்ட கீழ்கண்ட ருத்ராட்சங்கள் அனுப்பி வைக்கப்படும்

- ரூ. 300 - அனுப்பும் அன்பர்களுக்கு, **5 முகம் கொண்ட ருத்ராட்சம்** 3 அனுப்பி வைக்கப்படும்.
  (5 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு அனைத்து தோஷங்களும் நிவர்த்தியாகும். ரத்த அழுத்தம், இதய கோளாறுகளை சீர் செய்யும்).
- ரூ. 600 - அனுப்பும் அன்பர்களுக்கு, **ருத்ராட்ச மாலை** அனுப்பி வைக்கப்படும்.
  (ருத்ராட்ச மாலை அணிபவர்கள் அனைத்து சிவ ஸ்தலங்களையும் தரிசித்த மஹாபுண்ணிய பலனை பெறலாம்).
- ரூ. 1000 - அனுப்பும் அன்பர்களுக்கு, **3 முகம் (மஹா சரஸ்வதி)** கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (3 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு அறிவு வளர்ச்சி, கல்வி மேம்பாட்டிற்கும் உதவும். குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் பொருத்தமானது).
- ரூ. 2000 - அனுப்பும் அன்பர்களுக்கு, **6 முகம் (ஸ்ரீசுப்பிரமணியர்)** கொண்ட ருத்ராட்சம் 3 அனுப்பி வைக்கப்படும்.
  (6 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு வியாபாரத் தடை நீங்கி, தொழில் வளர்ச்சி சிறப்பாகும். மேலும் அஸ்வமேத யாக பலனையும் தரவல்லது).
- ரூ. 3000 - அனுப்பும் அன்பர்களுக்கு, **7 முகம் (சப்த ரிஷி)** கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (7 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு தடைபட்ட திருமணம் நடக்கும். மேலும் செவ்வாய்தோஷம் விலகி சுப நிகழ்ச்சிகள் கைகூடும்).
- ரூ. 4000 - அனுப்பும் அன்பர்களுக்கு, **11 முகம் (வீர ஹனுமான்)** கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (11 முக ருத்ராட்சத்தை அணிவதால் குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் உண்டாகும்).
- ரூ. 5000 - அனுப்பும் அன்பர்களுக்கு, **கௌரி சங்கர் (சிவ-பார்வதி)** ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (கௌரி சங்கர் ருத்ராட்சத்தை அணிபவர்கள் கணவன் - மனைவி ஒற்றுமையுடன் வாழ்வார்கள். நீண்ட ஆயுளையும் தரும்).
- ரூ. 6000 - அனுப்பும் அன்பர்களுக்கு, **ஒரு முகம் (ஸ்ரீபரமேஸ்வரன்)** ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (ஒரு முக ருத்ராட்சத்தை அணிந்தவர்களை எதிரிகளால் கூட வெல்ல முடியாது மற்றும் பிரம்மஹத்தி தோஷமும் நீங்கும்).
- ரூ. 7000 - அனுப்பும் அன்பர்களுக்கு, **ஸ்ரீகணேஷ் (விநாயக பெருமானின் முழுத்தோற்றம்)** ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (ஸ்ரீகணேஷ் ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு செழிப்பான வளர்ச்சியுடன் எடுத்த காரியத்தில் வெற்றியும், அஷ்ட லஷ்மிகளின் அருளும் கிடைக்கும்).
- ரூ. 10000 - அனுப்பும் அன்பர்களுக்கு, **21 முகம் (குபேர ஸ்வரூபம்)** கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (சகல ஆன்மீக சக்திகளையும், ஆத்ம பலத்தையும், ஆரோக்கியத்தையும் வழங்கி, சகல செல்வங்களும் சொத்துக்களும், சுகங்களும் கிடைக்கும்).

ருத்ராட்சத்தை ஆண்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் அனைவரும் அணிந்து மகிமையை அனுபவியுங்கள்

பித்ருக்களுக்கு காசியில் தர்ப்பணம் செய்ய ரூபாய் 1000/- அனுப்பும்போது யாருக்கு திதி செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், **திதி** மற்றும் **கோத்ரம்** போன்ற விபரங்களை தெரிவித்தால், தங்கள் விருப்பப்படி மஹாளய அமாவாசை அன்று காசியில் முன்னோர் வழிபாடு முறையாகவும், முழுமையாகவும் செய்யப்படும். **அவர்களின் நினைவாக சாதுக்களுக்கு வஸ்திரதானத்துடன் அன்னதானம்** செய்யப்படும். மேற்கண்ட ரூபாய் அனுப்பும் அன்பர்களுக்கு காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தெய்வீக ஆலமரமான **'அக்ஷய வடத்தின்'** படமும், கயாவில் உள்ள **விஷ்ணு** பாதமும், **விஷ்ணு பாதத்தின்** படமும் மற்றும் ஸ்ரீஅன்னபூரணி அன்னையின் விக்ரகமும் கங்கா தீர்த்தத்துடன் கூடிய காசி செம்பு, காசி கயிறு அனைத்தும் அனுப்பி வைக்கப்படும். நம் வீட்டில் செய்யும் சிராத்தத்திற்கு தாய், தந்தையர், உறவினர்கள் மட்டுமே பங்குகொள்ள வாய்ப்புண்டு. காசியில் பிண்டப்பிரதானம் செய்தால் ஏழு தலைமுறைக்கு **பித்ருக்கள் அனைவரும் திருப்தி அடைவதுடன் பித்ரு தோஷங்களும் நமக்கு நிவர்த்தியாகும்.**

மஹாளய அமாவாசை அன்று முன்னோர்கள் நினைவாக காசியில் நடைபெறும் அன்னதான சேவையிலும், முன்னோர் வழி பாட்டிலும் ஈடுபட விரும்பும் அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque/D.D/M.O. மூலம் **Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai** என்ற பெயருக்கு எடுத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி பித்ருக்களின் ஆசியை பெறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

பணம் அனுப்பும் அன்பர்களுக்கு ரசீதும், மேற்கண்ட பிரசாதங்களும் மஹாளயபக்ஷம் முடிந்த பிறகு கூரியர் மூலம் அனுப்பி வைக்கப்படும்



நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு

ஸ்ரீஅன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd).

4, Appavoo Gramani IIIrd Street R.A.Puram, Chennai - 28 Ph : 044 - 3246 4848



காசியில் பித்ருக்களுக்கு மஹாளய அமாவாசை அன்று தர்ப்பண பூஜை செய்வது இந்துக்களின் இன்றியமையாத கடமையாகும்

'சித்திரம் பேசுதடி', 'அஞ்சாதே' போன்ற வெற்றிப் படங்களுக்கு இசையமைத்தவர் சுந்தர்.சி.பாபு. பிரபல வீணை இசைக் கலைஞரான சிட்டிபாபுவின் வாரிசு. தேர்ந்தெடுத்த படங்களுக்கு இசையமைக்கும் இவரின் அடுத்த அதிரடி 'நாடோடிகள்' படம். அவரோடு ஒரு தேநீர் சந்திப்பு.

சுதந்திரமாக வேலை செய்ய முடிகிறதா?

''முழு சுதந்திரம் கொடுத்திருக்கிறார் இயக்குநர் சமுத்திரகனி. ரெண்டு படம் பண்ணியிருக்கேன், இயக்குநர்கள் கொடுக்கும் சுதந்திரத்தை மிஸ்யூஸ் பண்ணிய தில்லை. யாருக்கு லாபம், எனக்குத் தானே! என்னோட எல்லை எதுவென்று எனக்குத் தெரியும். அந்த வகையில் சந்தோஷம்.''

"ரீமிக்ஸ் எனக்குப் பிடிக்காது!"



கதைக்கு எந்த அளவு பின்னணி இசை உதவியிருக்கு?

''தமிழ் சினிமாவில் காதல், கல்யாணத்துக்கான போராட்டங்களை மட்டுமே சொல்லியிருக்கிறார்கள். அதன் பிறகான வாழ்க்கை என்ன என்பதைத்தான் நாடோடிகளில் சொல்லியிருக்கிறோம். ஹெவி சப்ஜெக்ட். கதை ஆழமாக இருப்பதால் அதற்குரிய இசை தேவைப்பட்டது. குறிப்பாக பின்னணி இசை. கடமைக்கு வேலை செய்யவோ, பேக்கேஜுக்குள் மாட்டிக் கொள்வதோ எனக்குப் பிடிக்காது. 'புராடக்ட் வால்யூ' முக்கியம். ஆளவந்தானில் பின்னணி இசையில் நானும் இருந்திருக்கிறேன். ஒரு 'க்ளோஸ்-அப்' காட்சிக்கு அமைத்த பின்னணி இசையை, திரையில் பார்க்கும் போது பிரமிப்பாக இருந்தது! அதுதான்

"ஹீரோக்கள் பாட்டு பாடுவதெல்லாம் படத்தின் பப்ளிஸிட்டிக்காகத்தான்!"

பின்னணி இசையின் வலிமை!''

ஹீரோக்கள் பாடுறாங்களே?

''கதாநாயகர்கள் பாடுறது, அவங்க நடிக்கிற படத்துக்கான பப்ளிஸிட்டிக்காக. எல்லா படத்திலும் பாடுவாங்கன்னு சொல்லமுடியாது. ஏன்னா அவங்களுக்கு நடிப்புதான் முக்கியம். அதேபோல மற்ற இசையமைப்பாளர்களும் வாய்ப்பு கொடுப்பாங்கன்னு சொல்லமுடியாது. பாலு ஸார் கூட தயாரிப்பு, நடிப்புன்னு இருக்கார். ஆனாலும் அவருக்குப் பிரதானத் தொழில் பாடுவதுதானே. அது வேறு இதுவேறு.''

வேற்று மொழிப் பாடகர்கள்?

''ஸ்ரேயா கோஷலோட குரல் இனிமையும், உச்சரிப்பும் பிடித்த விஷயங்கள். பாட்டை அவங்க மொழியில எழுதிக்க ஒரு மணி நேரத்துக்கு மேலே எடுத்துக்கிட்டாலும் பாடும்போது பத்தே நிமிஷத்துல பாடி அசத்திடுவாங்க!''

ரீ-மிக்ஸ், ஆடியோ சேல்ஸ் பற்றி?

''ரீ-மிக்ஸ் எனக்குப் பிடிக்காத விஷயம் தான். என்னோட படங்களுக்குப் பாட வந்தார் உதித்நாராயணன். பாடல் எழுதின கவிஞரை, அவர் பக்கத்தில் வைச்சுகிட்டு சரியா உச்சரிப்பு வரும்படி இசையமைக்கிறேன். 'ஆனந்தம், ஆரம்பம்'ன்னு ஒரு பாட்டு பாடியிருக்கிறார். ஆடியோ சேல்ஸுக்கு இணையா இப்போ ரிங்டோன், டவுன் லோடிங்னு வியாபாரம் வேறு தளத்துக்கு நகர்ந்திருக்கிறதே தவிர, மற்றபடி சிறப்பாகத்தான் போய்க்கிட்டிருக்கு.''



- இசையமைப்பாளர் சுந்தர்.சி பாபு

நாடோடிகள் படத்தில் திருநங்கைகளோடு சேர்ந்து இயக்குநர் சசிக்குமார் பாடியிருக்கும் 'யக்கா... யக்கா' பாடலோடு இரண்டு மாண்டேஜ் பாடல்களும் சிறப்பாக வந்திருக்கிறதாம். 'அகராதி', 'அகம் புறம்', 'மெய்க்காண்' போன்ற படங்களுக்கு இசையமைக்க ஒப்பந்தமாகியிருக்கும் சுந்தர்.சி.பாபுவுக்கு மற்றொரு முகமும் உண்டு. சக இசையமைப்பாளர்களின் பாடல்கள் சிறப்பாக இருந்தால் ஃபோன் செய்து பாராட்டும் குணம்தான் அது.

- கிராபியென் ப்ளாக்

''இந்தத் தேர்தல் முடிவுகள் இந்திய அரசியல் ஒரு முக்கிய திசையில் செல்வதைக் காட்டுகிறது. சில பிராந்தியக் கட்சிகள் ஓரங்கட்டப்பட்டு, தேசியக் கட்சிகளான காங்கிரஸும், பா.ஜ.க.வும் தனித் தனியாகவே கணிசமான இடங்களைப் பெற்றிருக்கின்றன. இரு கட்சி அரசியலை நோக்கி நம் நாடு சென்று கொண்டிருக்கிறது. இந்த ஐந்தாண்டுகளில் காங்கிரஸ் நல்லாட்சியை வழங்கினால், அடுத்த தேர்தலில் இந்திய அரசியலில் ஒரு புதிய அத்தியாயம் எழுதப்படும்'' என்று சொல்பவர் அரசியல்வாதி இல்லை; விப்ரோ தலைவர் அசிம் பிரேம்ஜி!

(அப்போ காங்கிரஸுக்கு யாருடைய லொள்ளும் இருக்காது; கருணையும் தேவைப்படாது இல்லையாஜி?)

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்துக்கு ஐந்து நாள் பயிற்சிக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. அதில் குமாரசாமி தேவகௌடாவும், ஜெயப்ரதாவும் அடக்கமாம்! தலைமைப் பண்புகள், நிர்வாகத் திறமை, அயல்நாட்டு உறவு போன்றவற்றில் நம் ஊர் இளம் எம்.பி.க்களுக்கு யேல் பல்கலைக்கழகத்தில் பயிற்சி அளிக்கப்படும்.

(தேர்தலில் ஜெயிப்பது எப்படின்னு ட்ரெயினிங் எடுத்துக்க, உங்க ஆளுங்களை மாண்புமிகு 'மதுரை' பல்கலைக்கழகத்துக்கு அனுப்புங்க மிஸ்டர் ஒபாமா!)

பெங்களூரு சாஃப்ட்வேர் இன்ஜினீயர் பாலகிரியின் ஆக்சிஸ் பேங்க் அக்கவுண்டில் மாதாமாதம் அவரது சம்பளம் கிரெடிட் ஆகும். ஒருநாள் அவரது வங்கிக் கணக்கு குறித்த சில தகவல்களை உடனே அனுப்பி வைக்கும்படி வங்கியிலிருந்து ஈமெயில் வர, அவரும் உடனே அவர்கள் கேட்ட தகவல்களை அனுப்பி வைத்தார். அடுத்த இரண்டு மணி நேரத்தில் அவரது வங்கிக் கணக்கிலிருந்த 24 ஆயிரம் ரூபாயும் அபேஸ் ஆனது. யாரோ சில சைபர்



கிரிமினல்கள் போலியாக ஆக்சிஸ் பேங்கில் இருந்து அனுப்புவது போல ஈமெயில் அனுப்பி, பணத்தைத் திருடி இருப்பது தெரியவந்தது. கடந்த மாதத்தில் மட்டும் பெங்களூரில் இப்படி மொத்தம் பத்து கேஸ்கள். அதில் ஆக்சிஸ் பேங்க் கேஸ் ஐந்து!

(ஐ.டி. மினிஸ்டர் ராசாவிடம் புகார் கொடுத்தால் 'ஸ்பெக்டிரம்' டிடெக்டிவ் ஏஜென்சியில் சொல்லி திருடர்களைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்வாரா?)

''**நோ** பெங்களூரு! ஒன்லி பஃபெல்லோ (அமெரிக்கா)'' என்று இந்திய சாஃப்ட்வேர் நிறுவனங்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்த அமெரிக்க அதிபர் ஒபாமாவை சென்டிமென்டலாக டச் பண்ண முயற்சி செய்கிறார்கள் கர்நாடக மண்ணின் மைந்தர்கள். அண்மை யில் கர்நாடகாவில் உள்ள 'திப்பு (சுல்தான்) பிரசார சமிதி என்ற அமைப்பு' அமெரிக்க சுதந்திரப் போராட்டம் நடந்த சமயத்தில் கர்நாடகாவைச் சேர்ந்த திப்புசுல்தானும்



அமெரிக்காவில் இந்திய எம்.பி.க்கள்!

அக்கம்பக்கம்

அவரது அப்பா ஹைதர் அலியும் அப் போது நேரடியாகவும், பிரெஞ்ச் படைகள் மூலமாகவும் அளித்த உதவிகளையும், பிரிட்டிஷ் படைகளை எதிர்த்து தென் னிந்தியாவில் நடத்திய போராட் டத்தையும் நினைவுகூர்ந்து, ''இப் போது அமெரிக்கா, கர்நாடகாவுக்குப் பதில் உதவி அளிக்க வேண்டிய தருணம்'' என்று வலியுறுத்தி கடிதம் எழுதி இருக்கிறார்கள்.

(சென்டிமென்டெல்லாம் சினிமாவுல தான் வொர்க்அவுட் ஆகும் குரு!)

- பரத் ராம்

கிரகங்கள் பரிந்துரை

மேஷம்: உல்லாசமான வாரம். ஆடை, ஆபரண, அலங்காரப் பொருட்கள் வாங்குவீர்கள். மன உளைச்சல் தீரும். ஆரோக்கியம் சீராகும். நண்பர் / உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். உத்யோகத்தில் இடமாற்றம் ரெடி. சனிக்கிழமை தோறும் சனீஸ்வர பகவானுக்கு எள்ளு முடிச்சு போட்டு விளக்கேற்றி வழிபடவும்.

ரிஷபம்: வாக்குவாதம் தவிர்க்கவும். மகான்களின் சந்திப்பு கிட்டும். திடீர்ப் பிரயாணம் வந்து சேரும். கல்வி வளம் மேலோங்கும். வீட்டில் சுபகாரியம் கைகூடும். வேலையில் பளு அதிகரிக்கும். கைப்பொருள் மீது கவனம் தேவை. வாகனத்தில் செல்லும்போது உஷார். சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயர் வழிபாடு செய்து வரவும்.

மிதுனம்: தொழில் வழியில் இடமாற்றம் ஏற்படும். திருமணக் காரியம் தாமதமாகும். குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. குழந்தைகள் படிப்பில் கவனம் செலுத்தவும். ராகு / கேது வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

கடகம்: திருமணக் காரியம் கைகூடி வரும். வழக்கு வெற்றி அளிக்கும். மனக் குழப்பம் விலகும். வராத நிலுவைகள் வந்து சேரும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வர நற்பலன் பெருகும்.

சிம்மம்: தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உல்லாசமான வாழ்வு அமையும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். வாகன யோகம் உண்டாகும். மனபிரமை தீரும். வேலையில் பதவி உயர்வு கிட்டும். நீண்டகாலம் இழுத்து வந்த கோர்ட் விவகாரத்தில் வெற்றி பெறுவீர்கள். சனீஸ்வர வழிபாடு நற்பலன் அளிக்கும்.

கன்னி: கூட்டாளிகளை விட்டு விலகிப் போக நேரும். முழங்கால் சம்பந்தமான மருத்துவச் செலவு உண்டு. பூர்விகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். கொடுக்கல் வாங்கலில் உஷார். குரு / சனி வழிபாடு நற்பலனை அளிக்கும்.

துலாம்: ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். நீண்ட கால வழக்குகள் முடிவுக்கு வரும். கொடுக்கல் வாங்கலில் இருந்து வந்த சிக்கல் தீரும். வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரும். புதிய தொழில், புதிய உத்யோக முயற்சிகளைத் தள்ளிப் போடவும். திருமண முயற்சியை சற்று தள்ளி வைக்கவும். ராகு / கேது வழிபாடு செய்துவர நற்பலன் கிட்டும்.

விருச்சிகம்: புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு வந்து சேரும். உறவினர் / நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி கிட்டும். சுபகாரியப் பேச்சுவார்த்தை வெற்றி அளிக்கும். தந்தை வழி சொத்துகள் பாகப்

நடக்குமென்பார்;

பிரிவினை ஆகும். பணப் பிரச்னை தீரும். சனி வழிபாடு செய்து வர நற்பலன் கிட்டும்.

தனுசு : கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். திருமணம் தடை விலகி கைகூடும். நெருங்கிய கூட்டாளிகள் விட்டு விலகிப் போவார்கள். குழந்தைகள் வழியில் சுப நிகழ்ச்சி நடக்கும். வியாபாரம் ஏற்றத் துடன் இருக்கும். குழந்தைகள் படிப்பில் கவனம் செலுத்தவும். ராகு / கேது / குரு வழிபாடு நற்பலனை அளிக்கும்.

மகரம்: குடும்ப வாழ்வில் இருந்து வந்த மனக் கசப்பு விலகும். வேலையில் இருக்கும் தொந்தரவுகள் விலகிப்போகும். கல்வி வளம் மேலோங்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மனக்குழப்பம் தீரும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். சனி / ராகு / கேது வழிபாடு சிறந்தது.

கும்பம்: நண்பர் / உறவினர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். கடன் சுமை தீரும். சொத்து சுகம் வந்து சேரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வழக்கு வெற்றி அளிக்கும். சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

மீனம் : சந்தோஷமான வாரம். வழக்கு வெற்றி பெறும். பூர்விகச் சொத்து வந்து சேரும். தொல்லை இருக்காது. வேலையில் பதவி உயர்வு கிட்டும். சிலருக்குப் புதிய வேலை வந்து சேரும். ராகு / கேது வழிபாடு நற்பலனை அளிக்கும்.





நடக்கும்!

28.06.09 முதல்
04.07.09 வரை

ப்ளாக் அன்ட் வொயிட்

கதை-11

மீனாக்ஷியம்மாள் வாசலைப் பார்த்தாள். அவர் வருகிற அறிகுறியே தெரியவில்லை. காலை பத்தரைக்கெல்லாம் தெருவே தகித்துக் கிடக்கிறது. வெளியே காய்ந்த வெயில், வீட்டுக்குள் புழுக்கமாக உருவெடுக்கிறது. ஞானா அசந்து தூங்குகிறாள். பாவம் கர்ப்பவதி! அதற்காக, விசிறியை எவ்வளவு நேரம்தான் வீசிக்கொண்டிருக்க முடியும்? கைக்கு ஓய்வு கொடுத்த மாதிரியும் இருக்கும், அவர் வருகிறாரா என்று பார்த்த மாதிரியும் இருக்கும் என்றுதான் வெளியே வந்திருந்தாள்.

'நான் வாசப்படிலே நிக்கறேங்கறதுக்காக வந்துடப் போறாரா என்ன? அவருக்கு ஆயிரம் காரியங்கள்.' தெரு மண் புழுதியைக் கிளப்புகிற மாதிரி ஒரு காற்றடித்தது. மீனாக்ஷியம்மாள் கண்களை மூடிக் கொண்டாள். ஒரு நாய் இரைக்க, இரைக்க வேகமாக ஓடியது. அடுத்த வீட்டிலிருந்து விசாலாக்ஷி எட்டிப் பார்த்தாள்.

''என்ன மீனாக்ஷி! வாசல்லே நின்னுண்டு இருக்கே?'' என்றபடி அருகில் வந்தாள்.

''அவர் வர்றாரான்னு பாத்துண்டுருக்கேன்.'' பளீரென்ற புன்னகையை வரவழைத்துக் கொண்டு சொன்னாள் மீனாக்ஷியம்மாள். ''உள்ளே வாங்கோ!''

''வேண்டாண்டியம்மா. ரொம்பப் புழுங்கறது. காத்தாட வாசப்படிலேயே உக்காந்துக்கலாம். நோக்கு வேற ஜோலி ஒண்ணும் இல்லியே?''

இல்லை என்று தலையசைத்தபடி, விசாலாக்ஷிக்கு எதிரே அமர்ந்தாள் மீனாக்ஷியம்மாள். விசாலாக்ஷி வாயைப் பிடுங்குவதற்கு வந்திருக்கிறாள் என்பது அவளுக்குத் தெரிந்துதான் இருந்தது. அதற்காக





நெ. 12 பிச்சுப்பிள்ளை தெரு

• பாலு சத்யா •

அவளை வெறுத்து, ஒதுக்கிவிட முடிகிறதா என்ன? மீனாக்ஷியம்மாளால் யாரையும் வெறுக்கவும் முடியாது. மனிதர்களை வெறுப்பது 'அவருக்கு'ப் பிடிக்காது.

'மனுஷான்னா, ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரிதான் இருப்பா மீனாக்ஷி! கையில இருக்கற எல்லா விரலும் ஒரே மாதிரியா இருக்கு? அப்படி இருந்தா நாம சாப்பிட முடியுமோ, சொல்லு!' என்பார்.

''ஞானபாநு அச்சுக்குப் போயிடுத்தா?''

''இன்னும் இல்லே மாமி!''

''ஈஸ்வரா! நோக்கு ரொம்பக் கஷ்டகாலம்டியம்மா! போனதரம் பத்திரிகை அச்சடிக்கறதுக்கும், ஸ்டாம்ப் வாங்கறதுக்கும் பணம் இல்லாமதானே உன்னோட ரெட்டைவடம் சங்கிலியை வித்தே?''

''ஆமாம் மாமி.'' விசாலாக்ஷியின் கண்களை எதிர்கொள்ள முடியாமல் தலையைக் குனிந்துகொண்டாள் மீனாக்ஷியம்மாள்.

''பகவானே! இவ்வளவு கஷ்டத்துல பத்திரிகை நடத்தணுமாங்கறேன்?''

''அதெல்லாம் புருஷா காரியம் மாமி. நாம ஒண்ணும் சொல்லப்படாது.''

''வாஸ்தவம். பத்திரிகை இருக்கட்டும். உன்னோட ஆத்துக்காரரோட தங்கை ஞானம் பிரசவத்துக்கு வந்திருக்காளே! அவளுக்கு வேணுங்கறதை செய்யறதுக்காச்சும் பணம் வேணுமோல்லியோ?''

மீனாக்ஷியம்மாள் பதில் பேசாமல் தெருவைப் பார்த்தாள். இந்த சம்பாஷணை அவளுக்குப் பிடிக்கவில்லை என்பது விசாலாக்ஷிக்குப் புரிந்தது.

பேச்சை மாற்றினாள்.

''மீனாக்ஷி! நானே கேக்கணும்னு இருந் தேன். போன ஞானபானுவுல ஒரு கட்டுரை வந்ததே... யாரோ 'நித்யதீரர்'னு எழுதி யிருந்தாளே!... ரொம்ப நன்னாருந்தது. என் புள்ளையாண்டான்கூடச் சொன்னான். கட்டுரைன்னா இப்பிடி இருக்கோணும்னு. யாராம் அது?''

''நம்ம பாரதியார் மாமி.''

''யாரு? சுப்ரமணிய பாரதியா?''

''ஆமாம். அவரேதான். சரஸ்வதி, ஓர் உத்தம தேசாபிமானி, சாவித்திரி என்ற நிருபநேயர் இந்தப் பேர்ல எல்லாம் வேடிக்கைக் கதைகள், கவிதைகள் எழுதறதும் அவர்தான்.''

''அதானே பாத்தேன். இவ்வளவு அழுத் தமா பாரதியைவிட்டா வேற யாரால எழுத முடியும்? அது சரி. உன் ஆத்துக்காரரோட லேகிய வியாபாரமெல்லாம் எப்படிப் போயிண்டிருக்கு?''

''நன்னா போயிண்டிருக்கு. ஆனா, அதுல வர்ற காசையும் பத்திரிகைல போட்டுடறார். அவருக்கு லோகத்துல இருக்கற எதையும் விட தேசாபிமானம் முக்கியம்.'' இதைச் சொல் லும் போது மீனாக்ஷியம்மாளின் குரல் கம்மியிருந்தது.

''நெஜம்தான். பின்னே...? நாலு வருஷ மும் நாலு மாசமும் ஜெயில் தண்ட னைன்னா சும்மாவா? பிரிட்டிஷ்காரன் புழிஞ்சுட மாட்டான்? அதோட அவருக் குப் பெருநோய்ங்கற குஷ்டம் வந்துடுத்து. திருச்சி, சேலம்னு ரெண்டு ஜெயில்லயும் அவர் பட்ட கஷ்டம் அந்தக் கபாலீஸ் வரனுக்குத்தான் தெரியும். இவ்வளவு நடந்தும் மனுஷர் வீட்ல தங்கறாரா? கால்ல விஷ்ணு சக்கரத்தைக் கட்டிண் டாப்ல ஊர் ஊராப் போறார். கடற்கரைல கூட்டம் போடற எடத்துக்குத் 'திலகர் கட்டம்'னு பேர் வைக்கறார்...''

''கபாலீஸ்வரனை விடுங்கோ மாமி! அவர் வார்த்தைக்கு வார்த்தை அன்னை பராசக்தி, அன்னை பராசக்தின்னு சொல்லிண்டிருக்காரே!... அவ கடைக் கண்ணைக் காட்டப்படாதா...?'' மீனாக்ஷி யம்மாளின் முகம் காய்ந்து போன மல்லி கையைப் போல் வாடியிருந்தது. வம்பளப் பவர்களிடம்கூட தன்



மன ஆற்றாமையை வெளிப்படுத்த முடியும் என்கிற உணர்வு அவளைக் கொஞ்சம் வெட்கப்படச் செய்திருந்தது.

சரியாக அதே நேரம் அவர் வந்தார். விசாலாக்ஷி வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். ''நான் வரேண்டி மீனாக்ஷி!'' ஓட்டமும் நடையுமாக, வாசலில் இருந்து இறங்கி தன் வீட்டுக்குப் போனாள் விசாலாக்ஷி.



அவர் தலையில் அங்கவஸ்திரத்தை முண்டாசுபோலக் கட்டியிருந்தார். கையில் இருந்த ஊன்றுகோலைச் சுவரில் சாற்றி வைத்தார். நடையில் கம்பீரம் கொஞ்சம்கூடக் குறையாமல் இருந்தது. மீனாக்ஷி அம்மாளை நேருக்கு நேராகப் பார்த்தார்.

''ஏன் உன் முகம் வாடியிருக்கு?''

''வீட்ல மணி அரிசியில்லே! ஞானம், கார்த்தால பழைய சாதம் சாப்டுட்டு சுருண்டு படுத்திருக்கா. ஆத்துல தம்பிடி இல்லே! என்ன பண்ணலாம் சொல்லுங்கோ!''

அவர் மனம் விட்டுச் சிரித்தார். ''இது தானா உன் பிரச்னை? அன்னை பராசக்தி, லோகத்தையே ரக்ஷிப்பவள்... அவள் இருக்கும்போது நமக்கேன் கவலை? அதைரியப்படாதே!''

வாசலில் போஸ்ட்மேனின் குரல் கேட்டது. ''ஐயா! மணியார்டர்!''

அவர் வாசலுக்கு விரைந்தார். ''என்ன?''

''ஞானபாநு மேனேஜர் பேருக்கு மணியார்டர் வந்திருக்குங்கய்யா!''

''மீனாக்ஷி! பராசக்தி வாசலில் நிக்கறா பாரு!'' அவர் குரல் கொடுத்தார். மீனாக்ஷியம்மாள் கையெழுத்து போட்டுப் பணத்தை வாங்கினாள். அவள்தான் ஞானபாநு பத்திரிகையின் மேனேஜர், காரியதரிசி, குமாஸ்தா எல்லாம். போஸ்ட்மேன் போனதும் அவர் கேட்டார்: ''எவ்வளவு வந்திருக்கிறது மீனாக்ஷி?''

''ஒண்ணே முக்கால் ரூபாய்.''

''அப்பா!... இன்றைய பாடு கழிந்தது.''

பிச்சுப் பிள்ளைதெரு கோடை வெயிலில் சூடேறிக் கிடந்தது. பைக்கை நிறுத்தியதும் தெருவோரத்தில் படுத்திருந்த கறுப்பு நாய் தலை உயர்த்திப் பார்த்தது. வினோத் ஹெல்மெட்டைக் கழற்றினான். பின் சீட்டிலிருந்து இறங்கிய முத்து கணேஷ் தயக்கமாகப் பார்த்தார்.

''என்ன ஸார்! கண்டிப்பா விசாரிக்கணுமா?''

''ஆமாங்க. என் ப்ராஜக்டுக்கு இது ரொம்ப முக்கியம். அவர் வீட்டை ஒரு ஃபோட்டோவாவது எடுக்கணும். அப்போதான் பி.எச்டி. வைவாவுல அக்ஸெப்ட் பண்ணுவாங்க.''

முத்துகணேஷ் பத்திரிகைக்காரர். மயிலாப்பூர்வாசி. அதன் இண்டு இடுக்



இங்குதான் சுப்ரமணியசிவா இருந்தார் என்று அந்தப் பெரியவர் காட்டிய வீடு ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டால் ஆன கூரையைக் கொண்டது!

கெல்லாம் அறிந்தவர். அதனால்தான் அவரைக் கூட்டி வந்திருந்தான் வினோத். அவர்கள் நின்ற இடத்துக்கு நேர் எதிரே ஓர் ஓட்டு வீடு. அதன் சுவர்கள் எப்போது விழுமோ என்கிற நிலையில் ஓடுகளைத் தாங்கிப் பிடித்தபடி பலகீனமாக நின்றிருந்தன. வாசலில் சட்டையில்லாமல், கைலியோடு உட்கார்ந்திருந்தார் ஒருவர்.

''ஸார்! இங்க சுப்ரமணிய சிவா வீடு எங்கருக்கு?'' முத்துகணேஷ் கேட்டார்.

''சிவாவா? யாரு...? பிளம்பர் சிவாவா?''

''இல்லைங்க. தியாகி... சுப்ரமணிய சிவா!''

''தியாகியா? தெரியலைங்களே! அந்தா... அங்க அயர்ன் கடை இருக்கு பாருங்க. அங்க கேளுங்க. அவருக்கு கரெக்டா தெரியும்.''

வினோத் பைக்கை உருட்டிக்கொண்டு அயர்ன் கடைக்குப் போனான். பீடி பிடித்துக் கொண்டிருந்த கடைக்காரர் யோசித்துவிட்டு, ''ரொம்பப் பழைய ஆளுங்கன்னா, அந்தா... அந்த எதுத்த வீட்டுக்காரருக்குத்தான் தெரியும். அவரு ரொம்ப வயசானவரு. அவர்கிட்ட கேளுங்க!'' ஒரு வீட்டைக் காட்டினார் அயர்ன் கடைக்காரர்.

கதவைத் தட்டியதும் ஒரு எழுபது வயதுப் பெரியவர் வந்தார். விசாரித்ததும், ரொம்ப யோசனைக்குப் பிறகு பக்கத்து வீட்டைக் காட்டினார். ''இங்கதான் சுப்ரமணிய சிவா இருந்தாரு'' பதிலை எதிர்பாராமல் கதவை மூடிக்கொண்டு போனார் அவர்.

அவர் காட்டிய வீடு ஒரு ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த வீடு. வெள்ளையாகச் சுண்ணாம்பு அடித்திருந்தது. பக்கத்திலேயே ஒரு காரை நிறுத்தும்படியான கேரேஜ். அதன் கதவு மூடிக் கிடந்தது. வீட்டுக்குள் இருந்து ஒரு பெரியவர் பக்கெட் நிறைய துணிகளை எடுத்து வந்து, கொடியில் காயப் போட்டுக் கொண்டிருந்தார்.

''என்ன சார்! அவர்கிட்ட பேசலாமா?'' முத்துகணேஷ் கேட்டார்.

''வேணாங்க. இதுதான் அவர் இருந்த வீடான்னு கன்ஃபார்மா தெரியல. பேசுறது வேஸ்ட்.''

''ஆமா ஸார். இந்தக் காலத்துல தியாகின்னா யாருக்குத் தெரியும்? நடிகை வீடுன்னா தம்மாத்தூண்டு குழந்தைகூட அடையாளம் காட்டும்'' என்றார் முத்து கணேஷ்.

இருவரும் அந்த இடத்தைவிட்டு நகர, பிச்சுப்பிள்ளை தெரு மௌனத்தில் ஆழ்ந்திருந்தது. ●

மரபின்மைந்தன் முத்தையா



சேத்துமடைக்கு வருவாயா சிவாஜி..?

குற்றாலம் என்ற சொல்லைக் கேட்டாலே மனத்துக்குள் குளிரெடுக்கும்; குதூகலம் பிறக்கும். வனங்கள் சூழ்ந்த பகுதியாகிய குற்றாலம், சிவாஜிக்கு மிகப் பிரியமான இடங்களுள் ஒன்று. குற்றாலம் என்றாலே சிவாஜி குஷியாகக் கிளம்ப இன்னொரு காரணம் வேட்டைக்கான வாய்ப்பு.

முத்துமாணிக்கத்துடனும் மற்ற நண்பர்களுடனும் குற்றாலத்தில் அவர் கலந்து கொண்ட வேட்டைகள் ஏராளம். சிவாஜியின் இதயத்தை அன்பால் வேட்டையாடிய இன்னொரு மனிதரும் அந்தப் பகுதியில் இருந்தார். அவர் பெயர் ஹரிராம் சேட். புகழ்பெற்ற சொக்கலால் பீடி நிறுவன உரிமையாளரான இவர் மிகப் பெரிய கலாரசிகர்.

அவருக்கு சிவாஜி என்றால் உயிர். மின்சார இணைப்பு சரியாக வழங்கப்படாத அந்தக் காலத்தில், ஐந்தருவியில் ஜெனரேட்டர் வைத்து இரவு நேரங்களில் சிவாஜியும் நண்பர்களும் மணிக்கணக்கில் குளிப்பதற்கு ஏற்பாடு செய்வார். படப்பிடிப்புக்காகவோ வேட்டைக்காகவோ சிவாஜியும் முத்து மாணிக்கமும் குற்றாலம் பகுதிக்கு வரும் போதெல்லாம், தன்னுடைய விருந்தினர்களாகத் தங்கவைத்து மகிழ்வார்.

அப்படியொருமுறை குற்றாலத்தில் தங்கியிருந்த நேரம் சிவாஜி, என்.எஸ். கிருஷ்ணன், முத்துமாணிக்கம் மற்றும் சில நண்பர்கள் மத்தியில் நாட்டுப்புற இசைக் கலைஞர் ஒருவர் பாடல்கள் பாடிக் காட்டினார். அந்த ஏழைக் கலைஞனின் திறமையில் இதயம் பறிகொடுத்த என்.எஸ்.கே. தம் சட்டைப் பையைத் தடவினார். பணமில்லை. சிவாஜியை நிமிர்ந்து பார்த்தார். புரிந்துகொண்ட சிவாஜி பணத்தை எடுத்துக்கொண்டு வந்து என்.எஸ்.கே. கைகளில் கொடுத்து அந்த ஏழைக் கலைஞருக்குத் தரச் சொன்னார்.

சிவாஜி, முத்துமாணிக்கம் என்ற இரண்டு மகத்தான மனிதர்களிடையே தழைத்த நட்பு, குடும்பம் - நண்பர்கள் என்று எல்லா வட்டத்திலும் விரிவடைந்தாலும் கூட, சிவாஜிக்கு திருப்தி ஏற்படவில்லை. ''நமக்குப் பின்னாலும் நம் குடும்பங்க ஒண்ணா இருக்கணும் முத்து'' என்று அடிக்கடி சொல்லிவந்த சிவாஜியின் உள் மனத்தில் ஒரு திட்டம் இருந்தது. அதை வெளிப்படுத்தினால், நண்பர் முத்து மாணிக்கம் எப்படி எடுத்துக் கொள்வாரோ

என்ற தயக்கத்திலேயே சொல்லாமல் தள்ளிப்போட்டுக் கொண்டு வந்தார்.

குடும்ப உறுப்பினர்கள் மூலம் அதைக் கேள்விப்பட்ட முத்துமாணிக்கம், ''உங் களுக்குச் சரின்னு தோணுறதைச் செய்யுங்க கணேசன்'' என்றதும் சிவாஜிக்கு சொல்ல முடியாத சந்தோஷம். சகோதரர் போல் பாவித்து சுகதுக்கங்களில் உடனிருந்து வந்த நண்பர் முத்துமாணிக்கத்தை, சம்பந்தி யாக்கி மகிழ்ந்தார் சிவாஜி.

முத்துமாணிக்கத்தின் சகோதரர் இரத் தினத்தின் மகளை சிவாஜியின் தம்பி சண் முகத்தின் இளைய மகனுக்கு மணமுடித்து மகிழ்ந்தார் சிவாஜி. தங்கள் தலைமுறை யைத் தாண்டி இந்த வாஞ்சைமிக்க உறவு வேர்விட வேண்டும் என்ற அந்த மகா கலைஞனின் மனக்கணக்கு நிறைவேறி யது.

உடல்நலக் குறைவால் சிவாஜி சிரமப் பட்ட வேளைகளில் தன் முடிவுக் காலம் நெருங்குவதை முன்கூட்டியே தெரிந்து கொண்டவர் போல தன் ஆருயிர் நண்பர் முத்துமாணிக்கத்திடம் அந்த அச்சத்தை வெளிப்படுத்தினார். ''நான் கழட்டிக்கு வேன் போலிருக்குங்க முத்து'' என்று அவர் அடிக்கடி சொல்ல, அதிர்ந்து போனார் முத்துமாணிக்கம். ''நாம சேத்துமடைக்குப் போயிடலாம். அங்கே போனா நான் நல்லா யிடுவேன்'' என்று சிவாஜி சொன்னதும், உணர்ச்சிவசப்பட்ட நிலையில், ''கிளம் புங்க போகலாம்'' என்று தயாரானார் முத்து மாணிக்கம். ஆனால், அவசரமாக அதி நவீன மருத்துவச் சிகிச்சை தேவைப்பட் டால் சேத்துமடையில் அது சாத்தியமா?

இந்தக் கேள்வியில் இருந்த நியாயம் சேத்துமடைப் பயணத்தைத் தவிர்க்க வைத் தது. சிவாஜியை அப்போலோவில் சேர்த்து விட்டு அவசர வேலையாக வேட்டைக் காரன்புதூர் வந்தார் முத்துமாணிக்கம். ஓரிரு நாட்களிலேயே 'சிவாஜி உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாய் இருக்கிறது' என்று செய்தி வந்தது.

உள்ளம் பதற கோவை விமான நிலை யம் வந்து சென்னைக்கு விமானம் ஏறும் முன்பே அந்த மகா கலைஞனின் மறை வுச் செய்தி முத்து மாணிக்கத்தின் இதயத்தை இடிபோல் தாக்கியது.



"நான் கழட்டிக்குவேன் போலிருக்கு முத்து" என்று அவர் அடிக்கடி சொல்ல, அதிர்ந்து போனார் முத்துமாணிக்கம்.

கனத்த மனத்துடன் சென்னை சென்று இறங்கினார். தம் இதயம் நிறைந்த நண் பருக்கு இறுதி அஞ்சலி செலுத்த அன்னை இல்லத்துக்குள் அவர் நுழைந்தபோது, நடிகைகள் மஞ்சுளாவும் மனோரமாவும், ''அண்ணா! இப்படி விட்டுட்டீங்களே!'' என்று குமுறியபோது, ''நாம் பார்த்து நிறுத்துகிற சமாச்சாரமா இது? என் கையில் இருந்தால் போக விட்டிருப்பேனா?'' என



'நச்' கார்னர்

இந்த வாழ்க்கைப் பாதைக்கு நாம் ஒரு யாத்ரிகளைப் போல வருகிறோம். ஆனால், எல்லாவிதமான சுமைகளையும் ஏற்றுக் கொண்டு 'போர்ட்டர்'களைப் போல வாழ்கிறோம்.

- பாலு, சென்னை

80 நாவல்கள் மற்றும் 12 நாடகங்கள் எழுதிய துப்பறியும் கதைகளின் ராணி என புகழப்பட்ட நாவலாசிரியை அகதா கிறிஸ்டிக்கு நாவல்கள் எழுத ஐடியா கிடைத்தது எப்போது தெரியுமா? அவர் வீட்டில் பாத்திரங்கள் தேய்த்துக் கழுவிக் கொண்டிருக்கும்போதுதானாம்!

- கோவி.இராஜேந்திரன், மதுரை

கதறியபடி சொன்னார் முத்து மாணிக்கம்.

வேட்டையாடும் விருப்பத்தில் அறிமுக மாகி தன் இதயத்தையே அன்பால் வேட்டையாடிய அந்த அற்புதமான கலை ஞன், இதயம் கலந்த அன்பின் விளை வாகத் தன்னை எப்போதும் அருகில் வைத் துப் பார்க்க ஆசைப்பட்ட அந்த அபூர்வ மான தோழனின் இறுதி ஊர்வலம்.

மின்மயானத்தை ஊர்வலம் நெருங்கிய நிமிஷங்களில் முத்துமாணிக்கம் நினை வில் சிவாஜி அடிக்கடி சொன்ன வாசகம் மின்னியது. ''முத்து! யாரோட தோள் யாருக்கோ!'' ஒருவர் முந்திக் கொண்டால் இன்னொருவர் தோள் இறந்தவரைச் சுமக்க வேண்டும் என்பது அந்த இரண்டு நண்பர் களுக்கும் இடையில் இருந்த எழுதப்படாத ஒப்பந்தமாயிற்றே!

சிவாஜியின் மூத்த மகனை அழைத்துச் சொன்னார் முத்துமாணிக்கம். குளிரூட்டப் பட்ட பெட்டியில் உயிரற்ற சடலமாய் உறங்கிக்கொண்டிருந்த உயிர் நண்பனை, தம் தோள்களில் சுமந்து அவரது கடைசி ஆசையையும் நிறைவேற்றினார் முத்து மாணிக்கம்.

'தோள் கொடுப்பான் தோழன்' என்ற முதுமொழிக்கு, கண்ணீரால் உரையெழுத வைத்த காலத்தைச் சபித்தபடி மகா கலைஞ னுக்கு விடைகொடுத்தார்.

தோளிலிருந்த சுமையை இறக்கி விட் டாரே தவிர, தன் மனத்தில் சுமந்தபடியே வாழ்ந்து வருகிறார் முத்துமாணிக்கம். அவரது நினைவுகளில் சிவாஜி மறைந்த தாகவே எந்தப் பதிவும் இல்லை. எந்த நேரத்திலும் வருகை தருவார் என்கிற எதிர் பார்ப்போடு சிவாஜிக்காக இன்னும் காத் திருக்கிறது அவருக்குப் பிரியமான சேத்து மடை பண்ணை வீடு!

(நிறைந்தது)

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடறோம்!

ஆமாம்! உங்கள் பாண்டிக்கு 'கல்கி' குழு, நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்?

ஆனா சில கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்பு மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்பு களுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- பாண்டிச்சேரி வட்டாரத்தின்...

பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ்

ஆன்மிக, வியாபார, சுற்றுலா தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன்

சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல்

நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்

என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசி தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 25.7.09

கலக்க வருதுப்பா கல்கி
பாண்டிச்சேரி

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆஹாவில் பார்த்தவர். நடுவே வசந்த் படத்தில் தலைகாட்டினார். இப்போது புது மனிதனாக நியூட்டனின் மூன்றாம் விதி படம் வழியாக கோடம்பாக்கத்துக்குள் நுழைந்திருக்கிறார் ராஜீவ் கிருஷ்ணா. ஏன் இந்த இடைவெளி என்றால் வித்தியாச மான காரணம் சொல்கிறார்.

''ஆஹா வாய்ப்பு கிடைச்சது நடிகர் அஜித் மூலமாகத்தான். நான் பெங்களூர்க் காரன். அஜித் என் நண்பர். சுரேஷ் கிருஷ்ணா 'ஆஹா' படத்துக்கு ஹீரோ தேடறார்னு தெரிஞ்சு அவர்தான் எனக் காகப் பேசினார். ஆனா, நான் சினிமாவுல நடிக்கப்போனது என் வீட்ல பிடிக்கலை. என் வாழ்க்கையைத் தொலைச்சுடு வேன்னு பயந்தாங்க. 'ஆஹா' வெளியான சமயம் தமிழ் சினிமாவுல ஸ்டிரைக் நடந் தது. நாலு மாசம் எந்தப் பட ஷூட்டிங்கும் நடக்கலை. எனக்கும் எந்தப் படத்தைத் தேர்வு செய்யறதுன்னு குழப்பம். நல்ல வாய்ப்புகள் அமையலை. சரி, அப்பா, அம்மாவைத் திருப்திப்படுத்தலாம்னு மறுபடியும் பெங்களூருக்கே திரும்பி, வேலைக்குப் போக ஆரம்பிச்சேன். ஆனாலும் சினிமா என்னை விடவே யில்லை'' என்று புதிர் போடுகிறார்.

''நான் நிறைய சினிமா பார்ப்பேன். அந்த விதத்துல எனக்கு திரைக்கதை அமைக்கறதுல ஆர்வம் வந்துச்சு. இந்த முறை வீட்ல தடுக்கலை. மும்பை போனேன். சினிமாவுக்குப் பின்னாடி வேலை பார்க்கறதுல எனக்கு ஆர்வம் அதிகமாச்சு. என் திரைக்கதை திறமையைப் பார்த்து ரெண்டு ஹிந்திப் பட வாய்ப்புகள் வந்தன. தமிழ் சினிமா சம்பந்தம் இல்லாம மும்பையில வேலை பார்த்துட்டு இருந்த போதுதான் 'நியூட்டனின் மூன்றாம் விதி'னு ஒரு கதை இருக்கு பாஸ்னு என் னைத் தேடி வந்தார் இயக்குநர் தாய்முத்து செல்வம்.''

வில்லன் ஏன்?

''சினிமாவுல கதைதான் ஹீரோ. அது தான் மொத்தப் படத்தையும் தீர்மானிக் குது. இப்போ வில்லனா நடிக்கறேன். பொருத்தமான கதை அமைஞ்சா ஹீரோவா கூட நடிக்கலாம். தமிழ் சினிமாவுல நடிக்க வந்ததால் நான் ஹிந்தி சினிமாவை மறக்கலை. அங்கே மறுபடியும் சில கதை களுக்குத் திரைக்கதை அமைக்கற வேலை யில மும்முரமா இருக்கேன்'' என்கிற ராஜீவ் கிருஷ்ணா, இப்போது அஜித் நடிக்கும் அசல் படத்தில் வில்லனாக நடிக்கிறார்.

வில்லனாக நடிக்கும் ராஜீவ் கிருஷ்ணா ஐ.பி.எல். போட்டிகளைத் தம் வில்லனாக நினைக்கிறார். ''நான் திரைக்கதை செஞ்ச ரெண்டு ஹிந்திப் படங்களும் போன வருஷம் நடந்த ஐ.பி.எல். போட்டி சமயம் ரிலீஸாகி சரியா போகலை. இப்போ நியூட்டனின் மூன்றாம் விதியும் ஐ.பி.எல்.லால சரியா போகலை. நல்ல படங்கள் கிரிக்கெட் மேட்சுகளால தோல்வியடையுதேன்னு வருத்தமாதான் இருக்கு'' என்கிற ராஜீவ் கிருஷ்ணா இன்னமும் பேச்சலர்தான். ''வாழ்க்கையில ரிஸ்க் எடுக்க முடியாது. முதல்ல தொழில்ல எவ்வளவு தூரம் முன்னேறுறோம்கிறதுதான் முக்கியம். அடுத்த வருஷம் கட்டாயம் மாப்பிள்ளை யாயிடுவேன்'' என்கிறார்.

இந்திய அளவில் சிறந்த திரைக்கதை கொண்ட படங்கள் எவை என்றால் ராஜீவ் கிருஷ்ணாவின் பட்டியலில் 'கஜினி' முதலிடம் பிடிக்கிறது. ''ஹிந்தியில் சமீபத்தில் வெளிவந்த 'தேவ் டி' நல்ல முயற்சி. தமிழ்ல 'சென்னை 28', 'பருத்தி வீரன்'!'' என்கிறார்.

- செந்தில்


ஐ.பி.எல்.
வில்லன்!

ராகவன்

இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி [ஐ.டி] துறையில் வேலை செய்யும் இரவு நேர ஊழியர்கள் கொலை செய்யப்படுகிறார்கள் வரிசையாக. கொலையாளி யார் என்பதே படத்தின் கதை.

கிராமப் பள்ளியில் படிக்கும் ராகவன், சிறந்த மாணவன் என பெயர் எடுக்கிறான். மோசமான குடும்பப் பின்னணியோடு, வறுமையும் துரத்த அப்பாவின் அறிவுரையோடு நகரத்தில் இருக்கும் உறவினரைப் பார்க்க வருபவன், தொடர்ந்து மனஉளைச்சலுக்கு ஆளாகி கொலையாளியாகிறான். அவனுடைய ஐ.டி. கனவும் தகர்ந்து போக, தவறான வழியில் செல்லும் ஊழியர்களைத் தண்டிக்கிறான். இறுதியில் அவனது கனவு நிறைவேறியதா என்பதை இயக்குநர் பரந்தாமன், சொல்ல முன்வந்திருக்கிறார்.

தியேட்டரில் படம் ஆரம்பித்த கொஞ்ச நேரத்திலேயே, நமக்கு பரங்கிமலை ஜோதியும், கெயிட்டி தியேட்டரும் ஞாபகத்துக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. இயக்குநர் ஆபாசத்தின் எல்லையை அநாயாசமாகத் தாண்டுகிறார். எல்லா துறைகளிலும் நல்லதும், கெட்டதும் உண்டு, அது ஐ.டி.யிலும் நடக்கிறது. அதற்காக, 'ஐ.டி.' என்றாலே ஏதோ 'விபசார விடுதி' போல ஒரு தோற்றத்தை

முதல்வரின் கொலைக் குற்றத்தில் எதிர்பாராதவிதமாக மாட்டிக்கொண்ட இரண்டு ஜோடிகள், அதிலிருந்து எப்படி தப்பித்து வெளியே வந்தார்கள் என்பதை சுவாரஸ்யத் தோடு சொல்ல முன்வந்திருக்கிறது முத்திரை.

பிக்பாக்கெட் திருடர்களாக டேனியல் பாலாஜியும், நிதின் சத்யாவும். பாரில் டான்ஸராக இருக்கும் லக்ஷ்மிராயை தீவிரமாகக் காதலித்து உருகுகிறார் டேனி. இவருக்கு 'அழகு' பாத்திரம். உடம்பு முழுக்க டாட்டூஸுடன், கண்களில் எப்போதும் சோகத்தை ஒளித்து வைத்துக் கொண்டு பரபரவெனத் திரிகிறார்.



கோயில் உண்டிய லைத் திருடிவிட்டுத் தப் பிக்கும் நிதினை, அவரது அம்மாவோடு ஊரே சேர்ந்து துரத்த... 'அப்பன் பெத்த புள்ளைய... இப்படி வெப்பன் வைச்சுகிட்டுத்

நமக்கு அளிக்க முன்வருகிற இயக்குநருக்கு, வெறும் ஏடுகளில் வந்த செய்திகள் மட்டுமே கண்ணுக்குத் தெரிந்திருக்கின்றன. இரவு முழுக்க கண் விழித்தும், கடுமையான வேலைப்பளுவோடும் தமது குடும்பத்தின் முன்னேற்றத்துக்காக பணியாற்றும் இளைஞர், இளைஞிகள் அதிகம்.



பொருளாதாரத்துக்காக அவர்கள் படும் அவதியும், நெருக்கடிகளும் விரிவாக அலசப்படவேண்டியவை. இயக்குநர் 'கள ஆய்வு' செய்து படத்தை எடுக்காமல் விட்டதால் வெறும் ஆபாசத்தோடு படம் தொக்கி நிற்கிறது.

ராகவன் - ரசனைக்கு அல்ல!

முத்திரை

துரத்துறியே...' என அவர் பேசும்போது, விழுந்து சிரிக்கத் தோன்றுகிறது. நகைச்சுவை ஹீரோவுக்கு இதோ இன்னொரு ஸ்டார் ரெடி!

பணத்துக்காகத் தனக்குத் தாலி கட்டிவிட்டு விலகும்போதும், தான் விரும்பிய பொருட்களை ரகசியமாகப் பரிசளித்தபோதும் முகத்தில் வெவ்வேறு ரசனையைப் பரவவிடுகிறார் லக்ஷ்மிராய். படத்தில் ஆறுதலான விஷயம் இது! ஆர்த்தி கதாபாத்திரத்தில் வரும் அறிமுகம் மஞ்சரி சாக்லேட் பேபி. குழந்தை யார் எது சொன்னாலும் அப்படியே நம்பி விடுவது அழகு.

நேர்மையான போலீஸ் கமிஷனர் 'கிஷோர்', தடம் மாறியதற்கான காட்சியமைப்புகள் இல்லாமல் திடீரென அவரை சக அதிகாரி சுடுவது நெருடல். விறுவிறுவென நகர வேண்டிய திரைக்கதையில், இடையிடையே பாடல்கள் நுழைந்து பிரேக் போட்டு நிறுத்துகின்றன. ஆடை வடிவமைப்பில் 'அனீஸ்' காட்டியிருக்கும் கஞ்சத்தனத்தைத் தவிர்த்திருக்கலாம். படத்தின் ஒளிப்பதிவும், இயக்கமும் மேற்கொண்டவர்கள் கேமரா கவிஞர் ஜீவாவின் உதவியாளர்களாம்.

முத்திரை சரியாகப் பதியவில்லை!

- கிராபியென் ப்ளாக்

அபிராமி



திருப்பரங்கோவில் கிராமத்து வீதி ஒன்றில், ஒரு பழைய ஓட்டு வீட்டின் கொல்லைப்புறத்துக் கிணற்றங்கரையில் அபிராமியை இப்போது நாம் பார்க்கிறோம். கிணற்றைச் சுற்றி ஒரு வரிசை கமுகு மரங்களும் அவற்றுக்கு அப்பால் சில தென்னை மரங்களும் வளர்ந்து அந்த இடத்தைக் குளிர்ச்சியாகச் செய்து கொண்டிருக்கின்றன. சூரியகிரணம் ஒவ்வொன்று அங்கங்கே எட்டிப் பார்க்கின்றது. சில நாரத்தை மரங்களும் இருக்கின்றன. செழித்து வளர்ந்த ஒரு பம்பளிமாஸ் மரத்தில் பெரிய பெரிய பம்பளிமாஸ் பழங்கள் தொங்குகின்றன. கிணற்றில் ஏற்றம் போட்டு இருக்கிறது. கிணற்றின் கைப்பிடிச் சுவரிலே அபிராமி உட்கார்ந்திருக்கிறாள். அவளுடைய வாய் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருப்பதையும், தலை அசைவதையும் பார்த்தால், ஏதோ பாட்டு 'கவனம்' செய்யும் முயற்சியில் இருக்கின்றாள் என்று ஊகிக்கலாம்.

கமுகு மரத்தில் எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கும் குயில் ஒன்று விட்டு விட்டுப் பாடுகிறது. இடையிடையே அபிராமி நிமிர்ந்து பார்க்கிறாள். குயில் இருக்கும் இடம் தெரியவில்லை.

'சட சட சட'வென்ற சப்தத்துடன் திடீரென்று பெருந்தூறல்கள் விழுகின்றன. "அடாடா! முற்றத்தில் அப்பளம் காய்கிறதே?" என்று கூவிக்கொண்டு, அபிராமி எழுந்து உள்ளே ஓடுகிறாள். முற்றத்தில் உலர்த்தியிருந்த அப்பளங்களை அவசர அவசரமாக எடுத்துக்கொண்டு போய், கூடத்தில் இருந்த கிராமஃபோன் பெட்டிக்கு அருகில் வைக்கிறாள். எல்லா அப்பளங்களையும் எடுத்து வைத்தாளோ இல்லையோ உடனே தூறல் நின்று பளீரென்று வெயில் காய்கிறது. அபிராமி தனக்குள் சிரித்துக்கொண்டு, "அட நாசமாய்ப் போகிற வெயிலே!" என்று உரத்து வைகிறாள்.

அப்போது, "அது யார் நாசமாய்ப் போகிற பயல்!" என்று சொல்லிக் கொண்டே முத்தையன் உள்ளே வந்தான். அபிராமி அவனைப் பார்த்து மறுபடியும் சிரித்துவிட்டு, "பயல் இல்லை, அண்ணா! வெயில் - வெயிலை வைதேன்!" என்று கூறினாள். அவனுடைய கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் கூடத்தில் கிராமபோனுக்குப் பக்கத்தில் கிடந்த பலகையில் உட்கார வைத்து, "அண்ணா இந்தப் பாட்டைக் கேளு!" என்று சொல்லிப் பாடத் தொடங்கினாள்.

அவள் பாடி முடித்ததும் முத்தையன், "அடாடா! நேற்றுத்தானே பிலஹரி பிளேட் வாங்கி வந்தேன். அதற்குள்ளே அந்த மெட்டை அவ்வளவு நன்றாய்ப் படம் பிடித்தது போல் பாடுகிறாயே? 'கவனம்' கூடத்தான் எவ்வளவு நன்றாயிருக்கிறது! நம்முடைய வீட்டுக் கொல்லை இவ்வளவு அழகாயிருப்பது எனக்கு இதுவரையில் தெரியாது. நான் சொல்கிறேன், கேள், அபிராமி! ஒருநாளைக்கு நான் நாடகத்தில் சேர்ந்துவிடப் போகிறேன். அப்போது நீயே எனக்கு எல்லாப் பாட்டுக்களும் இட்டுக் கட்டித் தரலாம்..." என்றான்.

அமரர் கல்கி


வண்ணத் தூரிகை



அபிராமி வெட்கத்துடன் முகத்தைக் கையினால் மறைத்துக் கொண்டு, ''போ, அண்ணா!'' என்றாள்.

''என்னைப் 'போ', 'போ' என்று சொல்லிக் கொண்டிருந்தாயோ. ஒருநாளைக்கு நான் போயே போய் விடுவேன். அப்புறம் திரும்பி வரவே மாட்டேன்'' என்றான் முத்தையன்.

('கள்வனின் காதலி' நாவலிலிருந்து...)


ஃபினிக்ஸ் தருணம்!
க.நா.கண்ணன்
PAKISTAN

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் மண்டியிட்டு மண்ணுக்கு முத்தமிட்டார்கள். மைதானம் முழுக்க பச்சைக் கொடி உற்சாகமாக உயர்ந்து பறந்தது. இந்தியாவுக்கு எப்படி 'ஜெய் ஹோ, சக் தே இந்தியாவோ' அதுபோல பாகிஸ்தானுக்கு 'தில் தில் பாகிஸ்தான்' பாடல். கூடவே ஹை டெசிபலில் பாகிஸ்தான் சிந்தாபாத் (வாழ்க பாகிஸ்தான்). இறைவனுக்கு நன்றி சொல்லிய அடுத்த நொடி கண்ணீரோடு அஃப்ரிடி நோக்கி ஓடினார்கள். அந்த ஓட்டத்தில் ஒரு வெறித்தனம் இருந்தது.

எதிரிக்குக்கூட இந்தக் கஷ்டம் வரக்கூடாது என்று சொல்வோம். அப்படியொரு நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருக்கிறது பாகிஸ்தான் கிரிக்கெட் அணி. வன்முறை, தீவிரவாதம் என்று முத்திரையிட்டு பாகிஸ்தானில் நடக்க வேண்டிய சாம்பியன் டிராபியை நிறுத்திவைத்தது சர்வதேச கிரிக்கெட் வாரியம் (ஐ.சி.சி.) இந்திய அணி பாகிஸ்தான் செல்லமாட்டேன் என்று அடம்பிடித்தது. ஆஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாட்டாமை கிரிக்கெட் அணிகளுக்கு, பாகிஸ்தான் எப்போதுமே நரகம்தான். 'நண்பா கவலைப் படாதே' என்று தோளணைத்து பாகிஸ்தான் மண்ணில் கிரிக்கெட் ஆடவந்த இலங்கை அணியினரின் பேருந்து மீது ராக்கெட் லாஞ்சர் வீசப்பட்டது. அந்தச் சம்பவம் நடந்த சில நாட்களில் பாகிஸ்தானில் நடக்கவிருந்த 2011 உலகக்கோப்பை ஆட்டங்கள் ரத்து செய்யப்பட்டன. இனிமேல் பாகிஸ்தான் மண்ணில் கிரிக்கெட் ஆடமாட்டோம் என்று சர்வகிரிக்கெட் உலகமும் ஒருமித்த குரலில் முடிவு செய்தது. பாகிஸ்தான் வீரர்களுக்கு ஐ.பி.எல்.லில் இடமில்லை' என்றார் மோடி. நொடிந்துபோனது பாகிஸ்தான் கிரிக்கெட் அணி.

மூளையில்லாத கிரிக்கெட் வீரர் என்று சில மாதங்களுக்கு முன்னால்தான் ஜெஃப்ரி பாய்காட், அஃப்ரிடியை விளாசினார். இந்த உலகக்கோப்பை போட்டியின் ஆரம்ப ஆட்டங்களில் அதை நிரூபித்தார் அஃப்ரிடி. மூன்று முட்டைகள் போட்டு பாகிஸ்தான் அணியை நெளியச் செய்தார். ஆனால் அவர்மீது கை வைக்கமுடியாது. இந்தியாவுக்கு சச்சின் போல பாகிஸ்தானுக்கு அஃப்ரிடி. இந்த மூளையில்லாத வீரர் அரையிறுதி, இறுதிப் போட்டிகளில் பக்குவமாக ஆடினார். பந்து வீச்சில் சரளமாக விக்கெட்டுகள் விழுந்தன. முக்கியமாக பேட்டிங்கில் நிறைய சிங்கிள்ஸ் எடுத்தார். உணர்ச்சிவசப்படாமல் ஆடி பாகிஸ்தான் கோப்பையை வெல்ல சூத்திரதாரியாக விளங்கினார்.

தீயிலிருந்து வெளியே வந்திருக்கிறது பாகிஸ்தான் அணி. நீண்டநாள் கழித்து புதிய எழுச்சி அடைந்த பாகிஸ்தான் ரசிகர்கள் தெருக்களில் ஆடிப்பாடி மகிழ்கிறார்கள். புதிய அக்ரம்கள், வாக்கர் யூனுஸ்கள் கிடைக்க இத்தருணம் உதவும்.



கிண்டல் காலனி

பந்தா

இப்போதெல்லாம் வீட்டுக்கு வீடு சன், டாட்டர் என்று டண்டனாடன் என்பதற்குள் லண்டன், லாஸ் ஏஞ்சல்ஸ் என்று போய்விட்டு வருவது சகஜமாகி விட்டது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதுகளில் பண்டரிநாதன் மாதிரி ஃபாரின் போய் உத்யோகம் பார்க்கும் பாக்கியம் பெற்றவர்கள் எழுபதோ, எண்பதோதான் இருந்திருக்க வேண்டும்.

பச்சைத் தமிழனாய் அங்கே சென்று கிரீன்கார்ட் வாங்கி பச்சை அமெரிக்கனாய் செட்டில் ஆகிவிட்டான் பண்டரிநாதன்.

''இங்கே வரணும்னு நினைச்சாலே ஒரே அலர்ஜியா இருக்கு'' என்று, தான் என்னவோ ஆகாயத்திலிருந்து டைரக்டாக அமெரிக்காவில் குதித்ததுபோல், இந்தியாவுடனான ஒட்டு உறவை அலாதிப்படுத்துவான்.

''ஏன்டா அகத்தியான் பள்ளி குட்டைலே நீயும், நானும் எருமையோடு எருமையாய் விழுந்து கிடப்போமே. உனக்கு அதனாலே உடம்பெல்லாம் படைபடையா ஆனதிலே நாட்டு வைத்தியன் சொன்னான்னு, ஆட்டு மூத்திரத்திலே குளிகையைக் கலந்து சாப்பிட்டதும் குணமாச்சே. ஞாபகம் இல்லையா?'' என்று நான் வேண்டுமென்றே குப்பையை கிளறிக் கேட்பதுண்டு.

ஒரு கல்யாணம் கார்த்திக்கு இந்தியா வந்தாலும் உறவுக்காரர்கள் வீட்டில் தங்க மாட்டான்.

''ஏ.ஸி. இல்லாம எப்படித் தூங்கறது?'' என்று எழுபதுகளிலேயே தனிப்படத் தொடங்கிவிட்டான்.

கல்யாணச் சத்திரத்திலேயும் கூட்டத்தோடு கலக்க மாட்டான். தனியாக ஓரத்தில் செல் முதல் ஐபேட், லேப்டாப் என்று சகலவித ஐட்டங்களோடும், பரமசிவன் மேல் ஊறும் பாம்பு கணக்காய் ஒயர்கள் படர உட்கார்ந்திருப்பான்.

ஆனால், அவனை வாஞ்சையோடு விசாரிக்க அத்தை பாட்டிகளும், மாமா தாத்தாக்களும் வந்து சூழ்ந்து கொள்வார்கள்.

''பண்டரி! பார்த்து ரொம்ப வருஷமாச்சு. எப்படி இருக்கே? வகமதியைக் கூட்டிண்டு வரலையா?'' என்று கேட்டு நிற்கும் கிழங்களை ஏதோ



பன்றி!

அகிலா கார்த்திகேயன்

அப்பாய்ன்மெண்ட் கேட்டு வாங்கினால்தான் தன்னிடம் பேச முடியும் என்பதாகக் காக்க வைப்பான்.

தன் காதில் அடைத்துக் கொண்டிருக்கும் இயர் ஃபோன் சமாசாரங்களை சாவகாசமாகக் கழற்றியபடி, ''பாட்டி நீங்க என்ன கேட்டீங்க? உங்களை யார்னு தெரியலையே. நான் அமெரிக்காவில் செட்டில் ஆகி கிட்டத்தட்ட நாற்பது வருஷமாறது'' என்று தன் சொந்த அத்தையையே நோகடிப்பான்.

எல்லோரும் குடிக்கும் தண்ணீரையோ, தம்ளரையோ தொடமாட்டான். ரெண்டு பிஸ்லெரி வாட்டர் பாட்டில்களை எப்போதும் கையில் தொங்கவிட்டுக் கொண்டிருப்பான்.

''இது என்ன புளியோதரையா?'' என்று, அந்தக் காலத்தில் அடித்துப் பிடித்துக் கொண்டு கோயில் க்யூவில் தான் வாங்கித் தின்ற பண்டத்தையே தெரியாதவன் போல பந்தா காட்டுவான்.

ஏதோ வேற்றுக் கிரகத்து ஆசாமி போன்ற இவனுடைய அலட்டல்களைச் சகிக்க முடியாமல், இவனுக்கு 'பந்தா பன்றி' என்று பட்டம் கொடுத்து எல்லோரும் பழி தீர்த்துக்கொள்வது பண்டரிக்குத் தெரியாது.

''உன்னோட பூர்வீகம் எதுன்னு தெரியுமோ?'' எகத்தாளமாகத்தான் எச்சுமி பாட்டி எனும் லட்சுமி பாட்டி ஒரு முறை இவனைக் கேட்டாள்.

தன் பிறந்த ஊரான தேத்தாகுடியை அவன் வாயால் வரவழைத்து, 'அந்த குக்கிராமம்தான் உன் சொந்த ஊர் மறக்காதே' என்று சுட்டிக்காட்ட நினைத்தாளோ என்னவோ?

அதற்கும் பண்டரி அசையவில்லை. ''வேதாரண்யம் பக்கமா ஏதோ வாயிலே நுழையாத ஊர் பேரைச் சொல்லுவா'' - தப்பித்தான்.



''ஏன்டா இத்தனை அலட்டறே! நீ இருக்கற அமெரிக்காவுலே டொரண்டாவோ, பிறாண்டாவோ அது மட்டும் உன் வாயிலே அப்படியே கரையறதா?'' - ஒரு போடு போட்டாள்.

இப்படி பண்டரிநாதன் இந்தியாவை இழிவுபடுத்துவதை விஸ்தாரமாக இப்போது விவரிப்பதற்குக் காரணமில்லாமல் இல்லை. சொந்தப் பேரனின் பூணூல் கல்யாணத்துக்காக அமெரிக்காவிலிருந்து வந்திறங்கியவனை இந்தியாவினுள் விடமாட்டேன் என்று விட்டார்கள்.

பின்னே அமெரிக்காவின் பன்றிக் காய்ச்சல்னா உசத்தின்னா சொல்லுவாங்க?

''நம்ம பண்டரிக்கு பன்றிக் காய்ச்சலாமே?'' என்று ஒருவர் விடாமல் அத்தனை உறவினர்களும் பந்தா பன்றியின் மேலிருக்கும் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டனர். அமெரிக்காவுக்கும் அடிசறுக்குமென்று இனிமேலாவது பண்டரி புரிந்துகொண்டால் நல்லது.

23

காற்று வரும் பருவம்!

விடிந்து விட்டது. அக்கா பட்டக சாலையில் உட்கார்ந்திருந்தது. சர்வச் சட்டியில் காப்பி போட்டு ஒவ்வொருவருக்காகக் கொடுத்துக் கொண்டிருந்தது. இப்படி யாராவது வந்தால்தான் வீட்டில் காப்பி. இல்லாவிட்டால் தூக்குப்போணியைத் தூக்கிக் கொண்டு கடைக்கு ஓட வேண்டும்.

தம்பி மாடிப்படியில் உட்கார்ந்திருந்தான். அம்மா அடுப்படி நிலைப்படியோரம் சாய்ந்திருந்தது. கோவிந்து வந்தான்.

''இந்தா ஒனக்கு காப்பி'' என்று அக்கா தம்ளரை நீட்டியது.

''மாப்ளெ... ஊருக்குக் கிளம்பறோம்.''

''வந்து நாலஞ்சு நாளாச்சு. இவரும் வந்து ஒக்காந்து கெடக்காரு. அங்கே போட்டது போட்ட வாக்குலெ கெடக்கு'' என்றாள் அக்கா.

''இருக்கா. போவலாம்.''

''ஒனக்காகத்தேன் வந்தது. ஐயாவும் மருகிக்கிட்டே இருக்காரு. நீ எதுனா தொரட்டுப் பண்ணிட்டு வந்திடாதப்பா. ஒனக்கு கோளாறு சொல்லுவாருனு இவரையும் கூட்டியாந்தது. இவரு என்னடான்னா படுத்துப் படுத்து எந்திரிக்கிறாரு... போங்க, ரெண்டு பேரும் வாய்க்கால்லெ குளிச்சுட்டு வாங்க...''

''ஏம்மா, தண்ணிதேன் கொதிச்சுப் போய்க் கெடக்கே'' என்றது அம்மா.

''ரெண்டு பேரும் போயிட்டு வரட்டும். இதுக்கு தலைக்கு ஊத்துவோம்'' என்று கைக்குழந்தையை மடியில் தூக்கிப் போட்டுக் கொண்டது.

''வெரசா வாங்க...''

மாசானமுத்து புளியந்தோப்பைத் தொடும்வரை மாமா ஒன்றும் பேசவில்லை. ஓடைப் பள்ளத்தில் இறங்கி, மேடு ஏறும்போது பேச்செடுத்தார். அந்தப் பேச்சு ஓணிப் பாதை வரைக்கும் கூடத் தொடரவில்லை. கோவிந்துவின் தீர்மானமும் தீவிரமும் அவர் வாயை அடைத்திற்று. குளித்து விட்டு வீடு திரும்புகின்ற வரையிலும் இருவரும் பேசிக் கொள்ளவில்லை!

கோவிந்துவின் மனப் புழுக்கத்தைத் தணிக்கத் தோதான இடம் இதுதான்! வாய்க்கால் மேட்டில், சிவன் கோயிலுக்குப் பக்கம், வெள்ளைச்சாமி தோட்டம். புளிய மரமும், புங்கை மரமும் வாகையும் இரண்டு மூன்று பாக்கு மரங்களும் கூடிய தோப்பு! தோப்புக்கு நடுவே ஒரு ஏற்றக் கிணறு குளுகுளுவென்று மரங்களும் மட்டைகளுமாய் நிறைந்த கிணறு. கிணற்றினை ஒட்டி ஒரு கீற்றுக் கொட்டாய். இப்படி ஓர் தனிமையைத் தேடி வந்து உட்கார்ந்து கொள்ளும்போதுதான் பஞ்சுவும் கூடவே வந்து உட்கார்ந்து கொள்கிறாற்போல் ஒரு நினைவு. ஏன் அவள் அவன் கூடவே வாழ்கிறாற்போல் கூட இருக்கும்.

''கோவிந்து'' என்று குரல் வந்தது. கோவிந்து திரும்பினான். நாகு - நாகராசன். அவன் கூடவே டெய்லர் பழனி.

''எப்ப வந்த கோவிந்து?''

''மூணு இருக்கும்.''

''பிரச்னையா கோவிந்து?''

கோவிந்து சிரித்தான்.

''இப்படியே முத்தவிட்டுக்கிட்டிருந்தா...''

''முடிவு பண்ணியாச்சு. நீங்க எல்லாம் ஒதவணும், சின்னமனூர்லெ ஒச்சாத்தேவர்

மவன் விருமாண்டியும் ஒதவுவான்.''

''என்ன சொல்ற?''

''பஞ்சுவைக் கட்டிக்கப் போறேன். கோயில்லெ வெச்சுக் கல்யாணம்!''

இருவரும் அவனைத் திகைப்போடு பார்த்தனர். கோவிந்துவின் அந்தரங்கப் பிரியத்தை அவர்கள் அறிவார்கள்.

பாரதிபாலன்

''நீ தீர்மானமா இருக்க. எங்களால முடியலெ. ஆனாலும் உன்னை வுட மாட்டோம்.''

''ஆக வேண்டியதை நான் பாத்துக்கிறேன். ஒத்தாசை பண்ணுங்க.''

''என்னானு சொல்லு.''

''சின்னமனூர் சிவகாமியம்மன்



கோயில்லெ, கல்யாணம். லஞ்சு ஹோம்லெ சாப்பாட்டுக்கு டோக்கன் வாங்கிக் கொடுத்திடலாம். இது திருட்டுக் கல்யாணமில்லெ நாகு. எல்லார்ட்டயும் சொல்லப் போறேன். பத்திரிகை அடிக்கலெ. அம்புட்டுத் தேன்.'' ஒருவரையொருவர் திகைப்போடு பார்த்துக் கொண்டனர். பொழுது இருட்டிக் கொண்டு வந்தது.



சில விஷயங்கள் எப்படியோ நடந்து விடுகின்றன. இல்லை எப்படி நடக்க வேண்டுமோ அப்படி நடந்து விடுகின்றன. பஞ்சு எங்கெங்கோ பார்த்தாள். அவளுக்கு இன்னும் படபடப்பு குறையவில்லை. திகிலோடுதான் இருக்கிறாள். என்ன நடந்தது! நடந்தது கனவோ... என்ற நினைப்புதான். இது நிஜமா... இது நிஜமா... என்ற தகிப்புத்தான் இன்னமும் இருக்கிறது.

இந்தக் காலத்துக்குத்தான் எத்தனை வலு! எங்கே காலம் தன்னைச் சிதைத்து விடப் போகிறதோ என்றுதான் உருகினாள். ஆனால் காலம் வேறு மாதிரியான கோலத்தைக் காட்டிவிட்டது. நம்பவே முடியவில்லை. 'எந்தப் பய வந்து, இவ கழுத்துல மாலை போடப் போறானோ' என்று அடிக்கடி அப்பன் சொல்லும். அப்படி அது சொல்லும்போது உருக்கமும் கிறக்கமும் கொள்ளும். இப்படி இதோ இந்த கோவிந்து கையில் பூமாலையாய் உதிர்வோம் என்றா கனா கண்டுச்சு!

இரண்டு நாட்கள் எப்படி கழிந்தன? சற்று திகில் கலந்தாற்போல்தான் கடந்தன. இருவரும் ஒருவருக்கொருவர் அருகாமையில் இருந்ததால் அந்தப் பொழுது பொன்னாயிற்று. ஒருவருக்குள் ஒருவர் இறங்கிப் பார்த்துக் கொண்டார்கள். விசாலமாக நடந்து நடந்து கால் ஓயுமட்டும் நடந்து துவண்டு சரிந்தார்கள். நடக்க நடக்க அன்பும் அன்னியோன்யமும் இறுகிற்று. இதுவரை இருந்த மயக்கம் கிறக்கம் எல்லாம் சற்று விலகி அன்பின் ஆழத்தைத் தொட்டார்கள். இப்படியே இருக்க மாட்டோமா என்ற ஏக்கமும், இருந்துவிட்டால் எப்படி இருக்கும் என்ற பேராசையும் இந்த உலகத்தைச் சற்று தள்ளி விட்டன. சூரிய ஒளி பகல் பொழுதும் இரவின் நீட்சியும் ஒதுங்கிக்கிடந்தன. கொடியில் தொங்கிக் கிடக்கும் சேலையை, காற்று கழற்றி நீண்ட குழலாக ஒதுக்கி விடுமே அது மாதிரி. இருளில் ஓடும் துளி ஒளிக்கீற்று மாதிரி, பயம் மட்டும் ஊடுருவி ஓடிக் கொண்டிருந்தது. சட்டென்று நம்ப முடியாத பிரமிப்பு. எப்படித் துணிந்தோம்? அத்தனை குரல்களையும் கடந்து, அத்தனை கண்களையும் மீறி எப்படி கரையைத் தொட்டோம்? ஏதோ ஒரு துணிவு! எதன் கையையோ பற்றிக்கொண்டு கரையைக் கடந்து விட்டோம். கரையைக் கடந்து விட்ட பின்பு திரும்பிப் பார்க்கின்றபோது மலைப்பாகத்தான் இருக்கிறது. அடுத்த அடியை எப்படி வைக்கப் போகிறோம் என்ற தவிப்பு! வீட்டுச் சாவியைக் கொடுத்துவிட்டு, அண்ணாமலை நகர்ந்து விட்டான். ஆள் இல்லாத வீட்டின் அமைதி. அந்த அமைதி கிளப்புகிற மனப்புழுதி. வீட்டின் விசால

மும், நேர்த்தியும் வடிவமும் அந்நியமாகத் தெரிந்தாலும் வீட்டைச் சுற்றி உள்ள மரங்கள், செடி கொடிகள் உறவாகத்தான் தெரிந்தன.

மாம்பிள்ளைகளும், தென்னம்பிள்ளைகளும் இருந்தன. வாசலில் விரிக்காத குடை மாதிரி நீண்ட நெட்டிலிங்கமரங்கள். இரவில் மரங்களின் பேச்சொலி எழும்பும். பறவைகளின் பேச்சொலிக்கும் குறைவிருக்காது. இந்த சொசைட்டி தெருவில் இருக்கிற வீடுகள் எல்லாமே இப்படித்தான். எல்லாம் வசதி படைத்தவர்கள்.

''வாசல்லெ யாரோ... வர்றாங்க''

கோவிந்து சட்டென்று எழுந்தான். அதற்குள் நாகு இரும்புக் கதவைத் திறந்து உள்ளே வந்துவிட்டான். நாகு கூட மயிலைப்புள்ளை மவனும் வந்திருந்தான். நாகு கையில் ஒரு மஞ்சள் பை இருந்தது. நாகுவைப் பார்த்ததும் கோவிந்துக்கு நெகிழ்ச்சியாகிவிட்டது. அவன் செய்த உதவிகளை எல்லாம் மறக்கவே முடியாது. நாகுவைப் போல் இன்னும் ஏழு எட்டுப் பேர்!

''வர்றப்ப நாட்டாமைக்காரர் விசாரிச்சார் கோவிந்து...''

''என்ன சொன்னே?''

''நடந்ததைச் சொன்னேன்.''

''அதுக்கு என்ன சொன்னார்?''

''ஒண்ணும் சொல்லலெ. ஆனா, ஏதோ சொல்ல வந்தாப்புலெ தெரிஞ்சது.''

''வேற...?''

''வேற யாரும் ஒண்ணும் கேக்கலெ!''

''அப்படியா!''

''இதெ நேர்லே பேசமாட்டாங்கே கோவிந்து.''

''ம் தெரியும். அவிங்கப்பக்கம்...''

''சுகமுசான்னுதான் இருக்கு... காலையிலெ அண்ணாமலை வந்தாப் புலெ. ஒன்னையக் கேட்டாப்புலெ. இந்த வூட்டுலெயே தங்கச் சொல்றாப்புலெ. அவுங்க ஐயாவுக்கு முடியலெயாம். அதான் வீட்டை மாத்திட்டுப் போயாச்சாம்.''

''ம்.''

''கைச்செலவுக்கு விருமாண்டி பணம் கொடுத்தாப்புலெ...''

''பணமா?''

''ம். ஆயிரம் இருக்கு'' என்று மஞ்சள் பையை நீட்டினான்.

''விருமாண்டியா?''

''ம். ரோட்டுலெ பஸ்ஸுக்கு நின்னுருந்தேன். ஓடிவந்தாப்புலெ. திடீர்னு நீட்டினாப்புலெ. சொல்லிக் கொடுத்திருன்னாப்புலெ...''

''ப்சு! கடவுளே!''

''வெச்சுக்க பாக்கலாம்.''

''நாளையிலெ இருந்து ரோதைக்குப் போவலாம்னு பாக்குறேன். அப்படியே பால் பண்ணையையும் பாத்துக்கிடலாம்னு பாக்குறேன்.''

''பால் பண்ணைக்குப் போயி?''

''கொஞ்ச நாள் இருப்போம். அப்புறம் என்னா செய்யுறது?''

''கோவிந்து நான் போயி எதுனா சாப்

நெடும்பயணத்துக்கு
ஆயத்தமான பொழுதொன்றில்
கடந்துவந்த பூமரத்தினடியில்
சில புன்னகைகளை விட்டுவந்தேன்
நான் கடக்கவேண்டிய
வழியெங்கிலும் வேர்கள் பரப்பி
காத்திருக்கிறது அதன் நிழல்

– ச.பிரேம்குமார்



பிடுறதுக்கு வாங்கியாறேன்.''

''வேண்டாம் நாகு...''

''வாரேன்...'' என்று நாகு நகர்ந்தான். மயிலப்புள்ள மகன் வெறும் தலையை ஆட்டிவிட்டு எழுந்தான். அவர்கள் தெருவில் இறங்கி நடப்பது வரை பார்த்துக் கொண்டிருந்தாள் பஞ்சு. கதவோரம் இருந்த ஆணியில் கல்யாண மாலை தொங்கிக் கொண்டிருந்தது. தனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. இதோ இந்தக் கோவிந்துதான் தன் கணவன் என்பதை நம்ப முடியவில்லை. கண்களை மூடிக் கொண்டாள். மூடிய அந்தக் கண்களுக்குள் ஏதோ நுழைந்துவிட்டது. இது எல்லாம் நடக்குமா என்ற வியப்



புத்தான். அந்த வியப்பு கூடக் கூடப் பயமாகச் சுருண்டது. பயம் வலுக்க உடல் தளர்வு கண்டது. கை,கால், தலை எல்லாம் வெட்டிப் போட்டாற்போல் ஆனது.

எப்போதும் தூக்கக் கலக்கம் போல்தான் இருந்தது. கோவிந்துவைப் பார்க்கிற போதெல்லாம் ஆறுதலாக இருக்கும். அப்படியே அவனைப் பார்த்துக் கொண்டிருந்தால், வெட்டவெளியில் காற்றலையில் அவனைப் பற்றிய சுகமான நினைவுகளும்... கண்ணெதிரே பார்க்கின்ற நிஜமும் அலாதியான அன்பையும் ஆர்வத்தையும் சுரக்கத் தொடங்கும். அவனை அப்படியே தேக்கி வைத்துக்கொண்டு, விடுதலை அடைய வேண்டும் போல் வேட்கை வரும். ஆனால் அது முடியாது. பயம் கவ்விக்கொள்ளும். இப்படி கடிபடாமல் காயம் படாமல் அவன் அருகாமையை அனுபவிக்க முடியாது. அந்த மன வலு தன்னிடமில்லையே என்ற இரக்கமும் சுய வருத்தமும் நிழல்போட்டுவிடும். இப்படி அவனை நினைத்து ஏங்கி ஏங்கி ஏக்கம் மிகுதியாகி உடம்பெல்லாம் சோகை பிடித்துக் கிடந்து செத்துக் கொண்டிருந்தபோதுதான் அவன் வந்தான். அன்று அவன் அதைச் சொல்லும்போது வேரிலிருந்து ஈரம் பரவத் தொடங்கிற்று. இது உண்மையாகி, நடந்து விட்டால் எப்படி இருக்கும் என்ற பரவசமும் பரபரப்பும் தொற்றிக் கொண்டன. வாய் வார்த்தைதான்! ஆனாலும் நிஜம் போல நெஞ்சு நிறைந்து விட்டது. எத்தனையோ நாள் இதைச் சொல்லியிருக்கிறான். அன்று மட்டும் ஏனோ அதற்கு அத்தனை வலு கூடி விட்டது. வார்த்தையைக்கூட மாற்றவில்லை. அதே வார்த்தைதான்.

இன்னும் அந்தக் காட்சி அப்படியே நிழலாடிக் கொண்டுதான் இருக்கிறது. கல்யாண முருங்கை முதுகைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தான். தீராத தாகமெடுப்பவன் ஆற்று நீரில் நின்று கொண்டு அள்ளி அள்ளிப் பருகுவது போல அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்போதுதான் அவன் அதைச் சொன்னான்.

''அடுத்த வெள்ளிக்கு கல்யாணம். சிவகாமியம்மன் கோயில்லெ வெச்சு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கேன். ஒனக்குச் சம்மதமா?''

அவள் உதடு கோணி விட்டது; கை, கால் எல்லாம் நடுக்கம் கொடுத்திற்று. நிஜம்தானா என்று கூடக் கேட்கத் தோன்றாமல் அப்படியே மலைத்துப் போய் நின்று விட்டாள்! அப்போது அவள் நெஞ்சில் மோதிய காற்று அப்படியே தங்கி விட்டது!

(முற்றும்)

அருள்வாக்கு

ஆசை



ஷட்ரிபுக்கள் என்று ஆறு உட்பகைவர்களைச் சொல்வதில் காமம், க்ரோதம், லோபம் முதல் மூன்று. மோஹம், மதம், மாத்ஸர்யம் என்பவை பாக்கி மூன்று. யோசித்துப் பார்த்தால் இதுகளும் காமத்திலே, ஆசையிலே பிறந்தவைதான். மோஹம் என்பது என்ன? ஒன்றிடம் ஆசையினாலே அப்படியே அறிவிழந்து மயங்கிக் கிடப்பதுதான். மதம் என்பதும் தம் ஆசைப் படியெல்லாம் இருக்கலாமென்ற திமிர்தான், அல்லது நம் ஆசைப்படி நடந்துவிட்டது என்ற திருப்தியில் உண்டாகும் கொழுப்புத்தான். மாத்ஸர்யம் என்பதாக இன்னொருத்தனிடம் பொறாமைப்படுவது எதனால்? நம்மிடம் இல்லாத எதுவோ ஒன்று அவனிடம் இருக்கிறது; பணமோ, புத்தியோ, செல்வாக்கோ எதுவோ ஒன்று. அது நம்மிடம் இல்லையே என்பதால்தான் மாத்ஸர்யம். அதாவது, அது நமக்கு வேண்டும் என்ற ஆசைதான் மாத்ஸர்யத்தை உண்டாக்குகிறது. இவ்வாறாக உட்பகைவர் என்கிற ஆறு அஸுரர்களுக்கும் காமம்(ஆசை) தான் மூலம் என்றாயிற்று.

ஆகையால் ஸதா ஸர்வ காலமும் நம்மைப் பிய்த்துப் பிடுங்கிக் கொண்டிருக்கிற தேவாஸுர யுத்தம் நிற்க வேண்டுமானால் மூல விரோதியாக இருக்கப்பட்ட காமம் என்கிற அஸுரனை இல்லாமல் பண்ணிவிட வேண்டும். ஜீவன் சாந்தநிலை அடைய ஒரே வழி ஆசா நாசம்தான்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஸ்வீட் ரவி



* ஸ்வீட் ரவி குடும்பத்தினர்...

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு அப்பா வேலாயுதராஜா இராஜபாளையத்திலிருந்து கும்பகோணம் வந்து ஸ்வீட் கடை துவங்கியபோது ரவிக்கு வயது இரண்டு. பள்ளி சென்று படித்து, வளர்ந்து விவரம் தெரிந்து ஸ்வீட் கடையில் நின்று வியாபாரம் செய்தபோது பத்திரிகைகளுக்கு வாசகர் கடிதங்கள், நகைச்சுவைத் துணுக்குகள் எழுதி அனுப்பியபோது 'ஸ்வீட் ரவி' ஆகிப் போனார்.

''14.11.1993 'ஸ்வீட் ஸ்பெஷல்'ஆக கல்கி வெளியானது. நான் எழுதி அனுப்பியிருந்த நகைச்சுவைத் துணுக்குகளில் ஐந்து தேர்வாகி, அவை தனியே ஒரு பக்கத்தில் என் ஃபோட்டோவுடன் வெளியாகியிருந்தன. 'இந்தத் துணுக்கு எழுத்தாளரின் பெயரே ஸ்வீட் ரவி. கும்பகோணத்தில் ஸ்வீட் ஸ்டால் வேறு வைத்திருக்கிறார். ஸ்வீட் ஸ்பெஷலில் இவருடைய ஜோக்கை விட்டு விடவா முடியும்!' என்று சிறப்புக் கட்டம் கட்டிப் பிரசுரித்திருந்தார்கள்'' என்கிறார் ரவி.

''9.5.1999 அன்று கும்பகோணத்தில் தஞ்சை, நாகை, திருவாரூர் எழுத்தாளர்கள் கூட்டமைப்பு, அமரர் கல்கி நூற்றாண்டு விழாவினை மிகச் சிறப்பாக நடத்தியது. அந்த விழா பொறுப்பாளர்களில் நானும் ஒரு நபராக நின்று செயல்பட்டிருக்கிறேன். பத்திரிகை எனக்கு வெளியுலகில் பல்வேறு தொடர்புகளை உருவாக்கித் தந்தது.

டைரக்டர் லிங்குசாமியின் 'ஆனந்தம்' படத்தில் லொகேஷன் மேனேஜராகப் பணிபுரிந்தேன். பின்னர் அவரே எனக்கு பல வாய்ப்புகளையும் பெற்றுத் தந்தார். விஜயகாந்தின் தவசி, சரத்குமாரின் அரசு, அர்ஜுனின் ஏழுமலை, அஜித்தின் ஜீ, விக்ரமின் அந்நியன், விஷாலின் மலைக்கோட்டை, சிம்புவின் சிலம்பாட்டம் போன்றவை நான் லொகேஷன் மேனேஜராகப் பணிபுரிந்த முக்கியப் படங்கள். சமீபத்தில் திரைப்படத் தயாரிப்பு நிர்வாகிகள் சங்கத்தில் முறைப்படி உறுப்பினராகவும் சேர்ந்துள்ளேன். பத்திரிகைகளில் எழுதத் துவங்கிய ஆர்வம் கல்கி வட்டமேஜையிலிருந்து, தயாரிப்பு நிர்வாகியாக உயர்த்தியிருக்கிறது'' என்கிறார் ஸ்வீட் ரவி.

– **ஸ்ரீரங்கம் திருநாவு**

வழக்கறிஞர் - போலீஸ் மோதலைத் தொடர்ந்து கூடுதல் கமிஷனராக இருந்த விஸ்வனாதனையும், இணை கமிஷனராக இருந்த ராம சுப்பிரமணியத்தையும் சஸ்பெண்ட் செய்ய வேண்டுமென்பது வழக்கறிஞர்களின் கோரிக்கை. ஆனால் தமிழக அரசு இந்தக் கோரிக்கைக்குச் செவிசாய்க்க விரும்பவில்லை. இதனால் கடுப்பான வழக்கறிஞர்கள் விஷயத்தை உச்சநீதிமன்றம் வரை கொண்டு சென்றிருக்கிறார்கள். இந்த நிலையில் கூடுதல் கமிஷனர் விஸ்வனாதனுக்குப் பதவி உயர்வு கொடுத்து தில்லி தமிழ்நாடு ஹவுஸில் இணை கமிஷனராகப் போட்டிருக்கிறது தமிழக அரசு. கூடிய விரைவில் மு.க.அழகிரிக்கு விஸ்வனாதன் தனி உதவியாளராக நியமிக்கப் படலாம் என்றும் சொல்கிறார்கள். இதற்கிடையில் ''நூறு நாட்களில் என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்ற பிரதமரின் கேள்விக்கு அட்டகாசமான அஜண்டாவைக் கொடுத்து அசத்தியிருக்கிறாராம் அழகிரி.

தமிழக காங்கிரஸின் அடுத்த தலைவர் பொறுப்புக்கு ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், ஜெயந்தி நடராஜன் ஆகியோர் முட்டி மோதுகிறார்கள். அதே சமயம், வாசன் தம் தரப்பில் பீட்டர் அல்போன்ஸ் அல்லது ஞானதேசிகனுக்குப் பெற்றுத் தர முடியுமா என்று முயன்று வருகிறார். சிதம்பரம் தரப்பிலிருந்து கே.எஸ்.அழகிரிக்காக முயல்கிறார்கள். ஓர் இளைஞரைத் தலைவராகப் போட்டுப் புது ரத்தம் பாய்ச்சினால் என்ன என்று யோசிக்கிறார் ராகுல்.

சில தொகுதிகளில் தோல்வியைத் தொடர்ந்து, தி.மு.க.வில் யார் மீது நடவடிக்கை எடுப்பது என்று பெரிய தலைகளுக்குள் பட்டிமன்றம் நடக்கிறது. பொங்கலூர் பழனிச்சாமியின் மீது எடுக்கலாம் என்றால், ''வீரபாண்டியாரின் சேலத்தில் கூட தோற்றோம்; அவர் மீதும் சேர்த்து நடவடிக்கை எடுங்கள்'' என்று குரல் கேட்கிறது. ஈரோட்டில் முன்னாள் அமைச்சர் ராஜா மீதும் தென் சென்னை செயலாளர் அன்பழகன் மீதும் பெரிய புகார்ப் பட்டியல் வாசிக்கப்படுகிறது. அன்பழகன் மீது

ராகுல் தேடும் இளைஞர்!



ஸ்டாலினுக்கு இருந்த நம்பிக்கை குறைந்துபோய்விட்டது என்றும், அவரை கட்சிப் பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்ய அழுத்தம் கொடுக்கப்படும் என்றும் சொல்கிறார்கள்.

- ஸ்ரீநி

தீராத விளையாட்டு விட்டலன்

11

விட்டல ஆலயத்தின் முக்கிய நுழைவாயிலில் காணப்பட்ட நாமதேவரின் படிகளையும் அங்கு சிறிய அளவில் காணப்பட்ட நாமதேவரின் திரு உருவத்தையும் தரிசித்தபடி உள்ளே சென்றோம்.

முன்தினம் ராத்திரி அங்கு வந்ததற்கும் இப்போது காலையில் அங்கு நுழைந்ததற்கும் நிறைய வித்தியாசங்கள். கோயில் ஒரு அசாத்திய உற்சாகத்தோடு காணப்பட்டது. பக்தர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது. 'ஜருகண்டி' ஸ்டைலில் பக்தர்களைத் தொட்டுத் தொட்டு வேகப்படுத்திக் கொண்டிருந்தார்கள், கருவறையிலும் அதற்கு அருகிலும் தென்பட்ட ஆலயப் பிரதிநிதிகள்.

மீண்டும் விட்டலனைத் தரிசித்துவிட்டு அருகிலிருந்த ருக்மணிதேவியின் சன்னிதிக்கு வந்தோம். அங்கே குங்கும அர்ச்சனை செய்யப்பட்டது. அதன் பின்னர்தான் தெரிந்தன சில காட்சிகள்.

சத்யபாமாவுக்கு ஒரு தனி சன்னிதி காணப்படுகிறது; வெங்கடேஸ்வரருக்கும்.

சற்றுத் தள்ளி, வெங்கடேஸ்வர சன்னிதிக்கு நேரெதிராகத் தென்பட்டது ஒரு மரம். கம்பீரமாகப் பிராகாரத்தில் காணப்பட்ட அந்த மரத்தின் அடிப்பகுதி திரண்டு செழுமியதாக இருந்தது. பக்தர்கள் அந்தத் துறட்டு மரத்தை (மராத்தியில் தராட்டி மரம் என்கிறார்கள்) வலம் வந்து கொண்டிருந்தனர்.

பெரிய ஆலயங்களில் ஸ்தல விருட்சம் என இருப்பது சகஜம்தானே என்று நினைத்தோம். பிறகுதான் தெரிந்தது அது ஸ்தல விருட்சம் அல்ல என்பதும், பண்டரிபுர ஸ்தலத்தில் பாண்டுரங்கருக்குச் சமமான இடம் அவரது பக்த மகான்களுக்கும் உண்டு என்பதை உணர்த்தும் விருட்சம் அது என்பதும்.

அந்த மரத்தை எதற்காக பயபக்தியுடன் வணங்குகிறார்கள்? அதன் இலைகளைப் பிரசாதமாகவே ஏற்றுக்கொள்கிறார்களே, அது ஏன்?

மங்களபடே எனும் ஊர். மஹாராஷ்டிராவில் உள்ள அந்த ஊரில் ஷ்யாமா என்ற ஒரு பெண்மணி இசைவேளாளர் வகுப்பில் தோன்றி ஆடல்பாடல்களில் தேர்ச்சி பெற்றவளாக விளங்கினாள். அவளது ஒரே மகள்தான் கானோபாத்ரா.

இளமைப் பருவத்தை அடைந்ததும் கானோபாத்ராவின் மேனி பேரெழிலுடன் மின்னியது. அவளது முக அழகு பார்ப்பவர்களைச் சுண்டி இழுத்தது. அவளது



அருண் சரண்யா



“அம்மா, பண்டரிபுரம் போகட்டுமா?”

சரீரம் மட்டுமல்ல; சாரீரமும் (குரல்) இனிமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. கடவுள் பக்தி நிறைந்த அவள், தினமும் தன் வீட்டில் தெய்வப் பாடல்களைப் பாடி வந்தாள். அதைக் கேட்பதற்கென்றே மக்கள் அவளது வீட்டுவாசலில் தினமும் குவியத் தொடங்கினர்.

''உன்னைப் போல ஒரு பாக்கியசாலி இல்லை. எவ்வளவு திறமைகள் கொண்ட ஒருத்தியை மகளாக அடைந்திருக்கிறாய்'' என்று பலரும் ஷ்யாமாவிடம் கூற, ஒருத்தி மட்டும், ''உன்னைப் போல ஒரு முட்டாளை நான் பார்த்ததே இல்லை'' என்றாள். ஷ்யாமா திடுக்கிட, வந்தவள் விளக்கினாள். ''இப்படி வீட்டுக்குள்ளேயே உன் மகளின் புகழைச் சுருக்கி வைத்திருக்கிறாயே. இதனால் யாருக்காவது பலனுண்டா? இதற்குப் பதிலாக அரண்மனைக்குச் சென்று அரசனுக்கு முன்னால் உன் மகளை ஆடவும் பாடவும் வைத்தால் உனக்கு நிறைய பொற்காசுகள் கிடைக்குமே'' என்றாள்.

நியாயம்தானே என்று பட்டது தாய்க்கு. மகளிடம் இந்த யோசனையைத் தெரிவித்தாள். மகள் ஆனந்தப்படுவாள் என்று தாய் நினைத்திருக்க, மகளின் முகத்தில்



"அரசரின் ஆதரவு வேண்டுமென நினைத்து இழிதொழிலில் என்னைத் தள்ளிவிடாதே!"

நாமே தோஷ ஜளதீ
நாமே பாபீ உத்தரதீ
ஹே ஆலே அனுபவா
ஸத்ய ஜீவா ப்ரத்யயா
நாமே அபார தாரிலே
நாமே ஜீவன் முக்த கேலே
கான்ஹோபாத்ரா நாம கேதா
பாயீ ஜடலீ தத்த்வதா

- கானோபாத்ரா

"விட்டலவின் திருநாமம் தோஷங்களை எல்லாம் பொசுக்கிவிடுகிறது. பாவிகளைப் புதுப்பிறவி எடுத்ததாக உணரச் செய்கிறது. இது என் வாழ்வில் கண்டறிந்த சத்தியமான அனுபவம். முடிவற்றதாகத் தோன்றும் இந்த சம்சாரக் கடலையும்கூட தாண்டிக் கரையேற்றிவிடுகிறது. விட்டல நாமத்தைத் தொடர்ந்து ஜபிப்பது ஆத்மாவுக்கு முக்தி அளிக்கிறது. நான் அவன் திருநாமத்தை உச்சரித்துக்கொண்டு அவன் சரணங்களைப் பற்றிக்கொள்வது என்ற தத்துவத்தைக் கடைப்பிடிக்கிறேன்."

அப்பட்டமான அதிர்ச்சி.

"புரிகிறது அம்மா. அரசனுக்கு என்னை அர்ப்பணித்துவிடப் பார்க்கிறாய். ஆனால் என்னால் இதற்கு ஒப்புக்கொள்ள முடியாது. இந்த உலகில் எதுவுமே இன்பம் தரும் பொருள் என்று கிடையாது. ஒவ்வொரு பொருளும் ஏதோ ஒரு காலத்தில் துன்பம் தருவதாகவே இருக்கிறது. ஆனால் இறைவனின் எண்ணம் என்றென்றும் ஆனந்தத்தை அளிக்கும். இரவும் பகலும் இறைவன்தான் என் மனத்தில் இருக்கிறான். என்னைத் தயவு செய்து வற்புறுத்தாதே. அரசனின் ஆதரவு வேண்டும் என்று நினைத்து இழிதொழிலில் தள்ளிவிடாதே" என்றாள் கானோபாத்ரா.

மகளின் வாதத்தைக் கேட்டு புல்லரித்துப் போனாள் ஷ்யாமா. 'மகள் விருப்பப்படியே அவள் வாழ்க்கை அமையட்டும்' என்று தீர்மானித்தாள். 'நமக்குப் பிறகு இவளை யார் பாதுகாப்பார்கள்?' இந்த எண்ணத்தால் கொஞ்சம் மனச் சோர்வும் உண்டானது

தாயின் மனத்தைப் புண்படுத்தி விட்டோமோ என்ற சந்தேகம் சிறிது வருத்தத்தை அளித்தாலும், தான் வேறு என்ன செய்திருக்கமுடியும் எனக் கூறி, தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டாள் கானோபாத்ரா.

அப்போது பண்டரிபுரம் செல்லும் பக்தர்களின் கோஷ்டி ஒன்று அந்த ஊருக்கு வந்து சேர்ந்தது. 'அம்மா, நானும் அவர்களுடன் பண்டரிபுரம் சென்று வரட்டுமா?' என்று கானோபாத்ரா கேட்க, அம்மாவும் அனுமதித்தாள்.

ஒருவிதத்தில் கானோபாத்ரா வாக்குத் தவறிவிட்டாள் என்றே சொல்லவேண்டும். அவள் பண்டரிபுரம் சென்றாளே தவிர, மீண்டும் தன் ஊருக்குத் திரும்பவில்லை. அவளுக்கு தாய், தந்தை எல்லாமே பாண்டுரங்கன்தான் என்றானது.



அறையின் வசீகரம்!

அ. வெண்ணிலா



புன்னகைகளைப் பரிமாறும்போது
ஒளி சிதறாமல் பார்த்துக்கொள்ளும்

ஊடல்களின் உரசல் ஒலியை
மௌனமாய் உள்வாங்கிக் கொள்ளும்.

நீ அழுவதில்லை எப்போதும்.
பெருக்கெடுக்கும் என் கண்ணீர்த்
துளிகளைக் கவலையாய் உறிஞ்சும்.

யாசிக்கப்பெறும் அன்பின்
அருவெறுப்பினை அசையாமல்
நின்று வெறிக்கும்

உதிரும் காதல் மகத்துவங்களைப்
பத்திரமாய்ச் சேகரிக்கும்.

ஒருவரை ஒருவர் வீழ்த்தும்
பிரயத்தனங்களைப்
பலமிழந்த ஆயுதங்களாக்கும்.


நம் நிர்வாணங்களை முழுமையாக
அறிந்த அறை ஒருபோதும்
ரகசியங்களைச் சொன்னதில்லை.

நாளற்ற பொழுதுகளில்
என் கனிவை நினைவூட்டவும்
நீயற்ற பொழுதுகளில் - உன்
பரிவின் எல்லையைக்
காட்டவும்
பழகிக்கொண்டது அறை.

அறையொன்றின் இருப்பில்தான்
இன்னும் சாத்தியமாகிறது
காதலர்கள் என்ற
வண்ணமயமான முகமூடி.

● **மீனா ரெங்கனாதன், மேற்கு மாம்பலம்**

'மாது பாலாஜி' உங்கள் சொந்த தம்பியா....?



ஒன்னு விட்ட தம்பி. எங்கப்பா அம்மாவுக்கு, முதலில் பிறந்தது நான். அதன் பிறகு என் தங்கை லீலா, அதற்குப் பிறகு அதாவது 'ஒன்னு விட்டுப்' பிறந்த தம்பி 'மாது-பாலாஜி'. அதுவும் தவிர சின்ன வயசுல, ஒன்னு, ரெண்டு, மூணு சொல்லச் சொன்னா, பாலாஜி ஒன்னை விட்டு விட்டு ரெண்டு, மூணு, நாலு என்றுதான் எண்ணுவான். அதனாலயும் அவன் ஒன்னு விட்ட தம்பி. இப்போ, எனக்காக ஒன்னும் விட்டுக் கொடுக்காத ஒன்னு விட்ட சொந்தத் தம்பி 'மாது-பாலாஜி.'

● **அ.யாழினி பர்வதம், சென்னை**

வாழ்க்கையின் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் எது....?

வீடு வரை கூடியது. வீதி வரை பொழுதைக் கழித்தது. காடு வரை காசு பெருக்கியது. கடைசி வரை கடவுள் வகுத்தது.

● **எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர்**

காதலியின் முத்தம், குழந்தையின் முத்தம் ஒப்பிடுக....?

காதலியின் முத்தம் 'Wine'. குழந்தையின் முத்தம் 'Divine'!

● **ஆர்.பிரசன்னா, ஹுப்ளி**

கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். காதல் என்பது?

கல் தோன்றி முன் தோன்றா காலத்து ஆப்பிள். பசிக்குப் பயிர். ருசிக்கு ஆப்பிள்!

● **மு.மதிவாணன், அரூர்**

பெண்களின் கண்களை 'கயல்' என்று சொல்வது ஏன்....?

'கயல்' என்றால் மீன் என்று பொருள். கடலில் மீனுக்குத் தூண்டில் போடுவார்கள். தரையில் பெண்களின் விழி-மீன் தூண்டில் போடும். கயலில் மாட்டிக் கொள்வது நம்ம பயல்...!

● **ஜோதி, கடலூர்**

முகத்தால் 360 டிகிரி சுழல முடிந்தால்...?

முகத்தின் அழகை முதுகுக்குக் காட்டலாம். முகத்தைக் காட்டியபடி வீரமாகப் புறமுதுகிட்டு ஓடலாம். ஷர்ட்டை மாற்றிப் போட்டுக் கொண்டு விட்டாலும், சமாளித்துக் கொள்ளலாம்.

● **ஜே.துரைராஜ், சென்னை**

கவர்ச்சிக்கும், முதிர்ச்சிக்கும் என்ன வித்தியாசம்?

புத்த நிர்வாணம் முதிர்ச்சி. மத்த நிர்வாணம் கவர்ச்சி.

● **ஏ.கே.நாசர், T.R.பட்டினம்**

ஞாபக விஷயத்தில் நீங்கள் எப்படி...?

அதையேன் கேட்கிறீர்கள். வீட்டுச் சாவியை மறந்து வைத்துவிட்டு, அதையும் மறந்துபோய் வீட்டைத் தேடிக் கொண்டிருப்பேன்.

காதலி முத்தம்...

● **ஆர்.ஆர்.தமன், சென்னை**

உடல் அங்கங்களில் ஏதேனும் ஒன்றை மட்டும் 'எக்ஸ்ட்ராவாக'த் தருவதாகக் கடவுள் வரம் தந்தால், எந்த உறுப்பைக் கேட்பீர்கள்....?

என்ன கேட்டீங்க? கொஞ்சம் சத்தமா உரக்கக் கேளுங்க ப்ளீஸ்...!

● **எம்.அசோக்ராஜா, திருச்சி**

சவால் எப்போது சவடால் ஆகிறது...?

திமிராக எதிராளியிடம் 'டா' போட்டு சவால் விட்டால், சவடால் ஆகிவிடும்!

● மஞ்சுதேவன், நவிமும்பை

வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பலாமா..?

கருத்ததெல்லாம் கண்ணன் என்று நம்புங்கள்.

● பா.அசோக், விருதுநகர்

காமத்தின் பிறப்பிடம் எது...?



குழந்தை முத்தம்!



பெங்களூர்.... அங்குதான் 'ஹோட்டல்-காமத்' ஆரம்பிக்கப்பட்டது...!

● வெ.ராம்குமார், வேலூர்

தலையில் தேன் தடவிக் கொண்டால் வெள்ளை முடி வருமாமே....?

சனி-நீராடலுக்கு பதில் ஹனி-நீராடல் செய்து விட்டீர்கள் போலிருக்கிறது. பரிகாரமாக ஹனீஸ்வரருக்கு வேண்டிக் கொண்டு முடிப் பிரதட்சணம் செய்யுங்க. முடிந்தால் வெள்ளைக்-கிழமை ஸாரி வெள்ளிக் கிழமையில் செய்யுங்க. வெள்ளை முடி போய் இல்லை முடி ஆகிவிடும். வழுக்கைக்கு என்ன கருப்பா வெளுப்பா....!

● இரா.ச.பத்பநாபன், திருவையாறு

'என்' என்றால் 'எண்ணெயாய்' நிற்பவனை வேலைக்கு வைத்துக் கொள்ளலாமா..?

'எண்ணெய்' என்றால் 'சிப்ஸா'க நிற்பவனை வைத்துக் கொள்ளுங்கள்....! ❑

உடையழகு...நடைபழகு...



ஒரு பெண்ணின் அழகைப் பார்த்து மனத்துக்குள் ரகசியமாகவே மாய்ந்து கொண்டிருக்கும் ஆண்கள் பலர்! ஆனால், பெண் ஆணிடம் எதை எதிர்பார்க்கிறாள்? குணம், பணம், படிப்பு என்ற லிஸ்டில் முதலிடம் 'ஜென்டில்மேன் பிஹேவியரு'க்குத்தான்!

இளம் பெண்களிடம் தான் நன்மதிப்பைப் பெற வேண்டுமென்பதில்லை. வீட்டில், ஆஃபீஸில், பஸ்ஸில், உறவினரிடத்தில்... என எங்கும் எப்போதும் எல்லோரிடமுமே 'ஐ கேர் ஃபார் யு' என்ற உண்மையான நோக்கத்துடன் ஜென்டில்மேனாக நடந்து கொள்ளுங்களேன்.

ஒரு பெண்ணுடன் வெளியில் போகும் போது சில விஷயங்களைக் கவனத்தில் கொள்ளவும்.

★ எப்போதுமே பெண்ணை பத்திரமாக நடத்துங்கள். இருவராக ரோட்டில் நடக்க வேண்டுமானால் மெயின் ரோட்டில் நீங்கள் வெளிப் பக்கமாகவும் பெண் உள்பக்கமாகவும் (பிளாட்ஃபாரம் சைட்) நடக்க வேண்டும். நீங்கள் கவசமாக இருப்பதினால் அவளுடைய மனத்தில் 'இவன் நல்லவன்' என யோசிக்க ஆரம்பிப்பாள்.

★ ஹோட்டல், ரெஸ்டாரெண்ட் என வெளியில் போனால் முதலில் பெண் உட்கார்ந்த பிறகே நீங்கள் உட்கார வேண்டும். 'நான் உனக்காக செய்யறேன்'... என்ற முகபாவத்துடன் செய்து பிரயோசனமில்லை.

★ 'அவளுடன்' அப்பாயின்ட்மென்ட் என்றால் கையில் குடையுடன் கிளம்புங்கள். திடீரென மழை பெய்தால் குடை விரித்து அவளை நனையாமல் வருண பகவானிடமிருந்து காப்பாற்றினால் (நீங்கள் தொப்பமாக நனைவதெல்லாம் பெரிய விஷயமேயில்லை) அப்படியே குளிர்ந்து நன்றி மழையில் உங்களை நனைய வைத்துவிடுவாள். விடலாமா கோல்டன் சான்ஸை?

★ எந்தப் பெண்ணுடன் வெளியில் போனாலும் திரும்பவும் வீடு வரை பத்திரமாகக் கொண்டுபோய் விடுவது உங்கள் கடமை.

★ பொதுவாக பஸ்ஸில், ரயிலில் வயதானவர்கள், கர்ப்பிணிகள், ஊனமுற்றோரைப் பார்த்தால் எழுந்து தங்களுடைய இருக்கையைத் தருவது வழக்கம். அதுபோல நீங்களும் பெண்களைப் பார்த்தாலே எழுந்து ஸீட் ஆஃபர் பண்ண



வேண்டும். அவள் நிற்க நீங்கள் தோரணையாக உட்கார்ந்திருந்தால் சரிவராது. கால் வலித்தாலும் பரவாயில்லை. ஜென்டில்மேன் என்ற பெயரெடுக்கணுமா வேண்டாமா?

★ இன்னிக்கு கண்டிப்பா 'காஃபி டே'யில் மீட் பண்றோம் என்று புரோகிராம் போட்டு விட்டு, அவள் வந்த பிறகும் நீங்கள் பாட்டுக்கு செல்லில் பிஸியாக இருப்பது டீஸன்டான செயலல்ல! உங்கள் முன்னே ஒரு பெண் உட்கார்ந்திருந்தால் அவள்தான் உங்களுக்கு மிக முக்கியமான நபர் அப்போதைக்கு! வேறெல்லாம் பிறகுதான்...

★ நீங்கள் ஒரு பெண்ணுடன் எங்காவது வெளியில் போகிறீர்கள். திடீரென உங்களுடைய ஃப்ரெண்ட், பாஸ், உறவினர் என யாரையேனும் பார்க்க நேரிட்டால் நீங்கள் மாத்திரம்

விடலாமா கோல்டன் சான்ஸை?



அவளிருப்பதையே மறந்து அரட்டையடிக்கக் கிளம்பாதீர்கள். அவளை யாரென அறிமுகம் செய்து வையுங்கள். முடிந்தால் அவளையும் உங்கள் அரட்டைக் கச்சேரியில் சேர்க்கவும்.

★ பெண்களுக்கு மிகவும் பிடித்த விஷயம் ஆண்கள் தங்களுக்காகக் கதவைத் திறப்பதுதான். தொண்ணூறு சதவிகிதப் பெண்கள் ஆண்களிடம் கவர்ந்த நம்பர் ஒன் செயலாகக் கூறியிருப்பது இதைத்தான். நம்பர் ஒன் ஜென்டில்மேன் பிஹேவியரும் இதுதான்! மிகவும் மாமூலான சிம்பிளான விஷயம். ஆனால் அர்த்தங்கள் ஆயிரம். நீங்கள் இருவருமாகச் சேர்ந்து வரும்போது ஓடிப் போய் நீங்கள் முன்னால் கதவைத் திறப்பது அழகான செயல். 'நீ எனக்கு மிக முக்கியம்' என சொல்லாமல் சொல்லும் ஆக்ஷன்.


'ஹய்யோ... ரொம்ப டஃப், எங்களால முடியாது' என்றெல்லாம் கத்தக் கூடாது. இன்றிலிருந்து இப்போதிலிருந்தே ஆரம்பிக்கவும்.

- லதா சேகர்

'வலை'யோடு விளையாடு

சமையல்காரர் காளமேகம்!

ஜம்புகேஸ்வரம் என்றும் உபதேச ஸ்தலம் என்றும் அழைக்கப்படும் திருவானைக்காவலைக் கட்டியது கோச்செங்கணான் என்ற மன்னன். முற்பிறவியில் தானொரு சிலந்தியாக





இருந்ததையும், இறைவன் அருள்பெற்று மனிதப்பிறவி அடைந்ததையும் உணர்ந்த அந்த மன்னன் இறைவனுக்கு காணிக்கையாகக் கட்டியதுதான் இக்கோயில்.

இறைவழிபாட்டில் மட்டுமின்றி இலக்கிய வரலாற்றிலும் இக்கோயிலுக்கு முக்கிய இடமுண்டு. நினைத்தவுடன் கவிபாடும் ஆற்றல்கொண்ட ஆசுகவி காளமேகம் இந்தக் கோயிலில் சமையற்கலைஞராக வேலை பார்த்தவர்.

தமிழகத்தின் பிரசித்தி பெற்ற திருத்தலங்களைப் பற்றிய தகவல்களை வழங்குகிறது tamilnadu-temples.com தல வரலாற்றோடு பயணவழிக் குறிப்புகளும் இத்தளத்தில் இடம்பெற்றுள்ளன.


நேதாஜி

சிறைத்தீவு

இந்தியாவை விட்டு தனித்துக் கிடந்தாலும் தேசத்தின் சரித்திரத்தை அந்தமான் தீவுக்கூட்டத்தின் பெயர் குறிப்பிடாமல் எழுத முடியாது.

1789ம் ஆண்டில் லெப்டினன்ட் ஆர்ச்சிபால்ட் ப்ளேர் என்ற ஆங்கிலேய அதிகாரி முதன்முதலில் கிழக்கிந்தியக் கம்பெனியின் கப்பல்களுக்குப் பாதுகாப்பான துறைமுகமாகத் தேர்ந்தெடுத்த இடம்தான் தற்போதைய போர்ட் ப்ளேர். ஆனால் பராமரிப்புச் செலவுகளைத் தாக்குப்பிடிக்க முடியாமல் அந்தத் திட்டத்தைச் சில வருடங்களிலேயே கைவிட்டுவிட்டார்.

பிறகு 1857ம் ஆண்டு சிப்பாய்க் கலகத்தில் குற்றம் சுமத்தப்பட்டவர்களைத் தன்னந்தனியாகச் சிறைப்படுத்த எண்ணிய



அந்தமான்!

போது மீண்டும் அந்தமான் புத்துயிர் பெற்றது.

1896ல் தொடங்கி பத்தாண்டு காலம் கட்டி முடித்த சிறைச்சாலைதான் அந்தமானின் பிரதான வரலாற்றுச் சின்னம்.

அலிப்பூர் சதி வழக்கில் கைதான 34 கைதிகளோடு தொடங்கிய அந்தமானின் சிறைப்படலம் 1945ம் ஆண்டில்தான் முடிவுக்கு வந்தது.

நேதாஜி முதன்முதலாகக் கைப்பற்றி சுதந்திரப் பிரகடனம் செய்ததும்கூட அந்தமான் தீவைத்தான்.

சிறை ஏழு வரிசையாக மலர்ந்து விரியும் பூவொன்றின் இதழ்களைப் போல வடிவமைக்கப்பட்டிருக்கிறது. கட்டடம் மட்டும்தான் கல்மலர். சுமழ்ந்ததெல்லாம் குருதியின் வாசம்... www.andamancellularjail.org

ஆழிசூழ் உலகு

மனிதன் வாழும் நிலத்தைச் சுற்றி சூழ்ந்திருந்தாலும் கடல் இன்னமும் அவனுக்குப் புரியாத புதிர்தான். இயற்கையின் புதிர்களுக்கு விடைகாணும் நீண்ட கால முயற்சியில் அவன் அறிந்துகொண்ட கொஞ்சமே கொஞ்சம் விஷயங்களும் கடலைப்பற்றி ஒரு மாய வசிகரத்தைத்தான் உண்டாக்கியிருக்கின்றன.

மீன்கள், நீரோட்டங்கள், பவளப் பாறைகள், துணைக்கோள்கள், அலைகள், பனிப் பாறைகள் என்று கடலின் சகல சுவாரஸ்யங்களையும் உள்ளடக்க முயற்சி செய்திருக்கிறது www.oceanworld.tamu.edu இணைய தளம். கடல்குறித்த படிப்புகள், கல்வி நிலையங்கள் போன்ற தகவல்களும் இத்தளத்தில் உண்டு. மாணவர்களையும் இயற்கை ஆர்வலர்களையும் கவர்கின்ற தகவல் பெட்டகம். ○

ஓர் இலக்கிய நிகழ்ச்சிக்கு தலைமை தாங்குவதற்காக அண்மையில் சென்னை வந்திருந்தார் மூத்த மலையாள எழுத்தாளர் எம்.டி.வாசுதேவன் நாயர். அவருடன் ஒரு சந்திப்பு:

நாட்டிலேயே அதிக கல்வி அறிவு கொண்ட மாநிலமாக கேரளா இருப்பதன் காரணம் என்ன?

''பல ஆண்டுகளாகவே கேரளாவில் கல்வி அறிவு பெறுவதற்காக அடிப்படை வசதிகள் பரவலாக அமைந்திருந்ததும், கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாக இருந்ததும்தான் காரணம். அது மட்டுமில்லாமல், வீட்டில் இருக்கும் பெண்களுக்கு ராமாயணம், மகாபாரதம் தொடங்கி பல இலக்கியப் படைப்புகளை வெறுமனே பார்த்து கையால் எழுதி பிரதி எடுப்பது அறிவார்ந்த பொழுதுபோக்காகவே இருந்து வந்தது. மேலும், சிறு வயதிலேயே தவறு இல்லாமல், ராமாயணம், பாகவதம் போன்றவற்றைப் பெரியவர்களுக்குப் படித்துக்காட்டும் குழந்தைகள் புத்திசாலிகளாகக் கருதப்பட்டார்கள்.''

கேரளாவில் இலக்கியவாதிகளுக்கு மரியாதை இருக்கிறதே?

''படிக்கும் ஆர்வம் அதிகமாக இருந்தால், இலக்கியவாதிகளுக்கு நல்ல மரியாதை கிடைப்பது சகஜம் தானே?''

சினிமா நடிகர்களுக்கு பெரிய அளவில் வரவேற்பு கிடைக்காமல் இருக்கவும் அதுதான் காரணமா?

''என்றைக்குமே கேரள மக்கள் நல்ல ரசனை கொண்டவர்கள். சினிமாவை ரசிப்பார்கள். சினிமா நடிகர்களை மதிப்பார்கள். ஆனால் அவர்களது பாப்புலாரிடிக்கும், நடிப்புக்கும் மயங்கி, அவர்களுக்கு வோட்டுப் போட்டுவிட மாட்டார்கள். கேரளாவிலும், சினிமா புகழை நம்பி சில நடிகர்கள் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். ஆனால் மக்கள் அவர்களை அங்கீகரிப்பது கிடையாது.''

மலையாளத்தில் இலக்கியம்-சினிமா இரண்டும் நெருங்கி வர எப்படி சாத்தியமானது?

''அந்தக் காலத்தில் சினிமா இயக்குநர்கள் பலரும் பல சிறந்த மலையாள இலக்கியப் படைப்புகளை திரைப்படமாக உருவாக்கினார்கள். இலக்கிய ரசனை மிகுந்த மக்கள் மத்தியில் அவற்றுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. நாவல்களை, திரைக்கு ஏற்றபடி மாற்றித் தருகிற பணியையும் அந்தந்த இலக்கியவாதிகள் செய்தார்கள். நாளடைவில் அவர்களுக்கும் சினிமா மீது மிகுந்த ஈடுபாடு ஏற்பட, அவர்களே படங்களை இயக்கவும் ஆரம்பித்தார்கள்.''

மலையாளத்தில் பிரபலமாக இருந்த 'ஆர்ட் சினிமா' என்னவாயிற்று?

''உலகமெங்கும் குறிப்பாக ஃபிரான்சில் 'நியூ வேவ்' படங்கள் வரத் தொடங்கிய போது, இங்கேயும், குறைந்த பட்ஜெட்டில், பெரிய ஸ்டார்கள் யாரும் நடிக்காத ஆழமான கதை மட்டுமே கொண்ட படங்கள் வரத் தொடங்கின. இன்று அந்த வித்தியாசம் இல்லாமல், பெரிய பட்ஜெட்டில் எடுக்கப்படும் படங்கள், சிறிய பட்ஜெட்டில் எடுக்கப்படும் படங்கள் என்ற இரண்டு பிரிவுகளில் படங்கள் வந்து கொண்டிருக்கின்றன.''

> **''கேரளாவில் இடதுசாரிகளுக்கும், காங்கிரஸுக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் வெறும் நான்கு சதவிகிதம்தான்.''**

சினிமா என்பது



நடிகர்களை அங்கீகரிப்பதில்லை!

-எம்.டி. வாசுதேவன்நாயர்

மக்களுக்குத்தானே? மக்கள் பார்க்காத, ரிலீஸ் ஆகாத படங்களுக்கு விருது கொடுக்கலாமா...?

''எந்த இயக்குநரும் தாம் எடுக்கும் படம் குறைந்த எண்ணிக்கையில் மக்களைச் சென்றடைந்தால் போதும் என்ற எண்ணத்தில் படம் எடுப்பதில்லை. எல்லோருமே நிறைய மக்கள் பார்க்க வேண்டும் என்றுதான் எடுக்கிறார்கள். எனவே, ஒரு படம் சிறப்பாக இருந்தால் அதற்கு விருது கொடுக்கப்படுகிறது. அது மக்களைச் சென்றடையாவிட்டால் அது டைரக்டரது தவறில்லையே?''

கேரள கம்யூனிஸ்ட் ஆட்சி, மே.வங்க கம்யூனிஸ்ட் ஆட்சி...?


''கேரளாவில் இடதுசாரிகளுக்கும், காங்கிரஸுக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் வெறும் நான்கு சதவிகிதம்தான். எனவே, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஆட்சி மாற்றம் நடைபெறுகிறது.''

கேரளாவுக்கு துபாய் பணவரத்து மிக அதிகம். அதனால் கேரளா அடைந்த பலன் என்ன?

''கேரளாவில் வசிக்கும் சில தனிநபர்களின் செழிப்புக்கு துபாய் பணம் கைகொடுத்திருக்கிறது. ஆனால் மாநிலத்தின் முன்னேற்றத்துக்கு உதவி இருப்பதாகச் சொல்ல முடியாது. சமீபகாலமாக கேரள ஆட்சியாளர்கள், துபாயிலிருந்து வருகிற பணத்தை மாநிலத்தின் முன்னேற்றத்துக்கு எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற கோணத்தில் சிந்திக்கிறார்கள்.''

- எஸ்.சந்திரமௌலி

படங்கள் : **ஸ்ரீஹரி**



நிறம் மாறும்

மேற்கு வங்கத்தில் உள்ள லால்கரில் மக்கள் குடைபிடித்துக்கொண்டு வரிசையில் நின்றுகொண்டிருக்கிறார்கள். அரிசி, பால் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் எதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் இருப்பிடத்தைவிட்டு வெளியேறிவிட்டார்கள்.



கடைகள் மூடப்பட்டுவிட்டன. தெருக்கள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. திரும்பும் திசையெங்கும் எல்லையோரப் பாதுகாப்புப் படை, ரிசர்வ் படை. 'கவலை வேண்டாம், அமைதியை நிலைநாட்டிவிட்டோம், லால்கரைக் கைப்பற்றிவிட்டோம்' என்கிறது காவல்துறை.

அசப்பில் இலங்கையை நினைவுபடுத்துகிறது லால்கர். அங்கே விடுதலைப் புலிகள், இங்கே மாவோயிஸ்டுகள்!

'நக்ஸலைட்டுகள் தொடங்கிய போர் இது' என்கிறார்கள் காவல்துறையினர். 'நவம்பர் மாதம் தொடங்கி லால்கரை அவர்கள் ஆக்கிரமிப்பு செய்து வருகிறார்கள். சட்டீஸ்கரில் பதினொரு படையினரைக் கொன்றுவிட்டார்கள். இரு தினங்கள் கழித்து, பதினாறு பேர் நக்ஸலைட்டுகளின் பொறிக்குள் சிக்கி வெடித்துச் சிதறிவிட்டார்கள். சி.பி.எம். உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கட்சி அலுவலகங்கள் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன. இப்படியே விட்டால் லால்கர் தொடங்கி பல பகுதிகளை இழக்கவேண்டிவரும் என்பதால்தான் விரைந்து நடவடிக்கை எடுத்தோம். இப்போது லால்கரை மீட்டுவிட்டோம். நல்ல வேளையாக, மாவோயிஸ்ட் இயக்கம் தடை செய்யப்பட்டுவிட்டது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, நக்ஸலைட் இயக்கத்தை முற்றிலுமாக அழிக்கவேண்டும். இதுபோன்ற



சிவப்பு!

மருதன்

இயக்கங்களுக்கு இரக்கம் காட்டுவது ஆபத்தானது.'

தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற்ற ஒரு மாதத்தில் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உத்தரவை புத்ததேவ் உடனடியாக மேற்கு வங்கத்தில் நீட்டிக்கவேண்டும் என்று மத்திய அரசாங்கம் விரும்புகிறது. ஆனால், புத்ததேவால் அதைச் செய்யமுடியவில்லை. இத்தனைக்கும், மாவோயிஸ்டுகளின் ஆயுதப் போராட்டத்தைப் பலமாக எதிர்ப்பவர்தான் அவர். நக்ஸலைட்டுகள் வேட்டையாடப்படவேண்டும் என்பதில் அவருக்கு மாற்றுக் கருத்து கிடையாது. என்றாலும், மத்திய அரசாங்கத்தைப் போல் வெளிப்படையாக மாவோயிஸ்டுகள் மீது தடைவிதிக்க அவருக்குத் தயக்கம்.

ஒரு கம்யூனிஸ்ட் அரசாங்கமே மற்றொரு கம்யூனிஸ்ட் பிரிவைத் தடைசெய்வது தீவிர விமர்சனங்களைக் கிளப்பும். ஏற்கெனவே தேர்தல் தோல்வி. அத்தோடு சேர்த்து இதுபோன்ற சர்ச்சைகளும் சேர்ந்துகொள்வது அரசியல் எதிர்காலத்துக்கு நல்லதல்ல. அதைவிடப் பெரிய ஆபத்து, மம்தா பானர்ஜி. மாவோயிஸ்டுகள் மீது இவருக்கு எந்த அபிமானமும் கிடையாது என்றாலும் சி.பி.எம்.மை எதிர்ப்பதற்கு இந்தத் தடையுத்தரவை அவர் பயன்படுத்தி

தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற்ற ஒரு மாதத்துக்குள்ளாகவே மாவோயிஸ்ட்கள் மீது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது!



மேற்கு வங்கப் பிரச்னைக்குக் காரணம் மாவோயிஸ்ட் இயக்கம் அல்ல. அது சிக்கலான பிரச்னையின் விளைவு!

வருகிறார்!

நக்ஸலைட்டுகளுக்கு எதிரான போர் என்று பெயரளவில் அறிவித்திருந்தாலும் நிஜத்தில் இது பழங்குடி இன மக்களுக்கு எதிரான போராகவே உருவெடுத்துள்ளது. கடந்த காலங்களில் நடைபெற்றதும் இதுவேதான். சட்டீஸ்கரில் உள்ள பழங்குடி மக்களை ஒடுக்குவதற்காக 2005ல் சல்வா ஜுடும் என்னும் குண்டர்கள் படை உருவாக்கப்பட்டது. இந்தப் படைக்கு நிதியுதவி தொடங்கி ஆயுத உதவி வரை அனைத்தையும் சத்தீஸ்கர் அரசே செய்துகொடுத்தது. இங்குள்ள பழங்குடி மக்கள் நக்ஸலைட்டுகளை ஆதரிக்கிறார்கள் என்பதால் இந்த ஏற்பாடு. எந்தவொரு தீவிரவாத இயக்கத்தையும் மிஞ்சிவிடும் அளவுக்கு மிகக் கொடூரமான பல தாக்குதல்களை சல்வா ஜுடும் அப்பாவி பழங்குடி மக்கள் மீது நடத்தியுள்ளது; தொடர்ந்து நடத்திவருகிறது.

லால்கரிலும் இதுதான் நிலைமை. நக்ஸலைட்டுகள் மீது அளவுக்கு அதிகமாக வெளிச்சத்தைப் பாய்ச்சி நிஜத்தை இருட்டில் மூழ்கடித்துவிட்டது அரசு.

நந்திகிராமில் நடைபெற்றதைப் போலவே லால்கரிலும் 5000 ஏக்கர் நிலத்தை சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கும் முயற்சியில் சில காலமாகவே ஈடுபட்டுவருகிறது மேற்கு வங்க அரசு. ஜிண்டால் என்னும் நிறுவனம் தனது இரும்பு எஃகு ஆலையை அமைப்பதற்காக லால்கரின் காட்டு வளத்தை அழிக்க முடிவு செய்துவிட்டது அரசு.


இதற்கு எதிராக பழங்குடி மக்கள் அணிதிரண்டு போராட ஆரம்பித்தனர். போராட்டத்தை எதிர்க்க அரசாங்கம், கட்சி, காவல்துறை மூன்றும் கைகோத்துக்கொண்டபோது, மக்கள் இந்த மூன்றையும் சேர்த்தே எதிர்க்க ஆரம்பித்தனர். மாவோயிஸ்டுகளின் துணையும் அவர்களுக்குக் கிடைத்தது. மாவோயிஸ்டுகள் மட்டுமல்ல பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், மனித உரிமை காப்பாளர்கள் என்று பல்வேறு அணியினர் லால்கர் மக்கள் பக்கம் வந்து நின்றனர். அரசாங்கத்துக்கு எதிராக கொல்கத்தாவில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

மேற்கு வங்கப் பிரச்னைக்குக் காரணம் மாவோயிஸ்டுகள் இயக்கம் அல்ல. அது ஒரு மிகச் சிக்கலான பிரச்னையின் விளைவு! விளைவுகளை அழித்துவிடுவதன் மூலம் மட்டுமே பிரச்னை காணாமல்போவதில்லை.

மற்ற கல்லூரி மாணவிகள் போல் இல்லாமல் நிறையவே வித்தியாசங்களுடன் அமைதியாய், அதீத சுறுசுறுப்புடன், ரொம்பவும் பொறுப்பாக... பொறுமையுடன் இன்னும்... இன்னும்... கலக்குகின்றனர், கே.ஜி.குரூப்ஸ் ஆஃப் நரர்ஸிங் பயிற்சிக் கல்லூரி மாணவிகள்.

''டி.வி. பார்க்கவோ, பொழுது போக்கவோ எங்க பசங்களுக்கு நேரமே கிடையாதுங்க. அவ்வளவு பிஸி'' என்றார் இவர்களது இயக்குநர் வைஜெயந்தி.

''சரிங்க. கொஞ்சம் கூலாகிக்குங்க. நாங்க உங்க லைனுக்கே வர்றோம். முதன் முதலில் உங்கள் புரொபஷனல் அனுபவம் எப்படி?'' என்று அகில்தேவியை ஓரம் கட்டினோம். ''ஐயோ என்ட கர்த்தாவே இப்ப நினைச்சாலும் உடல் சிலிர்க்குதுங்க. ஒரு பேஷண்ட் ரொம்பவும் கிரிட்டிகல் கண்டிஷன்ல இருந்தாங்க. இரவு நேரம், நான் மட்டும்தான். ரொம்பவும் நெர்வஸாக



இருந்தது. ஆனால், அடுத்த நிமிடம் அவங்க கேஸ் ரெகார்டைப் பார்த்து, சுதாரிச்சிட்டேன். முதலுதவியை ஆரம்பித்து அப்புறம் மத்தவங்களுக்கு இன்ஃபார்ம் பண்ணி, அந்தத் திக் திக் நிமிடங்களை இன்னும் மறக்க முடியலை'' என்றார்.

அடுத்து அனிதா ஃபீலிங் கார்னருக்குள் நம்மையும் இழுத்துச் சென்று விட்டார். ''முதல் டெலிவரிங்க ஒரு பெண்ணுக்கு. எத்தனையோ போராடியும் நார்மலாக இல்லாமல், சிசேரியன் செய்ய வேண்டியது ஆயிற்று. அரை மயக்கத்தில் கண்களை விழித்தும், விழிக்க முடியாமல் தன் அருகிலிருந்த குழந்தையைத் தொட்டுத் தடவினாங்க. அந்த மயக்கத்திலும், வேதனையிலும் அவங்க முகத்துல மலர்ந்த புன்னகையைப் பார்த்ததும் எனக்கு என் அம்மாவின் ஞாபகம்தான் வந்தது. தாய்மையின் உன்னதத்தை நான் பரிபூரணமாக உணர்ந்த தருணம் அது'' என்றார் ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டு.

நர்ஸ் என்றாலே மென்மையும் அமைதியுமே நினைவுக்கு வரும். அதிரடி சாதனைகளான விளையாட்டில் எப்படி?





என்ன இப்படிக் கேட்டுட்டீங்க என்ற ரேஞ்சில் நம்மை ஒரு லுக் விட்டவர்கள், ''இந்த வருடம் நர்ஸிங் கல்லூரிகளுக்கிடையிலான இன்டர் காலேஜ் போட்டிகளில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை நாங்கதான் தட்டிக்கிட்டு வந்தோம். எங்க ஜெல்லின் சுஜினா மாநில அளவில் 200 மீட்டர் ஓட்டம், நீளந்தாண்டுதலில் முதலிடம். அது மட்டுமா? த்ரோபால், 'பேட்மின்ட்டன் சாம்பியன், ஃபேஷன் பரேடில் நாங்கள்தான் முதலிடம் தெரியுமா?'' என்று கர்ஜித்துத் தீர்த்து விட்டார்கள்.

படிப்புல எப்படி?



> **அரை மயக்கத்தில் கண்களை விழித்தும், விழிக்க முடியாமல் தன் அருகிலிருந்த குழந்தையைத் தொட்டுத் தடவினாங்க.**

''நாங்களெல்லாம் அரியர் வைக்காத அவுட்ஸ்டேண்டிங். எங்களுக்கு இங்கிலீஷ்ல பிடிக்காத ஒரே வார்த்தை அரியர் தான்.''

உங்க காலேஜின் சிறப்பு?

''பல அதிநவீன துல்லியமான உடல் ஆய்வுக்கான கருவிகள் ஆசியாவிலேயே எங்க கே.ஜி. மருத்துவமனையில்தான் இருக்கு. சமீபத்தில் ஆறரை கோடி ரூபாய் மதிப்பில் வாங்கப்பட்ட 128 ஸ்லைஸ் ஹார்ட் சி.டி. ஸ்கேனர். இதில் உள்ளே போய்ப் படுத்தால் ஐந்தே வினாடிகளில் நம்ம இதயத்தை துல்லியமா அலசிப் பார்த்து எங்கே அடைப்பு இருக்குன்னு சொல்லிடும். உயர் தரமான பயிற்சி. தனித்தனியான கவனிப்பு. எங்கள் கல்லூரியில் பயிற்சி பெற்ற செவிலியர்களுக்கு இந்திய அளவில் மட்டுமல்ல... உலக அளவிலும் அதிகமான வரவேற்பு இருக்கு.

உலக அளவில் சிறந்த இருதய நோய் சிறப்பு மருத்துவரான எங்கள் சேர்மன், ஐம்பது வருடங்களுக்கு முன்பே வெளிநாட்டில் வேலை கிடைச்சும் தமது தந்தையின் கட்டளையை ஏற்று சொந்த ஊர் மக்களுக்கு பணிசெய்துட்டு இருக்கார்'' என்று அடுக்கினார்கள்.

ஒரே துறையில் பணி செய்பவர்கள் திருமணம் செய்து கொள்வது பற்றி?

''ரொம்பவும் நல்ல விஷயம். ஒருவர் பணிச் சுமைகளை மற்றவர்கள் புரிந்து கொள்ள முடியும். குடும்ப வாழ்க்கை சீராக இருக்கும்'' என்றார்கள்.

- ஆர்.பாலா

குடி நோயிலிருந்து விடுபட வந்த கூட்டத்தினரிடையே சசியின் அப்பா பேசத் துவங்கினார் - ஸ்படிகமான மொழியில் பிசிறு இல்லா தொனியில்.

''நானும் உங்களை மாதிரிதான். இதுல வெட்கப்பட ஏதுமில்லை. கவலைதான் படணும். அதுகூடத் தேவையில்லை. கவலை ஒரு ஸ்லோ பாய்ஸன். கவலைக்குக் காரணம் பிரச்னைதானே? அந்தப் பிரச்னை தீர்க்கக்கூடியது எனில் தீர்ப்பது எப்படின்னு யோசிங்க. தீர்க்கவே நம்ம சக்தியால முடியாதுன்னா அதை விட்டுடு. ஆக

அமிர்தம் சூர்யா

12



எதுக்குக் கவலைப்படணும்? குடிநோய் தீர்க்கக் கூடிய பிரச்னை. என்னை, என் குடியின் நிலைமையை எனக்குத் தெரியாமலே படம்பிடிச்சு எனக்குக் காட்டி புரிய வெச்சா என் மகள் சசி.''

பேச்சினூடாக கூட்டத்திலிருந்த ஒருவர் எழுந்து, ''உங்க அலங்கோலத்த நீங்களே பார்க்கிறப்ப எப்படி உணர்ந்தீங்க?'' என்றார்.

சசியின் அப்பா ''கூச்சமா இருந்தது. வீட்டில இருக்கிறவங்க நேருக்கு நேர் பார்க்க முடியல. சமூக கூச்சம் என்கிற உணர்வு அவசியம் தான்னு தோணுது'' என்றவர், மீண்டும் தொடர்ந்தார். ''ஜாலிக்காக, மாடலான லைஃப்னு சொல்லிக்க, கம்பெனி கொடுக்க, காரியம் சாதிக்க, நான் ரொம்ப கண்ட்ரோல்னு நிரூபிக்க, ஏதோ... ஏதோ ஒருசாக்கு தேவைப்படுது - இந்தப் புதை குழியில் விழ. கொஞ்சம் கொஞ்சமா இன்ஸ்டால்மெண்ட்ல தற்கொலை பண்ணிக்க.

குடியை நான் விடணும்னு நெனைச்சாலும் விட முடியல. கை கால் நடுங்குது. பைத்தியம் பிடிச்சா மாதிரி ஆகிடுது. எரிச்சலும் கோபமும் சேருது. கடன் வாங்க, வீட்டிலேயே திருட புத்தி அலைபாயுது. இன்னைக்கு குடிச்சிட்டு நாளைக்கு நிறுத்தலாம்னு மனசு முடிவை ஒத்திப்போடுது. தாம்பத்ய உணர்வு குறைஞ்சு நம்மால் முடியலேன்னு குற்ற உணர்ச்சி வருது. மனைவி நம்மைக் கேள்வி கேட்காம இருக்க அடி ஒதைன்னு பயமுறுத்தத் தோணுது. வீட்டில் கடன் பெருகி, வறுக்கப்பட்ட விதைகள் முளைக்க முடியாதது போல மகிழ்ச்சி பலிபீடத்தில் அறுபட்டு நிக்குது. கூடவே கல்லீரல், கணையம், இருதயம், நுரையீரல், சிறுநீரகம், மனநலம்னு ஒவ்வொன்றும் பழுதடைந்து நம்மை விட்டு விலக முடிவெடுக்குது. இதுக்கு ட்ரீட்மெண்ட்தான் ஒரே வழி. லைஃப் ஸ்டைலை மாத்தி, வாழ்க்கையை ஓவர் ஹாலிங் செய்து வெளிச்சத்தை வீடு முழுக்க நிரப் பணும்.

தமிழ்ஞானி வள்ளுவன், புத்தர்னு பலரும் அந்தக் காலத்துல மதுவை எதிர்த்தாங்க. அரசர்கள்னு பார்த்தா...1787-ல் மொகலாய மன்னன் திப்பு சுல்தான் வருவாய்த் துறை சட்டத்தின் ஒரு ஷரத்தில் அரசு வருவாய்க்கு மதுவை விற்பது, மதுவை அனுமதிப்பது தவறு. அது மக்களுக்கு நல்லதல்லனு குறிப்பிட்டு மதுவை வியாபாரமாக்க



விடியலின் வரைபடம்

எதிர்ப்பும் தண்டனையும் கொடுத்துள்ளாராம். எழுத்தாளர் திலகவதி ஐ.பி.எஸ். இதைக் குறிப்பிட்டு எழுதியிருக்காங்க'' என்று சொல்லிக் கொண்டிருக்கையில் தொண்டை கமறியது. கொஞ்சம் இளமையான செருமலை வெளிப்படுத்திய போது, ஒருவர் தண்ணீர் தம்ளரோடு ஓடி வந்தார். ''இதக் குடிங்க ஸார்'' என்றபடி ''திலகவதி எதுல எழுதியிருக்காங்க'' என்றார். ''டணாய்க்கன் கோட்டை என்ற நூலின் முன்னுரையில்'' என்று சொல்லி மீண்டும் பேசத் துவங்கினார்.

''ஜனநாயகத்துக்குப் பிறகு காந்திஜி, ராஜாஜி, பெரியார்னு எல்லோரும் எதிர்த்த மதுவை இந்த திராவிட ஆட்சி தான் அனுமதித்தது. தமிழனின் வாழ்வைச் சிதறுதேங்காய் போல சிதைச்சது. ஆரம்பத்தில் மதுவிலக்கினை ஆதரவுக் குரலால் அணைத்த பா.ம.க., இப்போது கள் இறக்க அனுமதிக்கலாம் என்று அந்தர் பல்டி அடிக்குது'' என்றதும், ஒரு பெண்மணி எழுந்து, ''இப்ப எலெக்‌ஷன் வரப் போகுதா என்ன? முடிவை மாத்திக்க'' என்றார். கூட்டமே சிரிப்பில் மூழ்கியது. சசியப்பா விட்ட இடத்திலிருந்து துவங்கினார்.

''நான் ஒரு குறும்படம் பார்த்தேன். உடம்பு சரியில்லாத குழந்தை அழுதுக்கிட்டே இருக்கு. கிராமத்திலேர்ந்து டவுனுக்கு, புருஷனும் பொண்டாட்டியும் குழந்தையைத் தூக்கிக்கிட்டுப் போகும் போது வழியில டாஸ்மாக் கடை. இதோ வந்துர்றேன்னு போன புருஷன் ரொம்ப நேரமா ஆளைக் காணோம். சோர்ந்து மயங்கிய குழந்தையைத் தனியா தூக்கிட்டு ஓடுறா. ஹாஸ்பிட்டல்ல குழந்தை செத்துடுச்சன்னு சொல்றாங்க. குடிச்சிட்டு ஆடிக்கிட்டு வர்ற புருஷனை ஆத்திரமும் அழுகையுமா தரையில் தள்ளிட்டு, இறந்த குழந்தையோடு கிராமத்துக்கு அழுதபடியே நடந்தே போகிறாள். 'ஒரு குடியின் பாதை' என்ற பெயரில் 'இசாக்' என்கிற தோழர் எடுத்தது.

பல்வேறு கிராமங்களிலிருந்து வேலை தேடி திருப்பூருக்கு பனியன் ஃபேக்டரிக்கு வர்றாங்க. வாரக் கூலி. பெரும்பாலும் பேச்சிலர்கள். சம்பாதிக்கிறதை வார இறுதியில் குடிக்கிறதில் செலவு செஞ்சிடறான். திருப்பூரில் சனிக்கிழமை மட்டும் ஒரே இரவில் மூணு கோடிக்கு டாஸ்மாக்கில் வியாபாரம் நடக்குது'' என்றதும் கூட்டத்தில் சலசலப்பு. 'ஒரு ராத்திரில 3 கோடியா' 'அடப்பாவிங்க' 'உழைச்ச பணத்தை பொணத்து வாயிலேயா போடுவாங்க' பல்வேறு குரல்கள் எழும்பி அடங்கின. விட்ட இடத்திலிருந்து கச்சிதமாய்ப் பேசத் துவங்கினார்

அரசு வருவாய்க்கு மதுவை விற்பது, அனுமதிப்பது தவறு. அது மக்களுக்கு நல்லதல்ல.

மீண்டும். ''ஒரு மாசத்தில் திருப்பூர்ல மட்டும் உழைப்பின் வியர்வையை 65 கோடியா அரசு அள்ளிக்கிட்டுப் போகுதுன்னு ஆதாரபூர்வமா இந்திய ஜனநாயக வாலிபர் சங்க முத்து கண்ணன் குறிப்பிட்டு இருக்கிறார். அரசு பல குடும்பங்களைக் காவு கொண்டு இலவச மேல் பூச்சுத் திட்டங்களைச் செய்கிறது.

ஒரு நகரத்தில் பாழடைந்த புதர் மண்டிய அழுக்கு மாளிகை இருந்தது. அதை ஒரு வாரத்துக்குள் அழகுபடுத்துபவனுக்கு நகரத்தை ஆளும் பொறுப்பு வழங்கப்படும் என்றார் மன்னர். ஒருவன் ஒரு வாரத்துக்குள் புதர்களை அழித்து வெளிப்புறத்தை அழகாக்கினான். இரண்டாமவன் மாளிகையைச் சுத்தம் செய்து வெள்ளையடித்தான். மூன்றாம் நபர் 'எதைச் செய்வது? இவர்களை விடச் சிறப்பாக என்ன செய்ய முடியும்?' என்று யோசித்தபடி மாளிகையின் சுவரின் கண்ணாம்பை சுரண்டிக் கொண்டிருந்தான் யதேச்சையாய். சுவர் பளபளத்தது. பல இடங்களில் சுரண்டிப் பார்த்தான். ஒரு விஷயம் புரிந்தது. ஒரு வாரத்தில் மாளிகை முழுதும் அடித்திருந்த சுண்ணாம்பைச் சுரண்டிக் கழுவி எடுத்தான். ஒரு புத்தம் புதிய பளிங்கு மாளிகை உருப்பெற்று வெளியே தெரிந்தது. அவனே நகரை ஆட்சி செய்பவனாய் நியமிக்கப்பட்டான்.

அழுக்கு மாளிகை என்பது நமது இன்றைய வாழ்வு. அதனுள் மறைந்திருக்கும் பளிங்குப் பொலிவை நாம் இங்கு கழுவிப் பெறவேண்டும். இது ஆட்சிக்கும் பொருந்தும். மருந்தால், மாத்திரையால், யோகத்தால், தியானத்தால், அறியாமை நீக்கும் பேச்சால் நம்மை நாம் கழுவிக் கொண்டு தவணை முறையில் மெல்ல மெல்ல விரும்பிச் செய்து கொள்ளும் தற்கொலையிலிருந்து நாம் மீளவேண்டும். விழுதுகள் வாழ்த்தும் வேராக நாம் மாற வேண்டும். நமக்கு ஏற்பட்டுள்ளது சிராய்ப்புதான் - சிராய்ப்பு ஒரு போதும் வடுக்கள் ஆகாது.''

அப்பா பேசி முடித்தார். திருந்தியவர்களும், திருந்தும் தருணத்துக்காகக் காத்திருப்போரும் கைரேகை கரையும் வரை கைதட்டினார்கள். பழைய அப்பா தனக்குக் கிடைத்துவிடுவார் என்ற மகிழ்ச்சியில் சந்தோஷத் திவலை குட்டிச் சிறுமியாய் எட்டிப் பார்த்தது சசியின் கண்களில். ''அப்பா உங்களுக்குப் பதினைந்து நாள் ட்ரீட்மென்ட் முடியற வரைக்கும் தோழி ராஜேஸ்வரி வீட்டுல நான் தங்கிக்கிறேன். சென்னைக்கு விடியலைச் சுமந்தபடி வரப்போறீங்க. ஆல் த பெஸ்ட்'' என்றபடி அந்த மையம் விட்டு நகரத்துவங்கினாள் சசி. வெளியே மகிழ்ச்சியின் வாசனை வெளிச்சமாய் வீசத் துவங்கியது.

(நிறைந்தது)

விழுதுகள் வாழ்த்தும் வேராக நாம் மாற வேண்டும்



கல்விக்குக் கைகொடுத்து வாழ்க்கைக்கு உரமிடுங்கள்!

★ ஆதி பராசக்தி தொழில்நுட்பக் கல்லூரியில் மூன்றாண்டு கால மெக்கானிகல் இன்ஜினீயரிங் டிப்ளமா வகுப்பில் இறுதி ஆண்டு பயின்று வருகிறேன். என் குடும்ப ஏழைமை நிலை காரணமாக இரு ஆண்டு கள் வேலை செய்து அனுபவத்துடன் பணமும் சேர்த்துக்கொண்டு பி.இ. பகுதி நேரமாகப் படித்து தேர்ச்சி பெற ஆர்வமாக உள்ளேன்.

- பழையனூர், பி.கே.லோகேஷ்குமார்

★ நான் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்தவன். எனது பட்டப் படிப்பில் இதுவரை அனைத்துப் பல்கலைக் கழகத் தேர்வுகளிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளேன். சோனா தொழில் நுட்பக் கல்லூரியில் இயந்திரவியல் பட்டப்படிப்பு நான்காம் ஆண்டு படித்து வருகிறேன். தங்கள் அறக்கட்டளை வழங்கும் கல்வி உதவித் தொகை கல்லூரிக் கட்டணம் செலுத்த எனக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

- ஈரோடு, கி.ஞானசேகரன்

★ எனது தந்தை விவசாய கூலித் தொழிலாளி. நான் விடுதியில் தங்கி, பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரியில் முதுகலை இரண்டாம் ஆண்டு சமூகப்பணி பிரிவில் படித்து வருகிறேன். சென்ற செமஸ்டரில் 76.6% மதிப்பெண் பெற்றேன். உங்களின் கல்விக்கான உதவித் தொகை எனக்குக் கிடைத்தால் மிகவும் உதவியாக இருக்கும்.

- தஞ்சாவூர், சி.நித்யா



✱ லோகேஷ்குமார்



✱ ஞானசேகரன்



✱ நித்யா

கல்வி நிறுவனத் தலைவரின் சான்றிதழுடன் சென்ற ஆண்டு பெறப்பட்ட இது போன்ற ஆயிரக்கணக்கான விண்ணப்பங்களை **கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளையின்** அறங்காவலர்கள் கவனத்துடன் பரிசீலித்து கல்வியில் சிறந்த, ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவ - மாணவியரைத் தேர்ந்தெடுத்து உதவித் தொகைகள் கிடைக்கச் செய்தனர்.

இவ்வாண்டு இந்த நற்பணியில் பங்கேற்க விரும்பும் கல்கி அன்பர்கள் தங்களால் இயன்ற நன்கொடையை செக், டிராஃப்ட் அல்லது மணி ஆர்டர் மூலம் Kalki Krishnamurthy Memorial Trust என்ற பெயருக்கு அனுப்பலாம். ரூபாய் ஆயிரம் அல்லது அதற்கு அதிகமான நன்கொடை வழங்குவோர் மூலதன நிதிக்கு (Corpus Fund) வழங்குவதாகக் கடிதம் எழுதவும். அவ்வாறே முதலீடாகி, அதிலிருந்து கிடைக்கும் வருவாய் நிரந்தரமாக மாணவ மாணவியருக்கு உதவித் தொகைகள் வழங்கப் பயன்படுத்தப்படும். நன்கொடைகளுக்கு 80-G பிரிவின் கீழ் வருமானவரி விலக்கு உண்டு. நன்றி.

கல்கி ராஜேந்திரன்
(நிர்வாக அறங்காவலர்)

விலாசம்:
கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை,
புது எண் 14, நான்காவது பிரதான சாலை,
கஸ்தூர்பா நகர், சென்னை - 600 020

பொருத்திய நெருப்பு



தெருக்குழாயில் தண்ணீர் கண்ணீராய் விழுந்து கொண்டிருந்தது. வரிசையில் இருக்கும் வெறுங்குடம் நிறைகுடமாகித் தன் இடுப்பில் ஏறுவதற்கு இன்னும் ஒரு மணி நேரமாவது ஆகும். அதுவரையில் குழாயடியில் காத்து நின்றால் கால் உளைச்சல் வருவதோடு, ஒவ்வொருத்தியும் பேசும் ஊர் வம்பைக் கேட்டு மன உளைச்சலும் சேர்ந்து விடும்.

அதற்கெல்லாம் இடம் தர வேண்டாம் என்று வரிசையில் கிடக்கும் தன் குடம் குழாயை நெருங்கியதும் வரலாம் என்று வீட்டுக்குப் போனாள் பாக்யம்.

''அம்மா... காப்பி போட்டுத் தாம்மா...'' என்று உறங்கி எழுந்த சின்னவன் சிணுங்கினான்.

''ராத்திரியே சீனி இல்லேன்னு சொன்னியேம்மா... கடையில வாங்கிட்டு வரட்டுமா?'' பெரியவன் அக்கறையாய்க் கேட்டான்.

''வச்சிருக்கியா? வாங்கிட்டு வர்றதுக்கு? கடன்தான வாங்கணும்... அம்மா போய் வாங்கிட்டு வாரேன்... நீ படி...''

கையில் காசில்லை. கடன் சொல்லி வாங்க வேண்டும். கடைக்காரர் இல்லை என்று விரட்டியடித்தால் கேவலம். அந்தக் கேவலத்தை ஒருத்தி பார்த்தாலும் ஊரெல்லாம் சொல்வாளே என்று பயந்து கூட்டம் தீரும் வரை காத்திருந்தாள் பாக்யம்.

''பாக்யம்... என்னத்தா வேணும்?'' முதலிலேயே காசுக்குக் கை நீட்டினார் கடைக்காரர் பாலு.

''நூறு கிராம் சீனி கொடுங்கண்ணாச்சி மத்யானம் தாரேன்... சம்பளம் வாங்கல...''

கெஞ்சும் சிரிப்போடு கேட்டாள் பாக்யம்.

''பழைய பாக்கியைப் பைசல் பண்ணிட்டு வாங்கு... இப்பக் காசிருந்தா வாங்கு... இல்லேன்னா நடையக் கட்டு...''

பாலு அதட்டலாய் எரிந்து விழுந்ததுமே சடார் என்று கடையை விட்டு வெளியேறிய பாக்யம் வீட்டுக்கு வந்ததுமே கோபத்தை, காப்பி கேட்ட பயல்களின் முதுகுகளில் காட்டினாள்.

அடி வாங்கிய பயல்களின் சத்தலும் கதறலுமாய் காலைப் பொழுது கசகசவென்று நகர்ந்தது.

பழைய சோறும் வதக்கி வைத்த கருவாடுமாய் பயல்களுக்கு காலைக் கஞ்சி கொடுத்துவிட்டு பள்ளிக்கூடத்துக்கு விரட்டினாள்.

மூத்தவன் கணக்கு நோட்டு வாங்கப் பத்து ரூபாய் கேட்டான்.

''அம்மா நாளைக்கு நோட்டு வாங்கித் தாரேன்... இன்னைக்குப் போய்யா கண்ணு...''

''முடியாதும்மா... நேத்தே மணல்ல முட்டியங்கால் போட்டேன். இன்னைக்கும் வாங்கிட்டுப் போகலேன்னா டீச்சர் கொன்னே போடுவாங்க... பத்து ரூபா கொடும்மா... நான் நோட்டு வாங்கிக்கிடுதேன்...''


பெரியவனின் பிடிவாதம் நீடித்தது. பக்கத்து வீட்டில் போய் பத்து ரூபாய் கடன் கேட்டுப் பார்த்தாள். இல்லை என்று கைவிரித்தார்கள். எதிர்வீடு... அடுத்த வீடு... என்று வீடு வீடாய் வெட்கத்தை

விட்டுக் கேட்டும் பார்த்தாள். கிடைக்கவில்லை.

''இரக்கங்கெட்ட மிருகச் சன்மங்க... ஒரு பத்து ரூபாக் காசுக்கு நான் பெறாதவளாக்கும்... நம்பிக்கை கெட்ட நாய்ங்க...''

ஊருக்கே ஒரு லட்சார்ச்சனை செய்தபடி, மகனோடு பள்ளிக் கூடம் போய், தன் நிலைமையை ஆசிரியையிடம் சொல்லி மகனைப் பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டு

வே.குருநாதன்



வேலைக்கு ஓடினாள்.

களை எடுக்கும் பருத்திக் காட்டிலும் பத்துப் பெண்களிடம் ஊருக்குக் கொடுத்த கொடை ஒரு கோடியும் இருக்கும். மிச்சமும் இருக்கும்.

அந்நேரம் ஒருத்தி அவள் பெயர் சொல்லிக் கத்திக்கொண்டே ஓடி வந்தாள்.

''பாக்யம்... உன் வீடு தீப்பிடிச்சு எரியுது பாதகத்தீ... ஊரே கூடிக்கிடக்கு... ஓடியா சீக்கிரமா...''

சத்தமாய்ச் சொல்லிவிட்டு, சற்று நேரம் மூச்சு வாங்கினாள் ஓடி வந்தவள்.

''ஆயிரம் கண் மாரீ... அம்புட்டுக் கண்ணுமா உனக்கு அவிஞ்சு போகணும் ஆத்தா...'' என்று கத்திக் கதறியவளாய் வீட்டு



வாசலில் வந்து விழுந்தாள். முழுவதுமாய் எரிந்து முடிந்த சாம்பல் தரை, தலைவிரிகோலமாய் ஓடிவந்த அவளை வா என்று வரவேற்றது.

நெஞ்சிலும் தலையிலுமாய் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டு, புழுதியில் புரண்டழுத அவளை ஐந்தாறு பெண்கள் இழுத்துக் கொண்டு போய் எதிரில் இருந்த குடிசைக்குள் விட்டார்கள். அவள் கூச்சலும் கூப்பாடும் குறைந்தபாடில்லை.

''ஏய் கிறுக்குக் கழுதை... முதல்ல கத்துறதை நிப்பாட்டு... எப்படி தீப்பிடிச்சதுன்னு யோசிச்சியா? யாரையாவது கேட்டியா? அந்த அறிவு இருந்ததா உனக்கு?''

கிராமத்து நாட்டாண்மை கோடை இடியாய் குரல் கொடுத்தபோது, சட்டென்று அழுகையை நிறுத்தி அமைதியானாள் பாக்யம்.

''அடுப்பை எரிய விட்டுட்டு நீ பாட்டுக்குப் போய்ட்ட... அதை அணைச்சுட்டுப் போகவேண்டாமா? வீட்டை மட்டும்தான் இழந்திருக்க... கவலைப்படாத... ஊர்ல இருந்து உனக்கு வீடு கட்டித்தர முடிவு பண்ணிட்டோம்...

இந்தா ஆயிரம் ரூபா... இதைச் செலவுக்கு வச்சுக்கோ. அரிசி, பருப்பு, புளி, எண்ணெய் எல்லாம் கடைக்காரன் பாலு வச்சிட்டுப் போயிருக்கான்.''

நாட்டாண்மை அங்கிருந்து போய் விட்டார்.

கல்யாணி ஆச்சி கடைசியாய் வந்து உட்கார்ந்தவள், ''காலையில் உன் பிரச்னை என்ன?'' என்று கேட்டாள்.

''கையில பத்து ரூபா காசு இல்ல. கடையில கடன் தர மாட்டேங்கான். குழாயடியில தண்ணி கிடைக்கல. இது உன் வீட்டுக்குத்தானா? ஊர்ல ஒவ்வொரு வீட்டுக்கும் உண்டான பிரச்னைதான். கொசுக்கடி மாதிரி...


காலையில உன் கூப்பாடு கொசுக்கடிக்குப் போட்ட கூப்பாடு. உன் வீட்டுக் கொசு அடிக்க பக்கத்து வீடு வராது. உன் வீட்ல ஒரு பாம்பு வருதுன்னு வை... பத்துப் பேர் அடிக்க ஓடியாருவான்.

வீட்டுக்கு வீடு வாசப்படி மாதிரித்தான் இந்தப் பிரச்னையெல்லாம். வாழ்க்கையில நீ மட்டுமே சரிக்கட்டிச் சமாளிக்கவும் சில பிரச்னை வேணும்டி... இல்லேன்னா வாழ்க்கையில ருசி இருக்காது.

தீயில வீட்டை இழந்தது உன் சக்திக்கு மிஞ்சுன கஷ்டம்... நம்ம சக்திக்கு மிஞ்சுன பிரச்னை வரும்போது நாலு பேர் வருவாங்க. இதுதான் உலகம். புரிஞ்சுக்கடி.'' ●

நேசித்தலின் கவிதை





நேசித்தவனின் வாழ்வுரை

ஆசு, வெளியீடு : அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41, கல்யாண சுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011.

விழுங்குவது எல்லாம் நெருப்பாய் இருந்தாலும், பன்னீரை மட்டுமே உமிழ்வது எவ்வளவுக்கு சாத்தியம்? ஆசு, அதற்கு முயன்றிருக்கிறார். கசக்கத்தக்க நிகழ்வுகளையே தினம் தினம் சந்திக்கும் போதும், அதைக் கடந்து நேசித்தலின் ஆழங்களை, அழகான கவிதைகளாக மலர்த்தியிருக்கிறார். சுருக்கென்று தைக்கின்ற சொல் சூட்சுமங்கள், மனத்தில் பதியம் போடுவதை வாசிப்பவர்கள் உணராதிருக்க முடியாது. 'வலைகள், துரோகங்களால் பின்னியவை. மீன்களுக்குத் தெரிவதில்லை. நிலத்தில் இது வேறுமாதிரியானது.'

இலக்கியச் சித்திரங்களும் கொஞ்சம் சினிமாவும்

முனைவர் கு.ஞானசம்பந்தன் வெளியீடு : விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை - 600 002.

அறிமுகம் அவசியப்படாத பேராசிரியர் முனைவர் கு.ஞானசம்பந்தன். தமிழில் ஆழங்கால் பட்டவர். கடினமான செய்திகளையும் எளிய முறையில் நகைச்சுவை ததும்ப விவரிப்பது இவருக்கே உரிய கலை. கல்லூரி மாணவர்களோடு மதுரையில் இருந்து சுற்றுலா கிளம்புகிறார். குற்றாலம், தென்காசி, கழுகுமலை... என்று நீள்கிறது சுற்றுலா. இந்த உலாவோடு, அந்தந்த இடங்களைப் பற்றிய இலக்கியச் செய்திகள், வரலாற்றுத் தகவல்கள், திரைப்படங்கள் தொடர்பான செய்திகள்... என்று கருத்துகள் கலந்து மலர்கின்றன. சத்தி முற்றப் புலவரையும், பராக்கிரம பாண்டியனையும் காண்பது மட்டுமல்ல; 'கடலுக்குள் முட்டி நிற்பதால் முட்டம்' என்று இடத்துக்கான பெயர்க் காரணம் வரை சுவைபடப் படிக்க வைத்திருக்கிறார். நடையும், நகைச்சுவையும் படிக்கப் படிக்கப் புத்துணர்ச்சி அளிக்கின்றன.

- ராகவன்

ஆஸ்திரேலிய மண்ணில் இந்திய மாணவர்களுக்கு எதிரான நிறவெறித் தாக்குதல்கள் தொடர்வதால் அங்கே பிள்ளைகளை மேற்படிப்புக்கு அனுப்பலாமா, வேண்டாமா என இங்கிருக்கும் பெற்றோர்கள் குழப்பத்தில் இருக்கின்றனர்! மேலும் ஆஸ்திரேலியப் படிப்பைப் பாதியிலேயே விட்டுவிட்டு இந்தியாவுக்கே திரும்பி வந்திடலாமா என அங்கிருக்கும் மாணவர்கள் தவித்துக் கொண்டிருப்பதாக பல்வேறு ஊடகங்கள்



அனல் கக்கும் ஆஸ்திரேலியா!

செய்திகள் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் ஆஸ்திரேலியாவில் தங்களது மேற்படிப்பை முடித்துவிட்டு வந்திருக்கும் கவிஞர் வைரமுத்துவின் மகன்களான மதன் கார்க்கி, கபிலனைச் சந்தித்தோம்...

"ஆஸ்திரேலிய மாணவர்களுக்கு, இந்திய மற்றும் சீன மாணவர்கள்மீது எப்போதுமே ஒரு கோபமும் வெறுப்பும் அடிமனத்தில் இருந்துகொண்டேதான் இருக்கின்றன. ஆனால், அது இந்தளவுக்கு வெளியில் தெரியவில்லை'' என்கிறார் 2002 முதல் 2006 வரை ஆஸ்திரேலியாவில் பி.ஹெச்.டி. முடித்துவிட்டு வந்திருக்கும் மதன் கார்க்கி.

''ஆஸ்திரேலிய மாணவர்களின் கோபத்துக்கும், வெறுப்புக்கும் மூன்று காரணங்களை முக்கியமாகக் கூறுவேன். தங்களது மண்ணில் அயல்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் வந்து மேற்படிப்பைப் படித்து முடித்துவிட்டு அங்கேயே வேலையிலும் அமர்வதை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தங்களது வேலை வாய்ப்புகளை அயல் நாட்டு மக்கள் தட்டிப் பறித்துவிடுவதாகவே கருதுகிறார்கள். அதேபோல, ஆஸ்திரேலியா மாணவர்களில் பலர் பத்தாம் வகுப்பு அல்லது பன்னிரண்டாம் வகுப்போடு தங்களது படிப்பை நிறுத்திவிட்டு ஏதோ ஒரு வேலையில் சேர்ந்துவிடுவார்கள். அதனால் ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகங்களில் வேற்று நாட்டு மாணாக்கர்களைத்தான் அதிகம் பார்க்க முடியும். நான் படிக்கும்போதுகூட எங்களது வகுப்பில் 30 மாணாக்கர்கள் இருந்தார்கள். அதில் இந்தியாவிலிருந்து 6 மாணவர்கள், சீனாவிலிருந்து 14 மாணவர்கள் மற்றும் பிற ஆசிய நாடுகளிலிருந்து வந்த மாணவர்கள் இருந்தனர். அந்தக் குழாமில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர் ஒரே ஒருவர்தான்.

இந்தியர்களும், சீனர்களும் ஆஸ்தி



கபிலன்



கார்க்கி



அயல்நாட்டு மாணவர்கள் ஆஸ்திரேலியாவில் படித்துவிட்டு அங்கேயே பதவிகளில் அமர்வதை அவர்களால் சகிக்கமுடியவில்லை!

ரேலிய அரசியலிலும் நுழைந்து வருவது அவர்களுக்குள் ஒரு பயத்தைக் கிளப்பியுள்ளது. இப்படி வெளிப்படையாக இந்திய மாணவர்களுக்கு எதிராக வன்முறை வெடித்தது கிடையாது. பொதுவாக ஆஸ்திரேலியர்கள் மிகவும் மென்மையாகவும், நட்புடனும் பழகக் கூடியவர்கள்தான்'' என்கிறார்.

கார்க்கியின் சகோதரரான கபிலன் சமீபத்தில் இரண்டு வருட ஆஸ்திரேலிய மேற்படிப்பை முடித்துவிட்டு இந்தியா திரும்பியுள்ளார். ''ஆஸ்திரேலிய ஊடகங்கள் எப்போதுமே தங்களது நாட்டில் நடக்கும் நல்ல விஷயங்களை மட்டுமேதான் பொது மக்களுக்கு எடுத்துரைக்கும். ஒரு கிரிக்கெட் மாட்ச்சில் ஆஸ்திரேலியா தோற்றுவிட்டால்கூட அதை அந்த ஊடகங்கள் சொல்லவே சொல்லாது. இந்திய மாணவர்களுக்கு எதிராக நடக்கும் தாக்குதல்களைப் பற்றிக் கூட, அங்கிருக்கும் எங்களது ஆஸ்திரேலியத் தோழர்கள் இந்திய இணைய தளங்கள் மூலமாகத்தான் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்து நான் படிக்கும் காலகட்டம் வரை இப்படி நிறவெறித் தாக்குதல் என்பது அங்கே அரங்கேறவில்லை. ஆஸ்திரேலியா மேற்படிப்புக்கு ஏற்ற ஓர் இடம்தான்'' என்கிறார் கபிலன்.

- நளினி சம்பத்குமார்


படிப்பு 10 கி.மீ.

'பயம் அறியான்' படத்தின் மூலம் நாயகியாக அறிமுகமாகும் புதுமுகம் தேவிகிருபா. அவருடன் ஒரு சந்திப்பு.

● **உங்களைப்பற்றி?** ''நான் பிறந்தது சென்னை. வளர்ந்தது தாய்லாந்து தலைநகர் பாங்காங். படிப்புக்கும் எனக்கும் 10 கிலோ மீட்டர் தூரம். அதனால் நடிப்பு மீது என் கவனம் திரும்பியது. பாங்காக்கில் சிறிது காலம் சினிமா டெக்னாலஜி படித்தேன். அத்துடன் தமிழ், ஆங்கிலம் மொழிகளில் உருவான 'அச்சு வேலி' என்ற இசை ஆல்பத்தில் நடித்தேன். அந்த ஆல்பம் ஆஸ்திரேலியா, தாய்லாந்தில் மிகவும் பிரபலம்.'' ● **'பயம் அறியான்' பட வாய்ப்பு...?** ''என்னுடைய உறவினர்களைச் சந்திக்க அடிக்கடி சென்னை வருவேன். அந்த நேரத்தில் புகைப்படக் கலைஞர் ஸ்டில்ஸ் ரவி அறிமுகம் கிடைத்தது. கைராசிக்காரரான அவர் எடுத்த புகைப்படம் 'பயம் அறியான்' இயக்குநர் பிரதீஷ் கையில் கிடைக்க, ஹீரோயின் வாய்ப்பு.'' ● **உங்கள்ரோல்?** '' 'பொல்லாதவன்' கிஷோர் ஜோடியாக நடிக்கிறேன். ரொம்பவும் துணிச்சலான அந்த ரோல் எனக்கு நல்ல பெயர் பெற்றுத் தரும். புதுமுக நடிகைகள் நடிக்காத அந்த ரோல் சவாலாக இருந்தது.'' ● **விரும்பும் ரோல்?** ''நடிப்பை வெளிப்படுத்தக்கூடிய எல்லா ரோலிலும் நடிப்பேன். குறிப்பாக சைக்கோ; வில்லி; காமெடி!'' ● **தனித்திறமை?** ''ஃபேஷன் கலை தெரியும் என்பதால் என்னுடைய உடைகளை நானே வடிவமைப்பேன்.'' ● **குடும்பம்?** ''அப்பா - அரசு அர்ஸ் (கார்மெண்ட் பிஸினஸ்), அம்மா - பிரதோஷி (குடும்பத் தலைவி), அண்ணன்கள் - கவி அர்ஸ், ரவி அர்ஸ் இருவரும் மருத்துவர்கள். தம்பி - பிரதோஷ் கண்ணா, டிஎஃப்.டி.'' ● **வெறுப்பது?** ''வாழ்க்கையில் நடிப்பவர்கள்.'' ● **காதல்?** ''டைம் வேஸ்ட்.'' ● **பலம்?** ''என் கண்கள்.'' ● **பலவீனம்?** ''எதுவும் இல்லை.'' ● **தத்துவம்?** ''என்னால் முடியலைன்னா யாரால் முடியும்?'' ● **கடவுள்?** ''சிவன்'' ● **எடை?** ''ஐம்பத்து ஒன்று.'' ● **கேரக்டர்?** ''சாஃப்ட்'' ● **ஹீரோ?** ''ஷாருக்'' ● **ஹீரோயின்?** ''சிம்ரன்'' ● **கனவு வேடம்?** ''எதுவும் இல்லை.'' ● **செல்லப் பிராணி?** ''வெள்ளை எலி.''



- விஜயன்


NOW ON SALE
Anniversary Issue
Budding Bards Special!
FOCUS LIGHT
WHIZ INTO SCI-GALAXY
22
Fun-Filled for You
Rs.10/- Only
Who is the 'Gokulam' IPL Hero?
GOKULAM
July 2009
THE Magazine for Children

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.